பதிவு எண் 2041

தனிப் பிரதி விலை { உள் நாடு 1 அணா
வெளி நாடு 1½ அணா

# குடி அரசு


வருட சந்தா முன் பணம் ... ரூ 3—0
6 மாத சந்தா ,, ... ரூ 1—12
வெளி நாட்டிற்கு ,, ... ரூ 4—0

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 3 | ஈரோடு, பிரபவ ஞு தை மீ 2உ (15—1—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 38.

இனும்! இனும்
முனையில் இரிடியம் உள்ள 14 Kt.
தங்க நிப்பு போட்ட Self-filling
பௌண்டன்பேனா இனும்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனுமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷ உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

அநேக காக்ஷிகளில், பொன், வெள்ளி மெடல் பெற்ற


## விதைகள், செடிகள்.

3-வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுபழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேட்லாக் இனும். இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள் :—

20 சாம்பிள் பாக்கெட் ரூ. 2—0—0
10 ,, ,, ரூ. 1—4—0
காட்டுக் காய்கறி 20 ரூ. 2—8—0

ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட்கர்சரி தோட்டம், சேலம்.

கையில் கட்டும் ரோல்டு கோல்டு ஸ்பிரிங் செயினும், பௌண்டன் பேனவும் இனும்.




நூதனமாக வாவமைந்த எங்களின் 22 காரட் ரோல்டு கோல்டு கை கெடியாரம், 5 வருஷம் உத்திரவாதம் புதுமாதிரி பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான காலத்தைக் காட்டும்.
விலை ரூ. 6—8—0. தபால் கூலி வேறு.

லண்டன் வாட்ச் அவுஸ்.
3, பார்க் டவுன், (தா) சென்னை.

## "குடி அரசு"
### நேயர்களுக்கு
## ஓர் வேண்டுகோள்.

நிருபர்கள் "குடி அரசு" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய கட்டுரைகளையும் செய்திகளையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் காகிதத்தின் ஒருபக்கத்தில் இடது ஓரத்தில் ஒரு அங்குல இடம் (மார்ஜின்) விட்டு வரிகளுக்கு இடையில் குறைந்தது அரை அங்குல இடம் விட்டு எழுதியனுப்புவதுடன் தங்கள் முழுவிலாசத்தையும் தெரியப்படுத்த வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தனிப்பட்ட நபர்களைக்குறித்து அனுப்பப்படும் கண்டனங்களும் ஊர்வம்பு விஷயங்களும் பிரசுரிக்கப்படமாட்டா. பிரசுக்கப்படாத விஷயங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா.


சந்தாதாரர்கள் எழுதும் கடிதங்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதக் கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் (ரிஜிஸ்டர்) நம்பரைச் சந்தா நெம்பராக நினைத்து அந்நெம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். சந்தா நம்பர் என்பது ஒவ்வொரு விலாசத்துடன் காணப்படும் நம்பரேயாதாலால் அந் நம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்வித ஆவலாதியும் கவனிக்கப்படமாட்டாது.

சந்தாதாரர்கள் தங்கள் சந்தா காலாவதியடைவதற்கு முன் அடுத்த வருஷத்திற்கு பத்திரிகை அனுப்பவேண்டாமென்று எழுதாத வரை அடுத்த வருஷத்திற்கும் பத்திரிகை அனுப்பும்படி கேட்டுக்கொண்டதாகவே வைத்துக்கொண்டு பத்திரிகை வி. பி. யில் அனுப்பப்படும். ஆதலால் சந்தா நேயர்களின் சம்மதத்தின் பேரிலேயே அனுப்பியதாக ஏற்பட வி. பி. யை கௌரவிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று



அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—8—0.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி டி. மதராஸ்.

இனும்! இனும்!!
சாரவிவேகி சதானந்தன் சம்பாஷணை 'கிழவன் குமாரனுன்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனுமாக அனுப்புவோம்.

ஸ்ரீ சர்து இரத்தினசற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை.

## கணித சோதிடம்

பாகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று லகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலையாவது கடிதம் எழுதும்நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

இனம்! இனம்!! இனம்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப் பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனம்.

ஸ்ரீ கோக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

# சிந்தாமணி லேஹியம்.

(அயகாந்த செந்தூரம்)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனானி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அதன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை ஏராளமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியனவும் உறவாக்கி, கை பாகம், செய்பாகம் தவறாமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சீதோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

## இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித் துவிடும்.
2. தளர்ந்து துவண்டு மெதுவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஓடுவாதம், அஜீர்ணம் முதலியவையும் காற்றாய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்றதென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வீ. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்ற விரும்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.

# தேக ஆரோக்கியத்தைக் கவனியுங்கள்.

குளிர் காலத்தில் தேக ஆரோக்கியத்தைக் காப்பாற்றுவது மிகவும் இன்றியமையாதது. குளிர்கால உபயோகத்திற்கென்றே நானாவிதமான கம்பளிப் போர்வைத் தினுசுகள் ஏராளமாய் ஸ்டாக் செய்திருக்கிறோம். குளிர் காலம் ஆரம்பித்து விட்டதால் ஆர்டர்கள் குவிகின்றன. நீங்களும் உங்கள் ஆர்டரை அனுப்பிவிடுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நெ. | 1. | ஜெர்மன கம்பிக்கரைப் போர்வை | 1 | ரூ. | 9—8—0 |
| நெ. | 2. | பாரிஸ் பூக்கரைப் போர்வை | 1 | ரூ. | 10—8—0 |
| நெ. | 3. | ஷை உயர்ந்தது பெரிய சயிஸ் | 1 | ரூ. | 16—0—0 |
| நெ. | 4. | காஷ்மீர் கை நெசவுப் போர்வை | 1 | ரூ. | 12—0—0 |
| நெ. | 5. | ஜெர்மன் மேகவர்ணப் போர்வை | 1 | ரூ. | 15—0—0 |

கே. எஸ். முத்தையா அன் கம்பெனி, மதராஸ்

K. S. MUTHIAH & Co, Export Dept., Post Box 99. MADRAS.

# ஆநந்த குணபோதினி

இரண்டாம் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இது வரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளையொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000-சந்தாதார்கள் உள்ளது. வருட சந்தா ரூ. 1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இனம். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!! புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

# முத்துமாமா.

இரண்டாம்பதிப்பு.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் 4½ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்


முன் விலை ரூ. 14 இப்பொழுது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்தஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. எழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras

## Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போடோ பிடிக்கலாம். போடோவின் அளவு 3½"x 2½" ஆகும். இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்

# நீதி இலாகாவும் நிர்வாக இலாகாவும்

## வைதிக இலாகாவின் வழியே போகிறது.

### III

கைவல்ய சாமியார் எழுதுவது.

மேனாட்டார்களை எந்த விஷயத்திற்கும் உபமானம் காண்பிப்பது நம்மெல்லோருக்கும் வழக்கமாகிவிட்டது. அவர்களிடம் விசேஷமிருப்பதாகவும் அவர்களை உபமானம் காட்டுவதாலே தான் சொல்லும் விஷயங்கள் மற்றவர்களுக்கு ஞாயமாகப்படும் என்று தோன்றிவிட்டபடியாலும், மேல்நாட்டார்களும் ஒத்துக்கொள்ளுகிறார்களென்று சொல்லப்படுகிறது. இதையே கனம் வி. வி. சீனிவாசய்யங்கார் 'பூர்வீக நாகரீகத்தை வெள்ளைக்காரர்கள் மெச்சுகிறார்கள்' என்று சொல்லுகிறார். இவர் பாப்பானின் ஆதிக்கமான வழக்கங்களை எல்லாரும் நம்ப வெள்ளைக்காரனை உபமானம் கூறுகிறாரே அல்லாமல் வெள்ளைக்காரன் எதை மெச்சுகிறான்? எதற்காக மெச்சுகிறான்? எப்படி மெச்சுகிறான்? என்பதை விவரமாக சொல்லாமல் விட்டுவிட்டார். நாமும் வழியே போகும்போது, மாத்தடியில் நாணல் தட்டுகளால் கூரைபோட்டு கூட்டத்தோடு கோழி நாய் வளர்த்து, குழந்தை பெற்று கூட்டம் கூடி ஜாதிக்கட்டும் பஞ்சாயத்து தீர்ப்பும் கூறி வாழும் கூட்டத்தாரைப் பார்த்து நம் வாழ்க்கையின் பெருமைகளை உள்ளடக்கி அவர்களையும் மெச்சுகிறோம். இதைப்போன்ற மெச்சுதல் வெள்ளைக்காரரிடம் இருக்கலாம். வெள்ளைக்காரன் மெச்சும் மெச்சுதலுக்கு நம் மூடக்கொள்கைகள் காரணமாக விருக்காது. நாட்டின் அமைப்பையும், தேச வளப்பத்தையும், பழங்காலத்துச் சின்னங்களையும் கண்டு யாத்திரீகர்கள் மெச்சுவது வழக்கமே. ஆனால் இந்த நாகரீகமான நதி பல வாய்க்கால் வழியே தன்னுள் வந்துசேர்ந்த சாஸ்திரக் குப்பை கூளங்களால் அடைப்புண்டு போவதைக் கண்டு யாரும் மெச்சவில்லை. மனிதன் மனிதனைத் தொட்டால் தீட்டு வந்துவிடுமென்று நாம் பண்ணும் கொடுமையை யாரும் மெச்சவில்லை. இந்து நாகரீகம் மிகவும் ஸ்வதந்தராபிமானம் இருப்பதாக டம்பம் பேசுகிறதே ஒழிய நடையில் முக்காலந்தொட்டுக் கொடுமையான அடிமைத் தன்மையை இது மனுஷ்ய சமூகத்தில் புகுத்தியிருப்பதைக் கண்டு யாரும் மெச்சவில்லை. மானுஷ்யம் பொதுஜன உத்தம லக்ஷியங்களைப் பாவச்செய்தல முக்கியமில்லை என்ற எண்ணத்திலிருந்து ஜாதியின் திறமையை வளர்ப்பதாகிய கல்நெஞ்ச ஸம்பாதாயத்தைக் கண்டு யாரும் மெச்சவில்லை. ஜனம் ஜீவனுதலால் அதற்கு ஆத்ம பிரகாசம் வேண்டும். கல்வி, கலை, கோவில் முதலியன ஜனத்தின் சிருஷ்டிகளாம். இவை ஒரே விருந்தில் பலவித உணவுகள்போல உண்மையை அறிந்து இன்பமடைவதில் வெவ்வேறு சுவை தருகின்றன. மானுஷிய லோகத்தை உயிர்வளமுடையதாக்கும் பலவிதங்களில் அழகுபடுத்தும் இதை நம் தேசம் தடுப்பதைக் கண்டு யாரும் மெச்சவில்லை. ஜனம் தர்மவிதியைத் தெய்வீகமாகவெண்ண அந்தத் தர்ம விதியை வருணாஸ்ரமக் கொடுமையால் காற்றிலே தூற்றி ஜனத்தைக்காட்டிலும் ஜாதியே பெரிதென்ற கொள்கை பலவிதமான தந்திரங்களால் ஜனங்களுக்குக் கற்பிக்கப்படுவதைக் கண்டு யாரும் மெச்சவில்லை. அறிவினால் உலகமுழுதும் ஒன்று பட்டு கால தேசங்களால் நேரிடும் பேதங்களெல்லாம் நீங்கி விடுமென்ற பெரும் பயன் ஒரு புறமிருக்கட்டும். எந்தமனித ஜந்துவும் கல்வியால் உண்டாகும் பெரும் மகிழ்ச்சி பெறாத வண்ணம் எந்தக்காரணம் பற்றியும் தடுக்கும் பெரிய அலம்பாவிதத்தைக் கண்டு யாரும் மெச்சவில்லை. உயர்ந்த ஜாதியார் தாழ்ந்த ஜாதியாருக்கு ஒன்றும் கற்பியாமல் அவர்கள் கற்கவரும் கல்விக்குத் தடை ஏற்படுத்தித் தாங்கள் மாத்திரம் கல்வி கற்றுத் தங்கள் பிழைப்பிற்கு வேண்டிய பலவழிகள் ஏற்படுத்திக்கொண்டு தங்கள் வீடுகளை ஒழுங்கு பண்ணிக் கொள்வதற்கும், ஐரோப்பாவின் முன் தங்களை சேர்த்தியும் நாகுக்கு முள்ளவர்களாய்க் காட்டிக் கொள்வதற்குமே சகல விதமான முயற்சிகளும் செய்வதைக்கண்டு யாவரும் மெச்சினதில்லை. விஸ்தாரமான ஒரு தேசத்தில் தேகக்கட்டும் வீரமுமுடையவர்களின் ஆண்மையை முழுதுமே நசுக்கி அந்த தேசத்தை நான்கெல்லையிலும் பக்கவாத நோய்கண்டதுபோல் செய்துவிடும் பண்டைகாலத்திலும் இக்காலத்திலும் உயர்ந்த ஜாதிக்காரருக்கும் அவருடைய சாஸ்திரத்திற்கும் இருக்கும் பெருமையைக்கண்டு எந்த மேனாட்டாரும் மெச்சினதில்லை. இப்படிப் பட்டவர்களை வருணாஸ்ரம தயவின்கீழே விட்டுவைக்க இவர்கள் சொல்லுவதானது மேன்மையான தானியமுளையில் எருமைக் கூட்டத்தை மேய்ப்பதற்குச் சமானம். வயலுக்குடையான் மாரடித்துக் கொள்ளுகிறான். எருமைகளை ஓட்டுவோன் கொஞ்சங் கூட முளை மிச்சமிருந்தென்று சொல்லி மகிழ்ச்சியடைகிறான். இதைக்கண்டுயாரும் மெச்சமாட்டார்கள். மெச்சக் கூடியது பின்னால் ஒன்று இருக்கிறதென்பதை மட்டும் அவர்களுக்குச் சொல்லுகிறேன். மேற்கு நாகரீகம் பரவி வருகிற இக்காலத்தில் எல்லா வகையாலும் ஆசைகளை அனுபவிக்க உண்டாகும் விரோதங்களும், ஆசைகளும் ஜனசமூகமுழுவதும் பரவிவருகிறது. இதிலும் பெரும் பகுதி பார்ப்பாரே எப்பொழுதும் சொந்த மாக்கிக்கொள்ள சாஸ்திரத்தில் பாதி உண்மைகளையும் பொய்களையும் ஸ்ருஷ்டி செய்வதனாலும் இதர ஜாதியாரை எப்போதும் இடைவிடாமல் பழித்து அவர்களிடம் விரோத எண்ணங்களை வளரச் செய்து அந்த யெண்ணத்திற்குப் பரிகாரம வருணாசிரம் கட்டி நிறுத்துவது மற்ற ஜாதிகளுக்குத் தீயவிபத்தாய் வருகிறது. அது மானுஷீகத்தின் ஊற்றிலே விஷத்தைக் கலந்தது போலாகும். பார்ப்பார ஜாதிக்கெல்லாம் அசாரத்தனமான ஸ்வார்த்த நாட்டமே சர்வசாமான்யமான பெருந்தருமமென்று காட்டுவது போலாகிறது. பிறசமூகங்களுக்கு நீங்கள் விளைவிக்கும் தீமை உங்களையும் சூழாதென்று கணப்பொழுதும் கினையாதீர்கள். உங்கள் மனதைச் சுற்றி நீங்கள் விதைக்குந் தீமைகள் உங்களுக்கு கோட்டைகளாகு மென்று எண்ணவேண்டாம். ஒரு ஜாதி முழுமையும் தானே உயர்வென்ற அசாதாரண கர்வ சிந்தையில் புகுதலும், தர்மத்திற்கிளகாத கல்நெஞ்சமும் கொடுமையால் வந்த செல்வமும் பெருமை என்று கருதச்செய்தலும், வீழ்ந்திருக்கும் ஜாதியார் விஷயத்திலே அவமானத்தை எந்தக்காலமும் நிலை நிறுத்தப்பார்த்தலும் இவையனைத்தும் நம் தேசத்து உயர்ந்த ஜாதியார்கள் என்பவர்கள் விட்டு விட்டால் எல்லாரும் மெச்சுவார்கள்; நம் நாடும் நல்ல நாடாகும்.

பின்னும் வி. வி. சீனிவாசங்கார் அவர்கள் சொல்லுவதாவது, "கெர்ப்பதானத்திலிருந்து முடிவு வரையிலும் பெரியவர்கள் பாப்பாருக்கு ஏற்படுத்தின கர்மங்களின் ரகசியமென்ன? அதன் ஏற்பாடென்ன? எவ்வளவு அற்புதமாக இருக்கிறது பாருங்கள்!" என்கிறார் வாஸ்தவமே. பாப்பாருடைய கெர்ப்ப ஸ்தானத்திலிருந்து சாகும்வரையிலும் செத்த பின்னும் உள்ள சடங்குகளை சாஸ்திர காரண காரியங்களுடன் பின் வேறு விஷயத்தில் எழுதுவோம். இங்கு சிலவற்றை மட்டும் சொல்லுகிறேன். மதக்கோட்பாட்டிலுள்ள சர்வ பிரயத்தினமும் தாம் பரிபூரணமாவதற்கும், கடவுளை யடைவதற்கும், கடவுளைக் காண்பதற்கும் இடைவிடாப் பிரயத்தனத்திற்காக பாப்பானுக்கு கர்மங்கள் விதித்ததென்று ஒத்துக் கொண்டாலும், வக்கில் வேலைக்கும், ஜட்ஜி உத்தியோகத்திற்கும், இங்கிலீஷ் நாகரீக சுகபோகங்களுக்கும் கர்மங்கள் விதிக்கவில்லை என்பதை இந்து சாஸ்திரம் படித்தவன் ஒத்துக்கொள்ள வேண்டும். பிர்மசரிய விரதத்தைப் பூரணப்படுத்தி யோகசித்திக்குவேண்டிய விவகாரம் தவிர மற்றெல்லா லோக விவகாரங்களையும் விட்டு அதில் சித்தியடைந்து, சாஸ்திரக் கருத்தை அனுசரித்து உலக உபகார நிமித்தம் ஒரு புத்திரனை உண்டுபண்ணலாம் பிராமணன். உலக உபகாரத்திற்குத் தானமாகப் புத்திரனைத் தருவதால் அந்த கெர்ப்பத்திற்குத் தான் கெர்ப்பதானமென்று பெயர். அந்தப்பிராமணன் குடும்ப ஜாதிகளின் நலத்தைக்காட்டிலும் உலக நன்மையின் உயர்ந்த கடமைகளே மேலென்று கைக்கொண்டமையால் அவரை உயர்ந்தவரென்று நம் தேசம் ஒத்துக்கொண்டது. உயர்விற்குக் காரணமாயிருந்த உத்தம குணத்தை விட்டுவிட்டு அந்தப் பேரால் மற்ற ஜனங்களை ஏமாற்றி கீழாக நினைத்துத் தங்கள் ஜாதி குடும்பம் பிழைப்பதற்கே காப்பிக்கடை பாப்பானும், கள்ளுக்கடை பாப்பானும், பங்களாப் பாப்பானும், கப்பலேறி கண்டதைக்கொண்ட பாப்பானும், புது வருஷத்துப் புதுமாதிரி மோட்டார் வாங்கப் பணங்காணும் பாப்பானும், வக்கீல் பாப்பானும், ரூபவதியைக் காண்பித்துப் பணம் வாங்கிக்கொண்டு ரூபமில்லாத வயசான நோயுற்ற ஆசையில்லாத பெண்ணைக் கொடுப்பதுபோல, பெரிய வக்கீல் என்னும் பேரைக்காட்டிப் பணம் வாங்கி அனுபோகமில்லாத பழகவந்த மகன் மருமகன் இவர்களைக் கோர்ட்டுக்குப் போகச்சொல்லும் சில வக்கில் பாப்பானும், இவர்கள் முன்னிலையில் ஹைக்கோர்ட்டு ஜட்ஜியும் லா மெம்பரும் வருணாஸ்ரம தர்மம் பேசி பாப்பார கர்மங்களின் தத்துவம் பேசுவதும் சாஸ்திரத்திற்குப் பாவமும் வஞ்சனையுமாகும். பாடறியாப் பணம் வரவும், பின்னும் பின்னும் பண வரவிற்குப் பல கர்மம ஏற்படுத்தவும், அது நிலைக்க பல சாஸ்திரமெழுதுவதும், அதிலுள்ள பகல் வேஷம் தெரியாமலிருக்கப் படிப்பைத் தடுக்கவும், இத்தனையும் தப்பிப் படித்தவனைப் பகைக்கவும், பகையை முடிக்கப் பல வஞ்சகங்களைச் செய்யவும், வஞ்சனையைச் சொன்னால் நம் கூட்டத்து குப்பை கூளங்களுக்குக் கூலி கொடுத்துத் திட்டவும், அத்தனைக்கும் தப்பினால் நீதிபதிகளை முன்னிறுத்திப் பூர்வீக இந்து நாகரீகத்தைக் காட்டவும் செய்கிறார்கள். இந்த நீதிபதிகள் பூர்வீக மிருந்ததும், இப்பொழுதிருக்கும் நாகரீகமும் உங்களுக்குத் தெரியும். அவர்கள் பிரசங்கத்திற்குப் பின் பூர்வீக நாகரீகத்திற்கு எவ்வளவு தூரம் போயிருக்கிறார்கள் என்பது பட்டணத்தவர்களுக்குத் தான் தெரியும். அதில் பிரசங்கத்தைக் கேட்ட ஒருவரைப் பூர்வீக நாகரீகமான மத்தியானப் பிச்சைக்குப் போகவிடாமல், 2000 ரூபாய் சம்பளமான சிவில் ஜட்ஜி உத்தியோகத்திற்கு அனுப்பின. பாப்பார கர்மங்களின் ரகசிய' வித்தை பட்டணமெல்லாம் தெரியும். அதில் எங்களுக்குக் கவலையில்லை. ஹைக்கோர்ட்டு ஜட்ஜியின் பிரசங்கப் பிரகாரம் முகத்தில் வசீகர வித்தியாசத் தோற்றம் காணமலிருக்கவேண்டு மென்பதில்தான் 'குடி அரசு' க்குக் கவலை.

வி. வி. அய்யர் அவர்கள் சொல்லும் பாப்பாரக்கிரியை அழகாகவும் அதிகாரகவும் இருப்பதில் ஆச்சரியமில்லை. அவையனைத்தையும் தங்களுக் [illegible]

இதன் தொடர்ச்சி 18 பக்கம் பார்க்க

# ஆலய மேற்பார்வை.

கோவை ஸ்ரீமான் C. M. ராமச்சந்திரம் செட்டியார் B. A., B. L., எழுதுவது.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்ற பழஞ் சொல்லில் கட்டளை இட்டபடி நமது மகஸ்தர்கள் இருந்த ஒவ்வொரு ஊரிலும் கோயில்களை அவர்கள் வழிபடுவதற்காகக் கட்டி இருந்தார்கள் அவ்விதக் கோயில்கள் நமது நாட்டின்கண் ஆயிரக்கணக்காக இருக்கும். அவைகள் எவ்விதமாகப் பரிபாலித்து வரப்படுகின்றன என்ற விஷயம் பல நாட்களாக அறிவாளர்கள் விசாரித்துக்கொண்டு வருகிறார்கள். அவைகளின் பரிபாலனம் நாம் விரும்பத்தக்கபடி அவ்வளவு ஒழுங்காக இருக்கவில்லை என்பது பொது ஜன அபிப்பிராயம். பரிபாலனத்தின் ஒழுங்கீனமும் அதனை ஒழுங்காகச் செய்த முயற்சியும் தற்காலத்தில் மாத்திரமேயன்றி, அநேக நூற்றாண்டுகளாகவே இருந்து கொண்டு வந்திருக்கின்றன என்பதற்கு சிலாசாசன ஆராய்ச்சி சாட்சியாகும். அப்படிப்பட்ட நிலைமைகளும் சீர்திருத்த ஏற்பாடுகளும் நமதுதேசத்து ஆலயங்களில்மட்டுமேயன்றிப் புராதன, ரோமன், கிரீக்கர், ஆங்கிலர் முதலிய நாட்டார் முதலான மேற்கத்திய நாட்டார் கோயில்களின் பரிபாலனத்திலும் இருந்திருக்கின்றன.

ஆதிகாலத்தில் நமது தென்னாட்டில் கிராமங்களில் பஞ்சாயத்துச் சபைகள் இருந்தன. அவைகள் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பெரிய மனிதர்களைக் கொண்டவைகள். அவைகளாலே ஊரில் ஏற்படும் சகல விவகாரங்களையும் விசாரித்துத் தீர்ப்புச் செய்வார்கள். ஊரில் ஏற்படும் சகல நியாயங்களையும் தீர்ப்புச் செய்வதைப் போலவே அவ்வூர்க் கோயில் பரிபாலனத்தையும் பார்த்துக்கொண்டு வந்தார்கள். சிறு கிராமமாக இருந்தால் ஒரே சபையார் எல்லாத் தொழிலையும் பார்ப்பார்கள். அல்லது பெரிய கிராமமாக இருந்தால் கோயில் பரிபாலனத்துக்குத் தனியே ஒரு சிறுசபையார் இருந்து காரியங்களை நடத்துவார்கள். சதுர் வேதமங்கலம் போன்ற பெரிய ஊர்களிலே வேதம் தெரிந்தவர்களைத் தெரிந்தெடுப்பார்கள்.

வேதம் தெரிந்தவர்களும் நிலம் கொண்டவர்களும் வீடு உள்ளவர்களும 35 முதல் 70 வயது வரை உள்ளவர்களுமே பஞ்சாயத்துக்கு யோக்கியமானவர்கள். பஞ்சமாபாதகம் செய்தவர்களானால் அவர்கள் விலக்கப்படுவார்கள். இப்படிப்பட்ட விதிகளை அநுசரித்துச் சரிவர சபைகள் பரிபாலனத்தை ஏற்றுக்கொண்டு நடத்திவந்ததாக உத்தரமேரூர் தஞ்சை முதலிய கோயில்களின் கல்வெட்டுகளில் காணப்படுகின்றது.

அவ்வித ஊர்ச்சனங்கள் கோயில்களைப் பரிபாலனம் செய்யும்போது அக்கோயில்களுக்கு விடப்பட்ட தேவதாயம் பிரமதாயம்தானங்கள் ஆகிய பூமிகளை அவர்கள் மேல் பார்வை பார்த்து வந்தார்கள். அரசன், வணிகன், தொண்டர்கள் இவர்கள் கோயிலுக்கு விடக்கூடிய நிலங்களைச் சரியாக அளந்து சிலைகளில் சாசனங்கள் எழுதுவித்து வரவுகளை வாங்கிச்சேமித்துச் செய்யவேண்டிய செலவுகளைச் சரிவரச் செய்து, பரிபாலனத்தைச் செவ்வையாக நடத்திவந்தார்கள். கோயில் காரியங்களுக்குத் தானங்கள் பெற்ற சிப்பந்திகள் அக்காரியங்களைச் செவ்வையாகச் செய்யாவிட்டால் அவர்களைத் தக்கபடி தண்டித்து வந்தார்கள். இவ்விதம் சகலவிதமான விதிகளை ஏற்படுத்திக் கிராமச்சனங்கள் ஒழுங்காக நடந்து வந்தும் சிற்சில காலங்களில் ஒழுங்கீனங்கள் நடந்து வந்ததாகவும் அவைகளைத் திருத்தும்பொருட்டு அரசன் தக்க மேலதிகாரிகளை நியமித்து அவ்விதம் குற்றம் செய்தவரைத் தண்டித்தும் வந்ததாகக் கல்வெட்டுகளில் தெரிகிறது. தஞ்சை கோயில் கல்வெட்டுகளால் இராஜ ராஜ சோழன் காலத்தில் சில பெரும் கோயில்களின் பரிபாலனம் கெட்டுப்போய்ச் சில மனிதர்கள் கோயில்களின் பணங்களைக் களவாடியதாக வதந்திவரவே அக்குற்றங்களை விசாரித்துத் தண்டித்து ஒழுங்குக்கு கொண்டுவருவதற்காக "மதுராந்தகனன் கண்டராதித்தனார்" என்ற ஒரு பெரிய மேலதிகாரியை அரசன் நியமித்து அனுப்பியதாகத் தெரிகிறது. அன்னோனும் பல குற்றவாளிகளைத் தண்டித்துக் கோயில் பரிபாலனத்தைச் சீர்படுத்தியதாகவும் தெரிகிறது. இவ்விதம் சீர்திருத்தங்களும் மேற் பார்வைகளும் பின் காலங்களிலும், சரித்திரங்களில் நிகழ்ந்திருக்கக் காண்கிறோம். ஸ்ரீரங்கம் கோயில் பரிபாலனத்தை ஒழுங்காக ஸ்ரீமத் இராமாநுஜர் ஏற்றுக்கொண்டதை நாம் அறிவோம். அதே அபிப்பிராயத்தை உத்தேசித்து ஸ்ரீமாத்வர், ஸ்ரீ ராமகிஷ்ண பரமஹம்சர் முதலான ஞானிகள் கோயில் நிர்வாகம், பூஜை இவைகளை ஏற்றுக்கொண்ட காலத்தில் கோயில் பரிபாலனத்தில் எவ்விதக் குறைவும் ஏற்படாது. ஆனால் சாமானிய ஜனங்கள் அதிகாரத்துக்கு வந்தாலும் கோயில் சொத்துகள் அளவுக்கு மிஞ்சி அதிகமாகி விட்டாலும் அதன் பரிபாலனம் சீர்கெட்டுவருதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். எவரும் உள் சென்று தொழக்கூடியதும், சொத்து என்பது தனியாக இருக்கக் கூடாததுமான காசி போன்ற உத்தரதேசத்துக் கோயில்களில் சண்டை ஏன் வரும். ஆனால் பொருள் நிரம்பக்கிடக்கும் நம் தென்னாட்டுக் கோயில் எதில்தான் சண்டை சச்சரவு இல்லாமல் இருக்கிறது.

நமது தென்னாட்டுக் கோயில்களை அவைகளின் மேற் பார்வை சம்பந்தமாகப் பாகுபடுத்துவோமானால் அவைகள் அடியிற்கண்டபடி பகுப்புக்களாகப் பிரிக்கலாம்.

1. பொதுக் கோயில்கள்.
   (1) தேவஸ்தான சபைகள் (கமிட்டிகள்) பல பெருங்கோயில்களையும் பல சிறுங்கோயில்களையும் பரிபாலிப்பார்கள்.
   (2) தர்மகர்த்தாக்கள் ஒவ்வொரு கோயிலுக்கும் ஒருவரோ பலரோ?
2. ஜாதிக்கோயில்கள்.
   (1) ஜாதிச்சபைகள்.
   (2) ஜாதி நாட்டாண்மைக்காரர்கள்.
   சபையின் காரியதரிசி அல்லது தர்மகர்த்தா.
   இக்கோயில்கள் அவ்வச்சாதிக்குச் சொந்தமாகச் சேர்ந்தவைகள்.
3. தனிக்கோயில்கள்.
   சிறு கிராமங்களில் தண்டுமானியங்களைக் கொண்டு நடப்பவை.

இவைகளுக்குத் தேவஸ்தான சபைகள் இல்லை. கிராமத்தார் மேல் பார்ப்பார்கள். காரியங்களைப் பார்ப்பது தர்மகர்த்தா அல்லது பூசாரி. பூசாரியின் பெயராலேயே தேவாலயங்களும் இருக்கும். இவைகளில் தர்மகர்த்தா பயபக்தியோடு பொருள் களவாடாமல் இருக்குமட்டும் கோயில் செவ்வையாக நடக்கும்.

அவ்விதம் நடவாமல் அவன் பிசகி நடப்பானேயானால் உடனே கிராமத்தில் இருகட்சிகள் ஏற்பட்டு வியாஜ்ஜியங்கள் உண்டாகி கோயில் பணம் போவதோடு கோயில் பூஜையும் நின்று விடும். சில சமயங்களில் பணங்களும் நகைகளும் விக்கிரகங்களும் ஆலயத்தைவிட்டு வெளியேறிவிடும். ஒரு தடவை கட்சிகள் தோன்றினால் அவைகள் மறைவதற்கு அநேக வருஷ காலங்கள் ஆகும். தற்காலத்தில் நமது நாட்டில் கட்சிப்பிரதி கட்சிகள் இல்லாத கோயிலைக்காண்பதே அரிதாகிவிட்டது. தேவஸ்தானச் சபைகளுக்கும் அவைகளுக்குள் அடங்கியுள்ள தர்மகர்த்தாக்களுக்கும் எக்காலத்திலும் விவகாரங்கள் நடந்து வருவது சகஜமாகி விட்டது. இப்போது நியாயஸ்தலம் (கோர்ட்டு) ஏறாத பொதுக்கோயில்கள் எதுவும் நமது நாட்டில் கிடையாது. நம்பூர்வீக அரசர்கள் மம்மானியாகத் தானங்களைக் கோயில்களுக்கு எழுதி வைக்காமல் இருந்தால் இச்சண்டை சச்சரவுகள் ஏற்படுமா? இவைகளை நோக்கித்தான் போலும் '6-ம் ஹென்ரி' என்ற ஆங்கில அரசன் கோயில் மடம் இவைகளின் ஆஸ்திகளை பறிமுதல் செய்து கொண்டான். இனி பற்பல ஜாதியாருக்குச் சொந்தமாகச் சேர்ந்த ஆலயங்களிலும் இச்சண்டைகள் ஒவ்வொன்றாக ஏற்பட்டுக்கொண்டு வருகின்றன. தனிக்கோயில்களிலோ பூசாரிகள் தங்கள் மானியங்களை எல்லாம் பல பேர்வழிக்கு மாற்றி விட்டார்கள்.

கோயில் பரிபாலனத்தில் வரும்படிகளைச் சரிவர வசூலித்தல் அவைகளைச் சரியான வழிகளில் செலவிடுதல் என்ற இரண்டு செய்கைகள் தான் முக்கியம். வரும்படிகளில் 1 இனாம் பூமிகள். 2. பத்தர்கள் காணிக்கைகள் 3. சர்க்கார் தஸ்தாக்கள், என்ற மூன்று பகுதிகள் உண்டு. அநேக கோயில்களில் ஒன்றுக்கு அரைக்கால் பாகமும் கஜானாவுக்குச் செல்கிறதில்லை என்றால் பரிபாலனம் எத்தனை சீர்கேடான நிலைமையில் இருக்கும்.

செலவிடுதலில், சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுத்தலும், நித்திய நைமித்திக உற்சவங்கட்குச் செலவு செய்தலும் ஆகும். சிப்பந்திகட்குச் சில கோயில்களில் மாதச்சம்பளம் உண்டு. இதே விஷேமானது. ஆனால் ஆதிகாலத்தில் ஏற்படுத்தினதும் இப்போது கொஞ்சமேனும் வயிற்றுக்குப் போதாததுமான சம்பளத்தைக் கொடுத்திடுவது தர்மம் அல்ல. குறைவில்லாமல் ஒரு ஏழைக் குடும்பத்துக்குப் போதுமான சம்பளம் கொடுத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அவன் யாத்ரீகர்களை வருத்தாமல் நிர்மலமாய்த் தன் காரியங்களைச் செய்வான். சிலகோயில்களில் மானியங்கள் விடப்பட்டிருக்கின்றன. அவர்கள் அநேகமாக அவைகளைத் தொலைத்து இருப்பார்கள். ஆதலால் இவைகளால் யாதொரு பயனுமில்லை. அப்படிப்பட்ட மானியங்களை நீக்கி மாதச் சம்பளம் ஏற்படுத்துதல் தான் மிகநன்று.

நித்திய நைமித்தியச் செலவுகட்குத் தற்கால நியமத்தின்படித் திட்டங்களை ஏற்படுத்தி அதிகாரிகள் சிக்கனமாகச் செலவிடுதல் வேண்டும். ஆடம்பரமும் வீண்படாடோபங்களும் கூடாது. ஆகமங்களைச் செவ்வையாக வாசித்து அதன் உட்பொருள்களைக் கவனித்து அதன் பின் காரியங்களைக்கவனிக்கவேண்டும். ஆலயப் பொருள்களைச் சிக்கனமாகச் சேகரித்து மீதி ஆக்கி ஆலய கூடங்களை அவ்வப்போது ஒழுங்குடன் பார்த்து அவசியமான கூடங்களை நிருமித்து குளம் குட்டைகளைச் சுத்தப்படுத்தி நாள் தோறும் ஆலயத்தைப் பரிசுத்தமாக்க வழிதேடவேண்டும்.

ஆலயத்தின் உட் சென்றவுடன் பரிசுத்தமே குடிகொண்ட எண்ணத்தைப் பக்தர்கட்கு உண்டாக்கவேண்டும். திருவிழாக் காலங்களில் வெகுபேர் வந்தாலும் தங்குவதற்கு வசதிகள் ஏற்படுத்திச் சுகாதார அனுசரணங்கள் அதிகமாகக் கொண்டிருக்கச் செய்யவேண்டும். நியாயஸ்தலங்களுக்குச் செல்வதையே தடுக்கவேண்டும். நமது இந்து கோயில்களே அன்றி எந்த மகமதிய கிறிஸ்தவக் கோயில்கள் நியாயஸ்தலங்கட்குச் செல்லுகின்றன?

# வருணாசிரம மகாநாடு.

“பைத்தியம் தீர்ந்து பத்து நாளாச்சுது உலக்கை எடுந்தா கோவணங் கட்ட” என்று ஒரு பழமொழி யுண்டு. அதுபோல, நாற்பத்திரண்டு வருஷமாய் காங்கிரசு என்கின்ற பொதுச்சபையின் மூலமாய் “நாங்கள், தீண்டாமை யொழித்து விட்டோம், ஏற்றத்தாழ்வை அகற்றி விட்டோம், சமத்துவம் சகோதரத்துவம் ஏற்பட்டு விட்டது, நாங்கள் ஒரு தாய் பிள்ளைகள், எங்களுக்குள் சண்டை சச்சரவில்லாமல் எங்கள் தேசத்தை ஆண்டு கொள்ளுவோம். எங்களுக்கு வெள்ளைக்கார எஜமான் தேவையில்லை, எங்களுக்கு சுயராஜ்யம் வேண்டும் (என்) அதுவும் பூரண விடுதலை வேண்டும்” என்று வாசாமகோசரமாய்ப் பேசி அநேக (Buts) ஆனால், கள் போட்டு காகிதத் தீர்மானங்கள் செய்து வந்த பலனாக தேசத்தில் இந்து முஸ்லீம் சண்டை, பிராமணர் பிராமணரல்லாதார் சண்டை, தீண்டாமைச் சண்டை இவைகள் வளர்ந்து கொண்டே வந்தது. ஆனால் இருபதாம் நூற்றாண்டிலோ மனிதரிடை அதிலும் பிறப்பிலேயே எஜமான் அடிமை என்னும் ஏற்றத்தாழ்வைப் போதிக்கிற வருணாசிரம தர்ம மகாநாடு கூட்டவும் முன் வந்து விட்டது. இதிலிருந்தே காங்கிரசுக்கு பைத்தியம் தீர்ந்து விட்டதா என்பதும், தேசம் எவ்வளவு தூரம் முன்னேறிப் போய்க்கொண்டிருக்கிறதென்பதும் நன்கு விளங்கும்.

### மகாநாடு அவசியமா?

முதலில் இந்த மகாநாடு கூடவேண்டிய அவசியமென்ன என்பதை யோசிக்கவேண்டும். பல நூற்றாண்டுகளாக புரோகிதரென்றும், குருக்களென்றும், ஆச்சாரியர்களென்றும், மடாதிபதிகளென்றும், படித்த வகுப்பினர்களாகிய பிராமணர்கள் தாங்கள் எல்லா வகையிலும் மேம்பட்டவர்களென்றும், ஏனைய மற்ற பிராமணரல்லாதார்கள் பலவகைகளிலும் தாழ்ந்தவர்களென்றும், கீழ்ப்படிந்தவர்களென்றும், பிராமணர்கள் முகத்தில் பிறந்தவர்கள் என்றும், சூத்திரர்கள் காலில் பிறந்தவர்கள் என்றும், சூத்திரர்கள் அடிமைகள் வேசி மக்கள் என்றும், இழிவாக எழுதிவைத்திருக்கிற மனுதர்ம சாஸ்திரம் போன்ற ஆபாசக்கதைகளை ஒன்றுமறியாத பாமரர்களை நம்பும்படியாகச் செய்து இந்து மதம், வருணாசிரம தர்மம் என்கிறவைகளைக்கொண்டு மயக்கி, கடவுள் சிருஷ்டியில் ஏற்றத்தாழ்வு இல்லை என்பதைக் கூட உணராதபடி அவ்வளவு மோசக்கருத்துடனும் சுயநலத்துடனும் பிராமணர்கள் எழுதிவைத்துக்கொண்டிருக்கிற புராணம், இதிகாசம், மனுதர்மம் முதலிய கட்டுக்கதைகள் புரட்டு என்றும் மனிதரிடை ஏற்றத்தாழ்வில்லை என்றும், ஒருவன் முகத்திலும், ஒருவன் மார்பிலும், ஒருவன் இடுப்பிலும், ஒருவன் காலிலும் பிறக்கவில்லை என்றும், எல்லாரும் ஒரே வழியாகப்பிறந்தார்களென்றும், எல்லோரும் சுக்லசுரோணித சம்மந்தமாய் தான் கருத்தரித்தார்களென்றும், ஒருவன் பிறப்பினால் எஜமானனும் அடிமையும் ஆகமுடியாதென்றும், அப்படிச் சொல்கிற நூல்கள் வெறும் கட்டுக்கதைகளென்றும், “குடி அரசு” கடந்த மூன்று வருட காலமாய் சொல்லியும், பேசியும், எழுதியும் வருகிறபடியால் தேசத்தில் ஒருவித விழிப்பேற்பட்டு சிறுகச் சிறுக மூடவழக்கங்களும், புரட்டுகளும் வெளிப்பட்டு சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட்டு வருகிறது. இதை உண்மையுள்ள ஒவ்வொரு மனிதனும் பிராமணன் உட்பட சரி யென்று ஒப்புக்கொள்ள வேண்டியிருக்க அதற்கு நேர்மாறாக “ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாப்பாள்” என்ற மாதிரியில் காங்கிரசு பிராமணர்கள் முதல் எல்லா பிராமணரும் ஒன்று கூடி வருணாசிரம மகாநாட்டைக்கூட்டி “பிராமணன் பிரம்மாவின் முகத்தில் பிறந்தவன், எஜமான் என்பதையும், சூத்திரன் பிரம்மாவின் காலில் பிறந்தவன் அடிமை வேசிமகன் என்பதையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும் அதற்குப்பின்தான் தேசமும் சகோதரத்துவமும்” என்பதைக் காட்டிவிட்டார்கள். இவர்களுடைய வருண தருமப்படி நூற்றுக்கு மூன்று பேர்களாகிய பிராமணரென்போர்களாகிய அய்யர், சாஸ்திரி, சர்மா, அய்யங்கார். பத்துலு நீங்கலாக மற்ற நூற்றுக்கு தொண்ணூற் றேழு பேர்களாகிய நாயுடு, முதலியார், பிள்ளை, கவுண்டர், செட்டியார் இன்னும் இது போன்ற கணக்கிலடங்காத யாவரும் சூத்திரர்கள்தான். ஆகவே இம்மகாநாட்டைக் கூட்டியவர்களோடு நாம் ஒத்துழைப்பதாயிருந்தால் ஆக்ஷேபணையில்லாமல் சூத்திரனுக்குண்டான அந்தஸ்தை ஒத்துக்கொள்ள வேண்டியதைத் தவிர வேறில்லை.

### ஏமாற்றுப் பேச்சு.

ஆனால் “இம்மகா நாடு ஏதோ வைதிகப் பிடுங்கல்களால் கூட்டப்பட்டது. எங்களுக்கு இதில் சம்மந்தமில்லை. நாங்கள் இதை வெறுக்கிறோம். நாங்கள் உங்களை சகோதரராகப்பாவித்து சம பந்திபோஜனமும் செய்கிறோம். ஸ்ரீமான் ஜெயவேலு முதலியார் அவர்கள் எங்கள் வீட்டுக்குள் தாராளமாய் வருகிறார். இந்த சமயத்தில் இப்பேர்ப்பட்ட மகா நாடு கூடுவதைப்பற்றி மிகவும் வருந்துகிறோம்.” என்று காங்கிரசு பிராமணர்கள் சொல்லக்கூடும். அது வெறும் ஏமாற்றுப் பேச்சென்று கண்டிப்பாய் அறியவும். இவர்கள் ஆரம்பத்தில் காங்கிரஸ் பந்தலிலேயே வருணாசிரம மகாநாடு நடத்த ஏற்பாடு செய்தார்கள். பல ஆட்சேபணைகள் கிளம்பியதால் திருவல்லிக்கேணியில் நடத்தியிருக்கிறார்கள். இதற்கு அநேக காங்கிரஸ் காரர்கள் உள் உதவியும் வெளி உதவியும் செய்திருக்கிறார்கள். உண்மையில் இவர்கள் மகாநாட்டை வெறுப்பதாயிருந்தால், கூட்டத்தில் போய், தீர்மானங்களை ஆட்சேபித்திருப்பார்கள். கடைசி பட்சம் பத்திரிகைகளிலாவது தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லியிருப்பார்கள். ஆகவே இந்த விஷயத்தில் அபிப்பிராயபேதமே கிடையாது.

### மகாத்மா காந்தி.

தென்னாட்டுச் சுற்றுப்பிரயாணத்தில் மகாத்மா காந்தி யடிகளைக்கொண்டு ஸ்ரீமான் ராமசாமி நாயக்கருடைய தொல்லையை அடக்க ஆங்காங்குவருணாசிரம விஷயமாய் கேள்விகள் பல கேட்கப்பட்டன. அதில் மகாத்மா பலவிடங்களில் பல மாதிரியாகச்சொன்னதாக பத்திரிகை மூலமாய்த்தெரிகிறது. ஏன் அப்படித் தெரிகிறதென்றால் அவர் சொல்லிய வார்த்தைகளை அப்படியே பூராவும் வெளியிடாமல் அவரவர்களின் மனப்பான்மைக்கு தகுந்தபடி அவரவர்களுக்கு வேண்டிய வாக்கியங்களையே எடுத்து பிரசுரித்து விட்டார்கள். அதிலிருந்து சரி, தப்பு என்று சொல்லுவதற்கு பத்திரிகைகளைக்காட்டி காந்தியடிகளைக்கேட்க சந்தர்ப்பம் கிடையாது. இது நான் நேரிலும் கேள்விப் பட்டதிலும் தெரிந்த விஷயம். ஆனால் மகாத்மாவின் எந்தப் பிரசங்கத்திலும் பிறப்பினால் ஏற்றத்தாழ்வுண்டென்று சொல்லவே கிடைது. ஆனால் கருமத்தால் உண்டு என்று சொல்வதிலிருந்து வருணாசிரம தர்மத்தை ஒப்புக்கொண்டுதானிருக்கிறார். அவர் அப்படி ஒப்புக்கொள்வதில் பிராமணன் உயர்ந்தவன். சூத்திரன் தாழ்ந்தவன் என்பதையும் ஒப்புக்கொள்ளவில்லை. அந்தந்த தர்மத்தில் அவனவன் பெரியவன் என்பதே காந்தியடிகள் கோட்பாடு. உதாரணமாக ஒரு மனிதனுக்கு பல அவயவங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சமயத்தில விசேஷித்திருக்கிறதென்பது போலவேதான். ஆகவே இதையும் சிலர் ஒப்புக்கொள்வதில்லை. அப்படி ஒப்புக் கொள்ளாதவர்களையும் குறைகூற முடியாது.

### கலகலத்துப் போய்விட்டது.

எவ்வளவுதான் காந்தியடிகளைக்கொண்டு தர்க்கித்தும் அவர் வார்த்தைகளுக்கு வியாக்கியானம் செய்தும் அவருக்கு ஒன்றும் தெரியாதென்று தூற்றியும் வந்தபோதிலும் ‘குடி அரசு’ திரு மிகு ராமசாமி நாயக்கருடைய பிரசாரத்தின் பலனாக வருணாசிரம தர்மம் கலகலத்துப்போய் ஆட்டங்கொடுத்து விழுந்து போகிற நிலைக்கு வந்துவிட்டதென்பதையும் அதற்கு தப்பை வைத்துக் கட்டிப்பார்க்கலாமென்ற கவலையாலுமே இப்போது இந்த மகாநாடு கூட்டியிருக்கிறார்களென்பதில் தடையில்லை. சுமார் ஆறாயிர மைலுக்கப்பாலுள்ள ஒரு ஆளும் ஜாதியையும், மதத்தையும் சேர்ந்த பாதிரிமார்கள் கோடிக்கணக்காக நூற்றுக்கணக்கான வருஷம் மதப்பிரசாரம் செய்தும் வருணாச்சிரமத்தைப்பற்றி கவலைப்படாத வருணாச்சிரம தர்மிகள் ஸ்ரீமான் நாயக்கர் அவர்களுடைய இரண்டுவருஷக் கிளர்ச்சியில் நடுங்குவார்களேயானால் இனியும் வருணாச்சிரம தர்மம் நிலைக்க ஏதுவுண்டா? ஆகவே, எத்தனை மகாநாடுகள் கூட்டி எவ்வளவு தீர்மானங்களைச் செய்தாலும் இனி அது உருப்படப் போவதில்லை. அழிந்துபோவது நிச்சயம். ஆகவே இதைக் கட்டி அழுதுக்கொண்டு தேசத்தை பிளவுசெய்ய வேண்டாமென்று காங்கிரசு பிராமணத்தலைவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

### மகாநாடு.

இனி மகாநாட்டின் நடைமுறையைக் கவனிப்போம். இதற்கு அகில இந்திய வருணாச்சிரம மகாநாடு என்று பெயர் கொடுத்திருக்கிறது. எந்தெந்த மாகாணத்திலிருந்து எத்தனை எத்தனை பிரதிநிதிகள் வந்தார்கள். யார் யார் முக்கியஸ்தர்கள் என்பதும் தெரியவில்லை. தெருத்திண்ணையில் பேசிவிட்டு பத்திரிகைகளில் பெரிய மகாநாடு என்று எழுதி விளம்பரப்படுத்துகிற காலம் மலையேறி விட்டது. அதிலும் இக்காலத்தில் கொல்லத்தெருவில் ஊசி விற்பது சாத்தியப்படுமா? சிற்க மகாநாட்டில் நிறைவேறியிருக்கிற தீர்மானங்களை ஒன்றையாவது பொது நோக்குடையவர்கள் ஒப்புக்கொள்ள முடியாது. இந்தத் தீர்மானங்களைக்கொண்டு இனி வரப்போகும் பெருமையை அவர்களே யடையட்டும்.

### தலைவர்கள்.

மகாநாட்டுத் தலைவர் ஒரு ஆரியப் பிராமணர். வரவேற்புத் தலைவர் ஒரு ஆரிய வைசியர். பின்னவர் கிடைத்ததுதான் மகாநாட்டில் கவனிக்க வேண்டிய விஷயம். இவர்கள் நடத்திய மகாநாட்டின் கொள்கைப்படி செட்டியார் இடுப்பில் பிறந்தவர். ஆனால் அனுஷ்டானப்படி காலில் பிறந்த சூத்திரரைச் சேர்ந்தவர். ஏனென்றால் “மனவாளுக்கு அமவாச எப்புடு, சூத்திரவாளுக்கு எப்புடு, தேவரா” என்ற செட்டியார் ஐயரைக் கேட்டபோதிலும், பிராமணர்கள் செட்டியாரை தங்களினத்தைச் சேர்ந்தவரென்றாவது அல்லது வைசியரென்றாவது ஒப்புக்கொள்வதில்லை. ஏனென்றால் கலியுகத்தில் பிராமணனும், சூத்திரனும் தானுண்டு என்ற முடிவு கட்டியிருக்கிறார்கள். ஆகவே செட்டியார் சூத்திரன்தான். அப்படியானால் சூத்திரர்களுக்கு ஏற்பட்ட விதி அவருக்குமுண்டு. ஆகவே இவர் கையைக் கொண்டே இவர் கண்ணை குத்தியாய்விட்டது. இந்த நிலை

(இதன் தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க)

---

அங்கே செல விடப்படும் தொகைகளால் பல சமயக் கலாசாலைகளை ஏற்படுத்தலாம். இவ்விதம் மேல்பார்வை அங்கத்தினர்கள் தங்கள் காரியங்களைக் கவனித்து வருவார்களானால் நமது கோயில்கள் தலை நிமிர்ந்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. நமது சமயங்களும் சீராகத் தழைத்து வரும்.

# காந்தியடிகளும் சைவப் பிள்ளைகளும்.

மற்றுயிர் யாவையுந் தன்னுயிர் போலெண்ணித் தமது உடல் பொருளாவி மூன்றையும் பொது நலத்திற்காக அர்ப்பணஞ்செய்து தொண்டாற்றி வருங் கருணைவள்ளல், உடுக்கத் துணியுங் குடிக்கக் கஞ்சியுமின்றித் தவிக்கும் பல்லாயிர மக்களுக்கு கற்பக தரு போன்ற ராட்டினத்தையீந்தருளினோன், சாந்தமே யுருவானோன், உண்மையாளன் உலகம் போற்றுங்காந்தியடிகள்.

இப்பெரியாரின் போதனைகளைப் பின்பற்றிய தொண்டர்கள் தாழும் இவரது கொள்கைகள் அபிப்பிராயங்களிலிருந்து பேதப்பட்டதுண்டு அடிகள் கதர் நிதிக்காகப் பொருள் சேகரிப்பான் வேண்டி தமிழ் நாடுகளில் சுற்றுப்பிரயாணஞ் செய்த பொழுது நிகழ்த்திய சொற்பொழிவுகளிலும் முரண்பட்டோர் பலர். இதே நோக்கமாய் அடிகள் இலங்கை சென்ற பொழுதும் வெளியிட்ட அபிப்பிராயங்களிலிருந்து ஆங்குள்ளாரில் சிலரும் பேதப்பட்டிருப்பார்கள். இவ்வித அபிப்பிராயங்கள் மக்களுக்கிடையில் காணப்படுவது உலக இயல்பு.

அங்ஙனமே தீண்டாமையை யொழிக்கவேண்டுமென்ற போதிக்கையில் 'வருணாசிரமம்' நிலை நிற்க வேண்டு மென்று சொன்னதற்காகவும், பிறப்பிலே பிறவிக்குணமுண்டாகையால் பிறப்பினால் பிராமணன் மேலானவன் என்றதற்காகவும், தென்னாடுகளிலுள்ள ஆலயங்களை தாசி வீடுகளுக்கும் கொலைக்களத்துக்கும் ஒப்பிட்டதற்காகவும், சமஸ்கிருதத்தையுங் கீதையையும் சைவப் பாடசாலைகளில் படிப்பிக்கும்படி சொன்னதற்காகவும், தமிழகத்தாரில் முறையே ஒவ்வோர் பகுதியாரால் மிகவுங் கண்டிக்கப்பட்டுள்ளார். யாழ்பாணம வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் அடிகளாற்றிய சொற்பொழிவிலும் ஏறக்குறைய இதேமாதிரி கூறியுள்ளாரென யாழ்ப்பாணப் பத்திரிகைகள் மூலமாக அறிகிறோம். அதிலும் ஓர் சைவப்பிள்ளையின் படிப்பு பூரணமாக வேண்டுமானால் சமஸ்கிருத மொழியும் கீதை, இராமாயணம், பாரதம் ஆகிய நூல்களும் சைவப்பாடசாலைகளில் அவசியம் படிக்கவேண்டுமென வற்புறுத்திக் கூறியுள்ளாரெனத் தெரியக் கிடக்கிறது. அங்ஙனமாயின் அடிகளின் சமஸ்கிருதத்தோடொத்த கற்பனைகள் தமிழகத்தாருக்குகந்தவைகளல்ல வென்பது எனது சிற்றறிவிற்குத் தோன்றுகிறது: இவைகள் தமிழரால் எளிதில் கைக்கொண்டொழுக வல்லதாவென்றும்; அவர்கட்கு எவ்வளவில் நன்மை பயக்குமென்றுஞ் சிறிதாராய் வாம்.

உலகில் ஒருகாலம் உயரிய நாகரீகத்தையும், கல்விப்பெருக்கையுமடைந்திருந்த நாடு தமிழ் நாடென்பதைத் தென்னிந்திய சரித்திரங்களை ஆராய்ந்த அறிஞர்கள் ஒப்புக்கொள்வார்கள். ஆகவே தமிழர் தமது நாட்டில் செய்யவேண்டிய வேலை தமது மதத்தத்துவத்தைப் பரவவைப்பதும் தமிழ் நூல்களின் பெருமையை யுணர்த்துவதுமே யாகும். அதன் பின்பே பிற மொழிகளையும், பிற நூல்களையுங் கற்றுக்கொள்வது ஒழுங்கு.

இனி தற்காலத்தில் அரசியல் வியாபாரம், வயிற்று வளர்ப்பு ஆகிய துறைகளில் நம்மில் ஒவ்வொருவரும் ஆங்கில மொழியைக் கற்கவேண்டிய அவசிய நிலமை யேற்பட்டிருக்கும்பொழுது இலங்கை மக்களுக்கு ஆங்கிலம் பொது மொழியாக வேண்டுதல் பற்றி தம் தம் சொந்த மொழியுடன் ஆங்கிலத்தையும் ஒவ்வோர் பிள்ளைக்கும் கற்பிக்க வேண்டுமென இலங்கைத் தலைவரில் ஒருவராகிய கௌரவ பாலசிங்கம் அவர்களைப்போன்றோர் புத்தி புகட்டி நிற்கும்பொழுது, பெற்றோர்களும் தமது குழந்தைகளுக்கு சொந்த மொழியைச்செவ்வனே கற்பிக்கச் சட்டைபண்ணாமல் எப்பொருள் விரயமாயினும் ஆங்கில மொழியே படிப்பித்துவிடக் கண்ணுங்கருத்துமாய் இருக்கும்பொழுது அடிகளின் கூற்று எவர் செவிக்கேறுமோ தெரியிலேம்? ஆங்கில அரசு நமது நாட்டிலுள்ள வரை ஆங்கிலம் அரசாங்கமொழியாதல் பற்றி அதனை எவருங்கற்கவேண்டியே நிற்பர். பொதுவாய்ப் பார்க்கும்பொழுது ஒரு பிள்ளை தனது சிறுவயதில் தாய்மொழியை யெழுத வாசிக்கப் பழகுவதில் நாலைந்தாண்டுகளும். பின்னர் ஆங்கிலம் கற்பதில் பத்து ஆண்டுகள் வரையுஞ் செலவிடுகின்றதைக் காண்கின்றோம். ஆங்கிலம் நமது பிள்ளைகளுக்கு அந்நிய மொழியானமையால் அவர்கள் சொற்ப சிரமங்கொண்டே படிக்கவேண்டியவர்களாகின்றார்கள். பேச்சு வழக்கற்றுக்கிடக்கும் சமஸ்கிருதமாகிய இன்னோர் பிறமொழியையும் ஒருபிள்ளை கற்கவேண்டுமானால் எத்தகைய பெருமுயற்சி இன்னும் எடுக்கவேண்டி நேரிடும். இம்மொழியைக் கற்குங் காலத்தை தமிழ் மொழியிலேயே செலவழித்து அதன்கண்ணுள்ள நூல்களில் எத்துறையில் வேண்டுமோ அதனை எளிதில் கற்றுவிடலாமன்றோ? ஒவ்வோர் மொழியிலும் சிறந்தவற்றைக கொள்ளற்காக பல மொழி ஞானம் அவசியமாயினும் தாய்மொழியிலுள்ளவைகளைத் தெளிவறக் கற்காமல் வேறு மொழியைக்கற்று அதன்கணுள்ளவைகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் ஒருவர்க்குத் தோன்றில் அவர், தம் குலமகளைத்துறந்து பரத்தையை விரும்புதற் கொக்கு மன்றோ?

இனி சமஸ்கிருதம் படிக்காவிடில் ஒரு பிள்ளையின் படிப்புப் பூரணமாகாதென அடிகள் கூறுகின்றார். எவ்வகையில் என்றதை விளக்கியிலர். இம்மொழியைப் படிக்காவிடில் எவ்வகை அறிவு நூல்களும் நந்தேன் மொழியாந் தமிழில் இன்றெனக் கருதியோ, அன்றேல் கீதை, இராமாயணம், பாரதம் ஆகிய நூல்களைப் படித்துக்கொள்ள முடியாதெனக் கருதியோ புலப்படவில்லை, ஏதோ இத்தன்மைய கருத்துக்கொண்டே சொல்லியிருக்கின்றாரென எண்ண வேண்டியிருக்கின்றது. அப்படியாகில், இப்பேரறிஞர் தமிழ் மொழியின் மேனிலையையும் அதன்கண் பரவிக்கிடக்கும் நூற் பெருக்கையும் அறிந்திருக்காதது தமிழகத்தார் செய்த தவக்குறைவே.

நம் தாய் மொழியில் பரவிக்கிடக்கும் நூல்களின் பெருக்கைக் காட்டுதற்காய் யாழ்ப்பாணம் ஸ்ரீ கைலாச பிள்ளை அவர்கள் பாளையங்கோட்டை சைவ மகாசபையின்முன் செய்த சொற்பெருக்கினோர்பகுதியை ஈண்டுகுறிப்பிடுவாம். "இத் தமிழ்ப் பாஷையில் உருத்திரம் முதலாகிய ஒன்பது ரசங்களுமமைந்த நூல்கள் பல விருக்கின்றன; இராச நீதிகளைக் கூறும் நூல்கள் பல விருக்கின்றன; இதிகாச மெனப்படுஞ் சரித்திரங்களைச் சொல்லும் நூல்கள் பல விருக்கின்றன; நோயை உடனே தப்பாமற் கண்டிக்கும் கைபாகஞ் செய்பாகந் தவறாமல் செய்யப்பட்ட மருந்தைச் சொல்லும் நூல்கள் பல விருக்கின்றன; நெடுங்காலத்திற்குப் பின்னே வரப்போகின்ற பலன்களைச் சொல்லும் சோதிட நூல்கள் பல விருக்கின்றன; கணக்கு நூல்கள் பல விருக்கின்றன; பதார்த்தங்களை அளக்கிற தருக்க நூல்கள் பல விருக்கின்றன; இவைகட்கெல்லாம் மேலாக எல்லையின்றி யிருக்கும் சமய நூல்கள் பல விருக்கின்றன; இந்நூல்களுட் பற்பல விறந்தது மெய்யே. இன்னும் இருப்பவைகளோ கொஞ்சமல்ல" இவ்விதமிருக்க, ஆங்கிலத்துடன் இன்னுமோர் பிற மொழியை நமது பாடசாலைகளில் படிப்பிக்கவேண்டிய அவசியம் புலப்படவில்லை. இனி கீதை, இராமாயணம், 'பாரதம் ஆகிய வடநூல்கள் செய்யுளிலும் வசன நடையிலும் தமிழ் மொழியிலே பல அறிஞர்களால் மொழி பெயர்க்கப்பட்டுக் கிடக்கின்றன. ஆகையால் வடமொழிப் படிப்பு சிஞ்சிற்று மில்லாமல் இந்நூல்களிலுள்ள நீதி அநீதி மொழிகளைக்கிரகித்துக்கொள்ளலாம். அல்லாமலும் இவைகளிலும் மேன்மைபொருந்திய நூல்கள் பல எமது தாய்மொழியிலிருக்கும் பொழுது அவைகளைக் கற்றுத் தேருமுன், கீதை போன்ற வட நூல்களைத் தேடவேண்டிய அவசியமுமில்லை. அன்றியும் இவைகள் வடநாட்டாருக்கு எத்தகைய பெருமை யுடைத்தோ, அத்தகைய பெருமையுடைய தமிழ் நூல்கள் பல தென்னாட்டாரிடமுண்டு. ஆகவே கலைமகளாம் ஔவைப் பிராட்டியாரருளிய ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, நறுந்தொகை, வாக்குண்டான், நன்னெறி, நல்வழி, நீதிநெறி விளக்கம் ஆதியாம் நீதிமொழிகளன்றோ எம்மனோர் கற்க வேண்டியவைடம் எளிதில் கற்கக்கூடியவையுமாயுள்ளன? அடுத்தாப்போல் பாடம் பண்ண வேண்டியன நாலடிவெண்பாக்கள். அவற்றிலடங்கியிருக்கும் நீதிகளும் விதிகளும் மிகச் சிறந்தன.

பின் அடுத்த படியாய் முப்பாலில் நாற்பான் மொழிந்த வராகிய செய்வப்புலவர் நமக் கீந்தருளிய பொய்யாமொழியாம் "கீதை" நம்மிடத்திலிருக்கும் பொழுது வடமொழியிலுள்ள கீதையின் அவசியந்தான் என்ன? "இன்பம், பொருள், அறம், வீடென்னுமிந்நான்கு முன்பறியச் சொன்ன முது மொழி நூல்" அன்றோ? "ஐயாறு நூறு மதிகார மூன்று மா, மெய்யாய வேதப் பொருள்" யாவையும் விளங்கவைத்திருக்கின்றாரல்லவா? உலகியல் நெறி, வீட்டியல் நெறி இரண்டும் நன்றாக விசாரித்துண்மையுணர்ந்து, மக்களுக்கு நன்மை பயக்கும் வண்ணம், இம்மறை நூலைத்தந்திருக்கின்றார். "அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி, குறுகத் தறித்த குறள்" என எம் மூதாட்டியாரால் புகழ்ச்சியடையப் பெற்ற தென்னூல் இதனிலும் மேலாய நூல் எது? எச்சமயத்தினராலும் எந்நாட்டாராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழியை நன்றாய்க் கற்றுணர்ந்த ஆங்கில தமிழ்ப் பண்டிதராம் "போப்" என்பவர் உலகத்திலுள்ள நூல்களில் ஒப்புயர் வற்றது திருக்குறள் என்றனர். ஔவையாரும் பின்வரும் வெண்பாவில் குறளையே முன்னதாக வைத்துள்ளார்

"தேவர்குறளும் திருநான் மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்..........."

இன்னுஞ் சமய அறிவு வேட்கை கொள்வார், மேற் குறித்த வெண்பாவில் கூறப்பட்ட நூல்களைக் கற்றலே போதுமானது. ஆகையால் இவ்வித நீதிநூல்கள், சமய நூல்கள் தமிழ் மொழியிலே பொலிந்து கிடக்கும் பொழுது அவை யாவும் சுலபமாய்க் கற்றுக் கொள்ளத் தக்கனவாயிருக்கும்பொழுது பிற மொழியையும், பிற மொழி நூல்களையும், நமது பாடசாலைகளில் படிப்பிக்க வேண்டிய அவசியந் தோன்றக் காணோம். ஆகவே தமிழ்ச்செல்வீர்! முதலில் தாய்மொழியையும் அதன்கண்ணுள்ள மேற்கூறிய நூல்களையும் உங்கள் பிள்ளைகளுக்குச் செவ்வனே படிப்பியுங்கள். அவ்விதஞ் செய்யின் அவர்களின் படிப்பு பூரணமடைய வழியுண்டு. பின்னர் ஒருவர் பலமொழி ஞானம் வேண்டுமென விரும்புங்காலை சமஸ்கிருதமோ வேறு எம்மொழியையும் அம்மொழி நூல்களையுங் கற்றுக்கொள்ளலாம். தமிழபிமானிகளே! "மகாத்மாவின்" கற்பனையின்படி யொழுக வேண்டாமென்பது எனது கருத்தன்று. ஆனால் தாய்மொழி அபிமானத்தை விடாமல் எம்முன்னோராகிய "மகாத்மா"க்களின் தெய்வ வாக்குகளை ஆராய்ந்தறிந்த பின்பே இவரின் கற்பனைகளை யாராய்ந்தொழுகவேண்டு மென்பதாம்.

தே. மு. கா. ஜோகூர்பாரு. மலேயா நாடு

# பதவிப் போட்டி
# சுயமரியாதை அளிக்காது

சமீபத்தில் சட்ட மெம்பர் வேலை காலியாகப் போகின்றது.

ஏனென்றால் சர் சி. பி. ராமசாமி அய்யர் அவர்களின் 5 வருஷ காலாவதி இனி 2, 3 மாதத்தில் முடிவடையப் போகின்றபடியால் அந்த ஸ்தானம் காலியாக வேண்டியது கிரமமாகும். ஆனால் சர். சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் சட்டமெம்பர் வேலை பார்த்த காலத்தில் தனது உத்தியோகம் இனியும் கொஞ்சகாலம் நீடிக்க வேண்டும் என்கின்ற உத்தேசம் கொண்டே வெள்ளைக்காரருக்கு அனேக உதவி செய்திருக்கின்றார். கையினால் செய்வதானால் பதினாயிரக் கணக்கான மனிதர்க்கு கூலிகொடுக்கத்தக்க வேலைகளை ஒரு சிறிது தயவு தாக்ஷண்ணியம் பாராமலும் இந்தியாவில் மாதம் 1-க்கு லக்ஷக்கணக்கான மக்கள் வேலையில்லாமல் வேறு நாடுகளுக்கு கூலிகளாகப் போகிறார்கள் என்பதைக் கருதாமலும் இந்திய நாட்டுப் பணம் இந்தியர்களால் வரியாகக் கொடுத்த பணம் ஒரு சிறிதும் இந்தியாவில் தங்காமல் வெளி நாட்டிற்குப் போகின்றதே எனகின்ற கவலையில்லாமலும் கையினால் செய்வதற்குப் பதிலாக பத்து லக்ஷம் இருபது லக்ஷம் என்பதாகப் பணம் கொடுத்து வெள்ளைக்காரர்கள்நாட்டு யந்திரங்களுக்காக பணம் கொடுத்ததும், நம்ம நாட்டில் உற்பத்தியாகும் சுண்ணாம்பு போட்டு வேலை செய்வதனால் கோடிககணக்கான ரூபாய் நமது நாட்டில் தங்குமே என்றாவது அதனால் லக்ஷகணக்கான குடும்பங்கள் பிழைக்குமே என்றாவது ஒருசிறிதும் கவலையில்லாமலும்கண்மணப் பார்ப்பார் என்பதுபோல் கல் நெஞ்சத்துடன் பணங்களை வாரி வெளிநாட்டு சிமெண்டு சுண்ணாம்புக்குக் கொடுத்தும், இந்திய வரி கொடுப்போர்களின் பணத்தை சிக்கனமாகச் செலவு செய்யவேண்டுமே என்கின்ற பொறுப்பு ஒரு சிறிதும் இல்லாமல் யேட்டூர் தேக்க வேலைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 1000, 2000, 3000 சம்பளமுள்ள வேலைகளை தேவைக்கும் அளவுக்கும் மிஞ்சி சிருஷ்டித்ததுடன் அவைகளை இந்தியர்களுக்கு கொடுக்கலாம் என்கின்ற கவலையுமில்லாமல் வெள்ளைக்காரர்களுக்கே கொடுத்தும் அவர்கள் தயவு சம்பாதித்தும் சட்ட சபைகளில் இதைப்பற்றி கேட்ட கேள்விகளுக்கு ஏறுமாறாய்ப் பதில் சொல்லியும் கைப்பிடியாய்ப் பிடிபட்டுக்கொண்ட சமயங்களில் ஊமைபோல் பேசாமலிருந்தும் ஜனங்கள் இவரது நாணயப் பொறுப்பில் சந்தேகமும் தீர்மானமும் கொண்டதைப்பற்றிக் கூட லக்ஷியமில்லாமலும் இருந்து அரசாங்கத்திற்கு உதவி செய்துஇன்னும் கொஞ்சகாலம்அப்பதவியில்இருக்கப்பிரயத்தனப்பட்டுவருகிறார். ஆதலால் அது காலியாவது சற்று கஷ்டமானாலும் ஆகலாம். அல்லது அவருக்கு இதைவிட பெரிய உத்தியோகம்கொடுப்பதாலே அல்லது இவ்வளவு கேவலமாக அவரது ஆட்சியானது பழிக்கப்பட்டு விட்டது என்கின்ற காரணத்தாலே காலி ஆனாலும் ஆகலாம். அனேகமாய் காலியாகு மென்றே எண்ணுகின்றோம்.

அப்படி காலியாவதனால் அதற்கு இப்போதிருந்தே போட்டிவந்து நிற்கின்றது.

முதலாவது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் போட்டி. அதாவது பார்ப்பனர்களில் ஸ்ரீமான்கள் டி. ரங்காச்சாரியார் ஜட்ஜி வி. வி. சீனிவாசய்யங்கார் சர். தேசிகாச்சாரியார் டி. ஆர். வெங்கிட்டராம சாஸ்திரியார் ஆகிய நால்வர்கள் பார்ப்பனரல்லாதார்களில் சர் K. V. ரெட்டிநாயுடு சர் A. P. பாத்ரோ டாக்டர் P. சுப்பராயன் ஸ்ரீமான்கள் T. A. ராமலிங்கம் செட்டியார் வெங்கிட்டபதி ராஜு ஆகியவர்கள். இதில் பார்ப்பனர்களிலும் அய்யர் அய்யங்கார் என்கின்ற கக்ஷிகள் இருக்கின்றன. அதாவது அந்த வேலை ஏற்பட்டது முதல் ஒரு அய்யர் ஒரு அய்யங்கார் என்று மாறி மாறி வந்திருப்பதால் இப்போது அய்யருக்கடுத்தது வய்யங்காருக்குத் தான் கொடுக்க வேண்டுமென்றும் ஏற்கனவே மூன்று அய்யர்கள் அதாவது ஸ்ரீமான்கள் V. கிருஷ்ணசாமி அய்யர் P. S. சிவசாமி அய்யர் C. P. ராமசாமி அய்யர் ஆகிய மூன்று அய்யர்கள் ஆகி விட்டதாலும் அய்யங்கார்களில் P. ராஜகோபாலாச்சாரியார் K. சீனிவாசய்யங்கார் ஆகிய இரண்டே அய்யங்கார்கள் மாத்திரம் ஆகி இருப்பதாலும் இது சமயம் ஒரு அய்யங்காருக்கே கொடுக்கப்பட வேண்டுமென்கின்ற உரிமை பாராட்டப்படுகின்றது.

அதுபோலவே பார்ப்பனரல்லாதார்களாலும் அந்த உத்தியோகம் ஏற்பட்டு இதுவரை அதாவது சுமார் 18 வருஷ காலமாக அது பார்ப்பனர்களுக்கே கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. அதனால் நீதி இலாக்கா முழுவதும் பார்ப்பன மயமாகி விட்டது. இந்தத் தடவை எப்படியாவது அதை ஒரு பார்ப்பனரல்லாதாருக்கே கொடுக்க வேண்டும் என்கின்றதாக உரிமை பாராட்டப்படுகின்றது.

இதில் சர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்கள் பார்ப்பனரல்லாதாரின் உண்மை பிரதிநிதி என்றும் பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுத் தீர்மானத்திற்கு விரோதமாய் சர்க்காருக்கு அனுகூலம் செய்திருப்பதாகவும் உரிமை கொண்டாடுகின்றார்.

சர். பாத்ரோ அவர்கள் பார்ப்பனரல்லாதார் பிரதிநிதி என்பதோடு மிதவாதி என்கின்ற முறையில் சுவற்றின் மேல் பூனையாய் இருந்தேன் என உரிமை கொண்டாடுகின்றார்.

டாக்டர் சுப்பராயன்—நான் ஜஸ்டிஸ் கட்சியில் இல்லை என்பதுடன் முதல மந்திரியாயிருந்து சர்க்காருக்கு உதவி செய்து வருகின்றேன், சுயராஜ்யக்கட்சியை கொன்று விட்டேன், காங்கிரசின் அயோக்கியத்தனத்தை வெளியாக்கி விட்டேன், மந்திரி பதவியின் உபத்திரவம் பொறுக்க முடியவில்லை ஆதலால் அது எனக்கு கொடுக்கப்படவேண்டும் என்று—உரிமை பாராட்டுகிறார்.

ஸ்ரீமான் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார்—ஆதி முதல் கொண்டு சர்க்காருக்கு நல்ல பிள்ளையாயிருப்பதுடன் ஜஸ்டிஸ் கட்சி அதிக பலம் பெற்று சர்க்காருக்கு உபத்திரவம் விளைவிக்காமல் இருக்கத்தக்கபடி அதில் கட்சியை உண்டாக்கி அதை தோற்றுப் போகும்படி செய்தேன், அதோடு பார்ப்பனர்களுக்கு தாசனாகவும் இருந்து வந்திருக்கின்றேன், சர் சி. பி. அய்யர் சொன்னபடி எல்லாம் ஆடினேன். அதனால் பார்ப்பனரல்லாத சமூகத்தில்உள்ள செல்வாக்கையும் இழந்தேன் கோயமுத்தூர் மகாநாட்டில்சர்க்காரையும கவர்னர்பிரபுவையும், சர் சி.பி. அய்யரையும் கண்டித்தும் வைதும் செய்யப்பட்ட தீர்மானங்களுக்கு விரோதமாய் வேறு ஒரு மகாநாடு கூட்டி அவைகளை மறுத்து தீர்மானம் செய்யச்செய்தேன். அதோடு இனியும் பார்ப்பனரல்லாத கட்சி அழிய என்ன என்ன வேலை செய்யவேண்டுமோ அதெல்லாம் செய்து வருகிறேன். ஆதலால் எனக்குத்தான் அவ்வுத்தியோகம் கொடுக்கப்பட வேண்டும்— என்று உரிமை பாராட்டுகிறார்.

ஸ்ரீ நரசிம்மராஜுலு அவர்களோ—சுயராஜ்யக்கட்சி செத்துப் போய் விட்டது காங்கிரசும் வேரற்று விட்டது, வேறு உத்தியோகம் கிடைத்தால் இதை விட்டுவிடுவதில் தடையில்லை, அன்றியும் ஜஸ்டிஸ் கட்சியில் பிளவுண்டாக்கினதற்கு ஒரு காரணஸ்தன், ஆகையால் எனக்கே கொடுக்க உரிமை உண்டு—என்கின்றார்.

இவற்றை அனுசரித்து பார்ப்பனரல்லாதாருக்குள்ளும்ஸ்ரீமான்கள் சர் ரெட்டி நாயுடுகாரும் டி. ஏ. செட்டியாரும் இன்னும் பலருஞ்சேர்ந்து ஒருகட்சி ஏற்படுத்த வேலை செய்து வருகின்றார்கள். அதாவது (நான்பிராமின் கான்ஸ்டிட்யூஷனலிஸ்டு) பார்ப்பனரல்லாத ஒழுங்கு முறைக்காரர்கள் என்கின்ற பெயருடன் ஒரு கக்ஷிமுயற்சித்து வருகின்றார்கள்.

இதற்காக ஒரு ஆங்கில பத்திரிகையும் ஏற்படுத்த கருதியிருப்பதோடு ஆட்களை சேர்க்கவும் முயற்சிகள் நடந்து வருகின்றது. பிரசாரம் செய்ய சில பிரசாரகர்களையும் உத்தேசித்தாய் விட்டது. இதற்கு பணம் பெரும் பகுதியும் குணம் பேட்டை ஜமீன்தார் தலையில் கைவைப்பதாகவும் தீர்மானித்தாய்விட்டது. ஸ்ரீ டி. ஏ. ரா. செட்டியார் கையிலிருந்தும் கொஞ்சம் செலவாகித்தான் தீரும்.

இந்த நிலையில் உத்தியோகப் போட்டி காரணமாய் பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாக இப்படி ஒரு பிரசாரமும் நடக்கப் போகின்றது. ஆனால் இது அநேகமாய் 2, மாதத்திற்குள் வேகம் குறைந்து விடும். ஏனெனில் 2, 3 மாதத்தில் இந்த உத்தியோகம் யாருக்கு ஆகும் என்பது முடிந்து விடும். இதுநிற்க

ஜஸ்டிஸ் கட்சியில் உள்ள தலைவர்களின் பொறுப்பும் நாளுக்கு நாள் தளர்ந்துகொண்டுதான் வருகின்றது. 'ஜஸ்டிஸ்' பத்திரிகை ஆசிரியரான ஸ்ரீமான் ராமசாமி முதலியாருக்கு காங்கிரஸ் ஆசை அதாவது தேசிய ஆசை பிடித்து விட்டது. அந்தமேடையில் எப்படியாவது இடம் கிடைத்து விட்டால் பார்ப்பனர்களின் யோக்கியதையை வெளி

இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

# புது வருஷத்தின் பார்ப்பன ஆதிக்க நிலை.

சென்னையில் காங்கிரசு கூட்டப்பட்டதின் பயனுக பார்ப்பனர்களின் யோக்கியதையும் அவர்களின் ஆயுதமாகிய தேசியத்தின் யோக்கியதையும் யாவருக்கும் விளங்கியிருந்தாலும், பார்ப்பனர்கள் இன்னமும் நம்பிக்கை இழக்காமல் தைரியமாய் இருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் பல விதத்திலும் அவர்களுக்கு பார்ப்பனரல்லாதார் உதவி இருப்பதாகத்தான் சொல்ல வேண்டும்.

உதாரணமாக இப்போது பார்ப்பனர்களுக்குத் தமிழ் நாட்டில் பார்ப்பன ஆதிக்க பிரசாரத்திற்கு முக்கிய உதவியாயிருக்கும் பார்ப்பன ரல்லாதார்களில் முக்கியமானவர்கள் ஸ்ரீமான்கள் முத்தரங்க முதலியார், ஒ கந்தசாமி செட்டியார், வரதராஜுலு நாயுடு, ஜார்ஜ் ஜோசப், குழந்தை, அண்ணாமலை பிள்ளை, குப்புசாமி முதலியார், கோவிந்தராஜு முதலியார், ஜயவேலு ஆகியோர்களே ஆவார்கள். மற்றபடி ஸ்ரீமான்கள் சாமி வெங்கடாசலம் செட்டியார், சாமி நாயுடு, ஆர். கெ. ஷண்முகம் செட்டியார் முதலியோர்களிடத்தில் நம்பிக்கை இல்லாத தன்மையைத் தெரிவித்துவிட்டார்கள்.

ஸ்ரீமான் முத்தரங்க முதலியாரின் யோக்கியதையைப்பற்றி நாம் சொல்லவேண்டியதில்லை. பெரிய வருணாசிரம தர்மி. பார்ப்பனர்களைப் பூலோக தேவதைகளாக் கொண்டவர். அவர் எழுதிக் கொடுத்ததைப் படிப்பதும் சொல்லிக்கொடுத்ததைச் சொல்லுவதும் தவிர வேறு எது படித்தாலும் சொன்னாலும் குரு அபசாரமென்றும் வேத நிந்தனை என்றும் நினைப்பவர். அவருக்கு மேலான பார்ப்பன பக்தன் இனி!எந்த பிரமாவினாலும் சிருஷ்டிக்கப்பட முடியாது.

ஸ்ரீமான் ஒ. கந்தசாமி செட்டியாரோ தனது அறிவையும் உயிரையும் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் பாதத்தில் சமர்ப்பித்து விட்டவர். தனக்கு கந்சாமி செட்டியார் என்கின்ற பெயர்கூட இருப்பதுகூட கஷ்டம் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றவர். ஏனெனில் பெயர் பாத்திரத்தினால்கூட அய்யங்கார் வேறு, செட்டியார் வேறு, என்று ஏற்படுகின்றதே என்று விசனப்பட்டு ராமருக்கு அனுமான் என்பதுபோல் சீனிவாசருக்கு கந்தசாமி என்கின்ற நிலை வேண்டுமென்று நடந்துகொண்டு வருபவர்.

இவர் ஆதியில் பார்ப்பனரல்லாதார் கக்ஷியில் இருக்கும்போது பேசின பேச்சும் எழுதிவந்த எழுத்துக்களும் இனியும் இருந்துகொண்டுதான் இருக்கின்றது.

பண விஷயமான தகலாறுகள் ஏற்பட்டதும், அய்யங்கார் தாராளமாய் செட்டியாருக்கு உதவிபுரிய முன் வந்ததும், செட்டியாரின் பழைய நிலைமை எல்லாவற்றையும் மாற்றி புது ஜன்மம் எடுத்தவர்போல் நடந்துகொள்ள வேண்டியவராகிவிட்டார்.

செட்டியாரின் யோக்யதைக்கு ஒரே ஒரு உதாரணம் போதும். அதாவது,

ஆசார சீர்திருதத மகாநாட்டுக்கு காரியதரிசி என்கின்ற முறையில் பார்ப்பனரல்லாதார் வாலிப சங்கத்திற்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அது என்ன வென்றால் பார்ப்பனரல்லாதார் வாலிப சங்கத்திலிருந்து ஆசார சீர்திருத்த மகாநாட்டுக்கு பிரதிநிதிகளை ஒப்புக்கொள்ள முடியாது என்று எழுதியிருக்கிறார்.

இந்த எழுத்து, செட்டியாரின் நிலைமை எவ்வளவு தூரம் மாறியிருக்கின்றது என்பதைக் காட்டும்.

"மானம், குலம், கல்வி, வன்மை, அறிவுடைமை முதலியவை பத்தும் பசிவந்திடப் பறந்துபோம்" என்கின்ற ஆப்த வாக்கியத்திற்கு செட்டியார் நடத்தையைவிட வேறு உதாரணம் கிடைப்பதரிது.

இனி ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு விஷயமோ சொல்ல் வேண்டியதில்லை. அவர் பத்திரிகையையும் பிரசங்கத்தையும் நடவடிக்கையையும் பார்த்து வருகின்றவர்களுக்கு புதிதாக ஒன்றும்சொல்லித் தெரியப்படுத்த வேண்டியதில்லை. அவருக்கு இரண்டே இரண்டு மந்திரம்தான், அதாவது "சமூக இயலில், பார்ப்பனர்கள் அயோக்கியர்கள்" "அரசியலில் பார்ப்பனர்கள் குருவும் தலைவர்களுமானவர்கள்" என்பதைக் கொண்டு சமயம்போல் திருமப வசம் வைத்துக்கொண்டிருப்பவர்.

ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு முழு விரோதியாக ஏற்பட்டுவிட்டால் ருடி முழுகிப் போகுமே என்று பயந்துகொண்டு உள் உளவில் அவருக்கு நல்ல பிள்ளையாக இருந்துவருவதாக வாக்குக் கொடுத்திருப்பவர். அவ்வாக்கை நிறைவேற்றவே ஸ்ரீமான ஷண்முகம் செட்டியாரை நீக்கவும், ஜார்ஜ் ஜோசப்பு அவர்களுக்கு கிடைக்க இருந்த தமிழ்நாடு காங்கிரசு கமிட்டித் தலைமையை அய்யங்காருக்கு சூட்டவும ஏற்பட்டது.

ஸ்ரீ- ஜார்ஜ் ஜோசப் அவர்கள் விஷயம் இவ்வளவு மோசமாக இல்லா விட்டாலும் பார்ப்பனர்களிடத்தில் உள்ள பயம் ஒருசிறிதும் நீங்கவில்லை என்பதும் வாழ்க்கைக்காக பார்ப்பனர்கள் தயவு சற்றும் வேண்டியில்லாவிட்டாலும் உத்தியோகம் பதவி முதலியவைகள் அவர்கள் தயவால் சம்பாதிக்கலாம் என்கின்ற ஆசை நீங்காதவர்.

மற்றப்படி ஸ்ரீமான்கள் குழந்தை, கோவிந்தராஜு முதலியார், அண்ணாமலை பிள்ளை குப்புசாமி முதலியார், ஜயவேலு ஆகிய கனவான்களைப்பற்றி யாராவது ஒருவர்கூட தெரியாமலிருக்க மாட்டார்கள் என்கின்ற முடிவினால் விட்டு விட்டோம்.

எனவே இத்தமிழ் நாடு முழுவதையும் நமது பார்ப்பனர்கள இந்த பக்தர்களைக் கொண்டே ஆண்டு விடலாம், ஆதிக்கம் பெற்றுவிடலாம் என்கின்ற தைரியத்துடன் சுயேச்சைத் தீர்மானத்தையும ராயல் கமிஷன் பஹிஷ்காரத் தீர்மானத்தையும் மகமதியர்களின் வகுப்புவாரித் தீர்மானத்தை ஒழிக்கும் தீர்மானத்தையும் பிரசாரம் செய்வதற்கும் அதன்மூலம் தலூகா, ஜில்லா முனிசிபாலிட்டி, சட்ட சபை இந்திய சட்ட சபை முதலியவைகளின் தேர்தல்களில பார்ப்பனர்களையும் பார்ப்பன தாசர்களையும் வெற்றி பெறச் செய்து அமர்த்தவும் துணிந்து பிரசாரத்தில் இறங்கிவிட்டார்கள் அதற்கு ஏற்றாப்போல் பத்திரிகைகளும் அதாவது 'இந்து' 'சுயராஜியா' 'டெய்லி எக்ஸ்பிரஸ்' போன்ற ஆங்கிலப் பத்திரிகைகளும், சுதேசமித்திரன்' 'தமிழ் நாடு' 'சுயராஜ்யா' 'தேசபந்து' 'தென்னாடு' 'ஊழியன்' 'ஜனமித்திரன்' போன்ற தமிழ் தினசரி வாரப் பதிப்பு ஆகிய பல பத்திரிகைகளும் இருக்கின்றன இதற்கு அனுகூலமாக பல இடங்களில் பார்ப்பனரல்லாதார்களுக்குள்ளாகவே தலைவர் தகலாறுகளும், எலக்ஷன் தகலாறுகளும், உத்தியோகத்தகலாறுகளும்,பத்திரிகை தகலாறுகளுங்கொண்டபல கட்சிகள் இருக்கின்றது- அதற்கு ஏற்றாப்போலவே இவ்வளவுதகலாறுகளிலும்ஸ்தலஸ்தாபனங்களிலும் பார்ப்பனர்களின் ஆதிக்கமும்தாண்டவமாடுகின்றது- ஆகவே புதுவருஷத்தில் பார்ப்பன ஆதிக்கததிற்கு பலக் குறைவு இருப்பதாகயாரும் சொல்லி விடமுடியாது- ஆதலால் பர்ப்பனரல்லாதார்கட்சியார்கள் ஜாக்கிரதையாகவும் சுபநலமில்லாமலும். யோக்கியமாகவும்நடந்து கொண்டாலொழிய நிவர்த்தியில்லை என்பதை தெரிவிததுக்கொள்ளுகிறோம்-

## அகோலா பார்ப்பனரல்லாதார் மகா நாடு.

### 10000 பேர் கூடிச் செய்த தீர்மானங்கள்.

### சைமன் கமிஷனை பகிஷ்கரிக்கக்கூடாது.

### பார்ப்பனரல்லாதாரை இழிவுபடுத்தும் புராணங்கள் பரிமுதல் செய்யவேண்டும்.

சென்ற மாதம் 30 ந் தேதி வெள்ளிக்கிழமை அகோலா ஜில்லா பார்ப்பனரல்லாதார் 4 வது மகாநாடு துலங்காவில் கூடிடது. ஸ்ரீ டி எஸ் ஜவால்கார் தலைமை வகித்தார்.

சுமார் 10000 பேர்கள் வந்திருந்தார்கள். ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன தீர்மானங்கள்-

(2 இப்போது பிராமணர்களும் முதலாளிகளும் தோற்றுவித்திருக்கும் சைமன் கமிஷன் பகிஷ்கார இயக்கத்தில் எந்த பார்ப்பனரல்லாதாரும் தலையிடக்கூடா தென்றும் அவர்களுடைய நடவடிக்கைகளில் நம்பிக்கையில்லை யென்றும் இம்மகா நாடு அபிப்பிராயப்படுகிறது.

(2) பார்ப்பனரல்லாதார் மனதைப் புண்படுத்தக் கூடியதும் இழிவு படுத்தக்கூடிய தமானமதப் புராணங்களை ஒழிக்கவேண்டுமென்று இம்மகாநாடு கவர்ன்மெண்டாரை கேட்டுக்கொள்ளுகிறது-

மற்றும் சில தீர்மானங்களுக்குப் பிறகு மகாநாடு இனிது கலைந்தது!

## 1928-ம் வருடத்திய தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லா இளைஞர் மகாநாடு.

இம்மகாநாடு 1928-ம் ஆண்டு பிப்பரவரி மாதம் 18, 19-தேதி சனி, ஞாயிறுகளில் தஞ்சாவூரில் கூடும். ஸ்ரீ- T. P. இராசன் அவர்கள் தலைமை வகிக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாத இளைஞர்களையும், இளைஞர் சங்கங்களையும் பிரதி நிதிகள் தேர்ந்தெடுத்து அனுப்பும்படி கோருகிறோம்.

A. சோசுந்தரம், B. A., B. L.,
பொது அமைச்சர், தஞ்சாவூர்.

# நீல்சிலையைப்பற்றி

## காங்கிரஸ் வேடிக்கை பார்க்கவந்த இரு சகோதரர்களுக்குள் நடந்த சம்பாஷணை.

தம்பி:—நீல் சத்தியாக்கிரகம் என்று சொல்லிக்கொண்டிருந்தார்களே அது என்ன ஆச்சுது?

அண்ணன்:—அது உனக்குத் தெரியாதா 'தென்னை மரத்தில் தேள் கொட்ட பனைமரத்தில் நெறி ஏறினது' போல் நீல் சிலையை உடைக்கபோய் கிருஷ்ணசாமி அய்யர் சிலையின் மூக்கு போய் விட்டது.

தம்பி:—அப்படிச் சொன்னால் எனக்கு விளங்கவில்லை. நடந்த சங்கதியைத் தெளிவாய்ச் சொல்லு.

அண்ணன்:—நீல்துரை சிலையை சத்தியாக்கிரகக்காரர்கள் சம்மட்டியாலடிக்கப் போனார்கள். அதை பலாத்காரமென்று "குடி அரசு" எழுதுச்சு. ஆனால் ஸ்ரீமான் காந்தி அதை பலாத்காரமல்ல, சம்மட்டியால் உடைக்கலாம் என்று சொன்னார். அப்பவும் "குடி அரசு" அது பலாத்காரம் தான் என்று சொல்லிற்று. அப்புறம் ஸ்ரீமான் காந்திக்கு புத்தி வந்து 'சம்மட்டியாலடிக்காதே, களி மண் உருண்டையால் அடி' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார். இப்பொழுது சாமிக்கு புஷ்பத்தால் அர்ச்சனை செய்வது போல் தொண்டர்கள் நீல் சிலையை களிமண் உருண்டையால் அர்ச்சனை செய்கிறார்கள். சத்தியாக்கிரகம் நடத்த வந்த தலைவர்களுக்கெல்லாம் வரவு செலவு கணக்கு வைக்கத் தெரியாததால் வசூலான பணங்களை எலி தின்ன ஆரம்பித்து விட்டது. இதனால் ஒருவருக்கொருவர் சண்டை யுண்டாச்சு, புதுப்புதுத் தலைவர்கள் வந்தவண்ணமாயிருக்கிறார்கள். தொண்டர்களைவிட தலைவர்களின் எண்ணிக்கை அதிகமாய் விட்டதுடன் வர வர நீல் சத்தியாக்கிரகம் அய்யர், அய்யங்கார், அம்மங்கார், பந்துலு ஆகியவர்களுக்கே சொந்தமாய் விட்டது. "தேசியத் தலைவர்கள்" எல்லாம் சர்க்காருக்கு பயந்து கொண்டு ஓடி விட்டாலும், தேசியத் தொண்டர்களுக்கு பயந்து கொண்டு, அதாவது நாளைக்கு இத்தொண்டர்கள் ஜெயிலுக்குப் போய் தேசபக்தர்களாய் வந்து தங்கள் மேல் பாய்ந்தார்களானால் ஆபத்து வருமே யென்று நினைத்து ரகசியமாய்ப் பணம் கொடுத்துக்கொண்டு தான் வருகிறார்கள். என்ன செய்தும் எண்ணைச்செலவே யொழிய பிள்ளை பிழைக்கும் வழியைக் காணோம்.

இது இப்படியிருக்க, பாவம்! சிவனே என்று சமுத்திரத்தைப் பார்த்து நின்று கொண்டிருந்த ஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யருடைய சிலையின் மூக்கை எவனோ திருட்டுத்தனமாய் அறுத்துவிட்டுப் போய்விட்டான். அந்தச்சங்கதி அப்படியே மறைபட்டுப் போய் விட்டது. அதைப்பற்றி யாரும் கவலையெடுத்துக்கொள்ளவில்லை. பார்ப்பனர்களின் கையாளான ஸ்ரீ முத்துரங்க முதலியாரும் மற்றும் சிலரும் பார்ப்பனரல்லாத வாலிபர்கள் தான் இப்படிச் செய்திருக்கவேண்டும் என்று நினைக்கும்படி சாடி சொல்லியும் கூட மூக்கறுத்த சிலைக்கு மூக்கு ஒட்டவைக்காமல் அப்படியே கிடக்கின்றது.

தம்பி:—அப்படியானால் இந்த சத்தியாக்கிரகம் எப்படித்தான் முடியும்?

அண்ணன்:—அடுத்த முனிசிபல் எலக்ஷன் வரைக்கும் வீதி வீதியாய் மீட்டிங்கு போட்டு பார்ப்பனருக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்க இதை ஒரு சாக்காக நடத்திப் பார்ப்பார்கள். அது முடிந்து அதன் பலன் என்ன ஆச்சுது என்று தெரிந்துபிறகுதான் சொல்லக்கூடும். இப்பொழுது முடிவுகட்ட முடியாது.

தம்பி:—சட்டசபை எலக்ஷனுக்கு கூட இது உபயோகப்படுமா?

அண்ணன்:—அது முனிசிபல் எலக்ஷனைப் பொறுத்திருக்கின்றது. ஏனென்றால் இதில் ஜெயம் கிடைத்தால் நீட்டி வைப்பார்கள். இதில் தோல்வி கிடைத்தால் நிறுத்தி விடுவார்கள்.

தம்பி:—இந்தப் புரட்டுக்காக எத்தனை பேர் ஜெயிலுக்குப் போவது? கேள்வி கேப்பாடு இல்லையா?

அண்ணன்:—கேள்வி என்ன, கேப்பாடு என்ன? அவர்கள் ஜெயிலில் இருந்தால் நஷ்டமென்ன; வெளியிலிருந்தால் லாபமென்ன? எல்லாவற்றையும் கடந்து உள்ளும் புறமும் ஒன்று என்று நினைக்கும் கடந்த ஞானிகள்தானே இப்போது ஜெயிலுக்குப் போயிருப்பவர்கள்!

தம்பி:—ஐயோ பாவம்! அவர்கள் தாய் தகப்பன்மார்கள் வருத்தப்பட மாட்டார்களா?

அண்ணன்:—சிலரின் தாய்தகப்பன்மாருக்கு தங்களைப் பிடித்த தொல்லை ஏதோ ஒரு வழியில் ஒழிந்ததே என்கின்ற சந்தோஷமுண்டு; சிலருக்கு அவரவர்களே தாய் தகப்பன்மார்கள். சிலர் விஷயத்தில் வருத்தப்பட்டாலும் படலாம். ஆனாலும் இவற்றை அவ்வளவு பிரதானமாய்க் கருதுவதில்லை. ஏனென்றால் தங்கள் குழந்தைகள் உள்ளே போகும்போது தேசத் தொண்டர்களாகப் போய் ஜெயிலிலிருந்து வரும்போது தேசபக்தர், தேசத் தலைவர், தேசியத் தலைவர் முதலிய பட்டங்களோடு வரக்கூடும் என்கிற தைரியத்தினால் பொறுத்துக் கொள்ளுவார்கள்.

தம்பி:—இந்த மாதிரி கணக்கு வழக்கு இல்லாமல் அதிகமான தேச பக்தர்கள் ஏற்பட்டுவிட்டால் இவ்வளவு பேர்களுக்கும் வேலை வேண்டாமா?

அண்ணன்:— அதைப்பற்றி உனக்கென்ன கவலை. தாலூக்கா போர்டு, ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி, சட்ட சபை, முதலிய எத்தனையோ எலக்ஷன்கள் வரப்போகிறது. எத்தனையோ பேர் அகில இந்திய தலைவர்களாகப் போகிறார்கள். இன்னும் எத்தனைபேர் வாழ்வுக்கு இம்மாதிரி குட்டித் தலைவர்களும் மூட்டை முடிச்சுகளைத் தூக்குவதற்குத் தேச பக்தர்களும் தேவையிருக்கிறது. இன்னும் எத்தனையோ ஊர்களில் கக்ஷிப்பிரதி கக்ஷிகள் இருக்கின்றது. இதில் ஒவ்வொரு கக்ஷிக்கும் தேச பக்தர்கள் வேண்டும். இவைகளை யெல்லாம் பார்த்தால் இன்னும் குட்டித்தலைவர்களும் தேசபக்தர்களும் வேண்டுமே யொழிய இப்போது இருப்பது அதிகமென்று சொல்லமுடியாது. ஆனதினால் தேசபக்தர்களை உண்டாக்க இந்த சிலை ஒரு காரணமாய் இருப்பதால் அவ்வளவு சீக்கிரத்தில் முடிந்து விடும் என்று சொல்ல முடியாது.

தம்பி:— அப்படியா! நேரமாச்சுது மற்ற சங்கதிகளை சாவகாசமாய்ப் பேசிக் கொள்ளலாம். நேரமாச்சுது இதோ தெரிகிறதே காங்கிரஸ் பொருள் காக்ஷி கொட்டகை அதற்குள் நுழைந்து அதைப் பார்க்கலாம் வா.

சரி இருவரும் பொருள் காக்ஷி சாலைக்குள் நுழைந்து விட்டார்கள் அவர்கள்பேசிக்கொள்வதைக் கேட்டுவரும்படி வேறு ஆளை அனுப்பிவிட்டு நான் வந்து விட்டேன்.


# இதுவா ராஜிக்கு சமயம்?

10—1—28 தேதி சென்னை கோகலே ஹாலில் ராயல் கமிஷன் பகிஷ்கார விஷயமாய் பெசண்டம்மை, ஸ்ரீமான்கள் பி. சிவராவ், எல். கோவிந்தராகவய்யர், எம். ராமச்சந்திர ராவ், சி. விஜயராகவாச்சாரியார், கே. ஆர். வெங்கிடராமய்யர் ஆகிய பார்ப்பனர்கள், பார்ப்பனரல்லாத கட்சித் தலைவர்களில் ஸ்ரீமான்கள் பனகால் ராஜா, சர். பத்ரோ, கிருஷ்ணன் நாயர் ஆகியவர்களைக் கூப்பிட்டு ராஜி பேச ஏற்பாடு செய்ததாகத் தெரியவருகின்றது.

இக்கூட்டத்தில் பெரிதும் அரசியல் திட்டத்தைக் குறித்தும், கமிஷன் பகிஷ்காரத்தைக்குறித்தும் பேசினார்களாம். நமது சுயமரியாதையையும், சமத்துவத்தையும் இப்பார்ப்பனர்கள் ஒப்புக்கொள்ளாமல் இருக்கும் வரை அவர்களுடன் கலந்து ராஜீயத்திட்டம் போடுவதோ அல்லது அவர்களுடன் கலந்து அரசியல் கிளர்ச்சி நடத்துவதோ பகிஷ்காரத்தில் இறங்குவதோ போன்ற அறியாமை வேறில்லை என்பதே நமது அபிப்பிராயம்.

சுயராஜ்யமும், அரசியல் கிளர்ச்சியும், பகிஷ்கார கூச்சலும், படித்தவர்கள் உத்தியோகம் பெறுவதற்காகவா? அல்லது ஏழைக் குடிகளைக் காப்பாற்றுவதற்காகவா? என்பதை ஒவ்வொருவரும் நெஞ்சில் கையைவைத்துப் பார்க்கட்டும். அவ்வுத்தியோகம் எல்லா வகுப்பாருக்கும் சரிசமானமாய் கிடைப்பதற்கு ஒப்புக்கொள்ளாதவர்களிடம் ராஜிப்பேச்சு பேசுவதில் என்னபலன் கிடைக்கும்? அவ்வுத்தியோகத்தின் மூலமோ அதனால் ஏற்படும் பிரதிநிதித்துவத்தின் மூலமோ சகல ஜனங்களுக்கும் சமத்துவமும், சமூக விஷயத்தில் சம உரிமையும் கிடைக்கும்படி செய்வதற்கு உபயோகிக்க சம்மதிக்காதவர்களிடத்தில் ராஜிப்பேச்சு பேசுவதில் என்ன பலன்? ஆகவே ஒரு பெரிய சமூகமாகிய பார்ப்பனரல்லாத சமூகத்திற்கே பிரதி நிதிகள் என்று சொல்

இதன் தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஞூ தைமீ 2உ

## காங்கிரஸ் தீர்மானங்களும் ஸ்ரீ காந்தியும்.

காங்கிரசின் யோக்கியதையைப்பற்றி ஸ்ரீ காந்தியவர்கள் தமது அபிப்பிராயம் வெளியிட்ட பிறகுதான் தமிழ்நாட்டு மக்களில் பலருக்கு 'குடி அரசு' இதுவரையில் உண்மையைத்தான் சொல்லி வந்திருக்கின்றது என்று புலப்பட்டிருக்கின்றது.

உண்மையை ஒளிக்காமல் பேச வேண்டுமானால் நமது நாட்டில் காங்கிரசு என்கின்ற ஒருகொடியயமன்போன்ற இந்த ஸ்தாபனம் இருக்கும் வரையில் ஏழை மக்கள் விடுதலை என்பதைக் கனவிலும் நினைக்க வேண்டியதில்லையென்றேகல்லிலும் எழுதிவிடுவோம்.

வெள்ளைக்காரனின் கொடுமையான ஆக்ஷி முறை ஏதாவது ஒரு காலத்திலாவது நமது நாட்டைவிட்டு ஒழிய வேண்டுமானல் முதலாவது காங்கிரஸ் ஒழிந்து தீரவேண்டும். பிறகுதான் இந்த மதமும் பார்ப்பன ஆதிக்கமும் ஒழிய வேண்டும் என்று சொல்லுவோம்.

ஏனெனில் இந்த மதத்தின் பேரால் பார்ப்பனர்கள் மாத்திரம்தான் மக்களை ஏமாற்றி பாழ்படுத்த முடியும். காங்கிரசோ அப்படி இல்லை. காங்கிரசின் பேரால் எல்லா வகுப்பு அயோக்கியர்களும் அன்னக் காவடிகளும் ஆராமதேயங்களும் காலிகளும் மக்களை ஏமாற்ற வசதி இருக்கின்றது.

இந்து மதம் ஒரு மனிதன் செத்தபிறகு மோக்ஷம் (விடுதலை) கொடுப்பது என்கின்ற புரட்டான தத்துவத்தின் மீது கட்டப்பட்ட பொய்க் கோட்டையாகும். காங்கிரசோ உயிருடன் இருக்கும்போதே விடுதலை (மோக்ஷம்) கொடுப்பது என்கின்ற புரட்டான தத்துவத்தின் மீது கட்டப்பட்ட பொய்க் கோட்டையாகும். பாமர மக்களும் ஏழை மக்களும் இதை வெகு சுலபத்தில் நம்பி ஏமாந்து போகத் தக்கபடி தந்திரங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன.

அதற்குத் தக்கபடி அரசாங்கத்தின்மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்படும்படி பிரசாரங்கள் செய்ய வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே ஜனங்கள் ஏமாந்து போவதில் அதிசயமில்லை.

சென்னை காங்கிரசைப் பற்றியும், தமிழ்நாட்டு காங்கிரஸ் ஸ்தாபனங்களைப் பற்றியும், அதை நம்பிக்கொண்டு வாழும் தலைவர்களைப் பற்றியும் 'குடி அரசு' ஒருவருஷத்திற்குமேலா கஎவ்வளவோ தூரம்பிட்டுப் பிட்டு விளக்கி எழுதி வந்தும், எத்தனை பேர் அதை லக்ஷியம் செய்தார்களென்று பார்த்தால் மிகக் கொஞ்சம் பேர் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் சமீப காங்கிரசுக்கு தேர்த் திருவிழா என்கின்ற வேடிக்கை பார்ப்பவர்கள் போல திரள் திரளாக ஜனங்கள் ஓடி வந்தார்கள். காங்கிரஸ் முடிந்த பிறகு சத்தியகீர்த்தி என்று பெயர் வாங்க ஆசைப்பட்ட மகாத்மா காந்தி என்பவரும் "காங்கிரசுக்குப் போகும்போது வழியிலேயே நான் செத்துப் போவேன் என்று டாக்டர்கள் சொல்லுவதானுலும் காங்கிரசுக்குப் போய்த்தான் தீருவேன்' என்று சொன்னர். அதற்கு 15 நாளைக்கு முன்பு தான் "எனது மனச்சாக்ஷியை காங்கிரசுத் தலைவர் ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு ஒப்படைத்து விட்டேன்" என்று சொன்னர். இந்த இரண்டு வேதவாக்குகளும் எத்தனை பயித்தியக்காரர்களை மோசம் பண்ணியிருக்குமென்று யோசித்துப் பார்த்தால் யோக்கியர்களின் மனம் பதறாமல் இருக்காது.

இவ்வளவு பணச்செலவையும் இவ்வளவு ஏமாற்றத்தையும் கொடுத்து விட்டு, தானும் இருந்து காங்கிரஸ் நடத்தியதாக மக்களை நினைக்கத்தகுந்தமாதிரி நடந்துகொண்டபிறகு, பொது ஜனங்கள் தங்களாகவே காங்கிரசின் யோக்கியதையையும், தலைவர்களின் யோக்கியதையையும், தீர்மானங்களின் யோக்கியதையையும் தெரிந்து கொண்டார்கள் என்று ஏற்பட்ட பிறகு, அதுவும் ஸ்ரீ சீனிவாசய்யங்காரே இது ஒரு விளையாட்டுத்தீர்மானம் என்று ஒப்புக்கொண்ட பிறகு, "காங்கிரஸ் விளையாட்டுப் பிள்ளைகள் கூட்டம்" 'பொறுப்பற்றவர்கள் கூட்டம்", "யோசனையற்றவர்கள் கூட்டம்' 'முட்டாள் தனமான தீர்மானம்" "உலகத்தார் பார்த்து சிரிக்கத் தகுந்தது" 'நேர்மையற்றது" "காரியமில்லாதது" மக்களை ஏமாற்றச் செய்தது" "அவமானத்திற்கு இடம் தரக்கூடியது" என்று எழுதி விடுவதால் ஏற்பட்ட பயன் என்ன? என்று கேட்கின்றோம்.

இனியாவது ஸ்ரீமான் காந்தி யோக்கியமாய் உண்மையை ஒப்புக்கொண்டு தைரியமாய் பொது ஜனங்களுக்கு விளங்கும்படியாக ஏதாவது சொல்ல வருகின்றாரா என்று பார்த்தால் அங்கும் சாமர்த்தியமாகவும் தந்திரமாகவும் நடந்து கொள்ளுகிறாரே ஒழிய அவர் வாக்குகளில் சத்தியம் தாண்டவமாடுகின்றதா என்று கேட்கின்றோம்.

ஏன் இவர் தைரியமாய் "இந்த காங்கிரசினுலும் இதன் கொள்கைகளினுலும் இதற்கு ஏற்பட்டதலைவர்கள், அபிமானிகள் ஆகியவர்களாலும் நாட்டுக்கு நலன் விளையாது, கேடுதான் விளையும் என்று சொல்லி விடக் கூடாதுயென்று கேட்கின்றோம்.

தவிரவும் பூரண சுயேச்சைத் தீர்மானத்தையும் பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரத் தீர்மானத்தையும், இந்து முஸ்லீம் ஒற்றுமைத் தீர்மானத்தையும் பற்றி தமது அபிப்பிராயத்தை தெரிவித்த ஸ்ரீமான் காந்தி சைமன் கமிஷன் பகிஷ்காரத் தீர்மானத்தைப்பற்றி ஏன் தனது அபிப்பிராயத்தை தெளிவாய் தெரிவித்துவிடக் கூடாது என்றும் கேட்கின்றோம்.

இவ்வருஷ காங்கிரஸ் திட்டத்தில் இந்து முஸ்லீம் ஒற்றுமைத் தீர்மானத்தின் மீதும் அதுபோலவே பூரண சுயேச்சைத் தீர்மானத்தின்மீதும் பிரிட்டிஷ் சாமான் பகிஷ்காரத் தீர்மானத்தின்மீதும் இப்போது செய்ய வேண்டிய வேலை ஒன்றும் இல்லை. எனவே இப்போது காங்கிரஸ் தீர்மானப்படி காரியத்தில் செய்யப் போகும் வேலையெல்லாம் கமிஷன் பகிஷ்காரத் தீர்மானத்தின் படிதான். ஆகவே இந்த சமயம் ஸ்ரீமான் காந்தி மக்களுக்கு ஏதாவது அபிப்பிராயம் சொல்ல வேண்டுமானல் இதைப் பற்றித்தான் சொல்லி ஆக வேண்டும், இதுதான் பிரயோஜனப் படக்கூடியதாகும். இப்படியிருக்க இத்தீர்மானத்தைப்பற்றி ஒன்றுமே பேசாமலிருந்தால் இதன் பொருள் என்ன என்று பொது ஜனங்கள் நினைப்பது என்பது நமக்கு விளங்கவில்லை.

நம்மைப் பொருத்தவரை இதற்குக் காரணம் என்னமாயிருக்கும் என்று யோசிப்போமானல், பொது ஜனங்களுக்கு தான் நல்ல பிள்ளை ஆவதற்கு காங்கிரசையும் தீர்மானங்களையும் தலைவர்களையும் வைவதற்கும் வைவதற்கு வேண்டி பார்ப்பனர்கள் வாயை மூடிக்கொண்டு தன்னைத் திருப்பி வையாமலிருப்பதற்கு லஞ்சம் கொடுத்ததற்கு ஒப்பாகும் என்றுதான் காணக்கூடியதாயிருக்கின்றது. இது எப்படியோ இருக்கட்டும். இனி கமிஷன் பகிஷ்காரத்தைப் பற்றி கவனிப்போம்.

### பகிஷ்காரம்.

பகிஷ்காரம் என்பது கமிஷன் மெம்பர்களுக்கு நமது அபிப்பிராயத்தை அல்லது நமது தேவையை அல்லது நமது நிலையை தெரியப்படுத்தக்கூடாது என்பதா? அல்லது கமிஷன் முன்னுல் போய் நின்று அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லக்கூடாது என்பதா? என்பது நமது கேள்வி.

முதலாவது விஷயமானல் கமிஷன் தீர்மானத்தில் ஏதாவது சிறிது பொருள் இருப்பதாகச் சொல்லிக் கொள்ளலாம். இரண்டாவதானல் இத்தீர்மானம் சுத்த சுத்தமாக ஏமாற்றுத் தீர்மானம் என்றுதான் சொல்லி விடவேண்டும். முதலாவது சொல்வார்களானல் ஸ்ரீ மோதிலால் நேருவும், ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் கூட்டமும், விஜய

ராகவாச்சாரியாரும் முறையே அரசியல் திட்டம் தயாரித்து கமிஷன் முன் சமர்ப்பித்து விடவேண்டும் என்பதிலும், திட்டம் தயாரித்து ஏற்கனவே அனுப்பியிருப்பதிலும் பகிஷ்கார வாசனை ஏதாவது இருக்கின்றதா? தவிர,

இந்தியாவின் சுயமரியாதைக்காக கமிஷனைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று சொல்லுகின்ற பெசண்டம்மைக்கும் உண்மையில் சுயமரியாதை உணர்ச்சி இருக்குமானால் தாம் இது சமயம் பார்லிமெண்டில் தாக்கல் செய்து இருக்கும் 'காமன் வெல்த்' என்கின்ற இந்திய சுயாக்ஷி மசோதாவை வாபீசு வாங்கிக் கொண்டு விடவேண்டாமா?

இந்த கமிஷனை நியமித்த பார்லிமெண்ட்டிடம் இந்தியாவின்பேரால் தனது சுயாக்ஷி திட்டத்தை சமர்ப்பித்து பல்லைக்கெஞ்சிக் கொண்டிருப்பது சுயமரியாதை ஆகி விடுமா? தவிர பார்லிமெண்டில் எந்த தொழிலாளர் கக்ஷியார் இந்த பில்லுக்கு சாதகமாய் இருப்பதாக சொல்லப்படுகின்றதோ அந்த தொழிலாளர் கக்ஷியார்களால் தானே இக்கமிஷன் ஆதரிக்கப்படுகின்றது?

தவிர காங்கிரசாவது வேறு எந்த இந்திய அரசியல் இயக்கங்களாவது இந்த கமிஷன் இந்தியாவுக்கு வந்துவிட்டுப்போய் தனது முடிவைத் தெரிவிக்கின்றவரையிலும் எவ்வித அரசியல் திட்டமும்போடக்கூடாது என்பதாகவாவது காத்திருக்கின்றனவா? அப்படிக்கில்லாமல் காங்கிரசு ஒரு திட்டம், மிதவாதி ஒரு திட்டம், எல்லா கட்சியாரும் சேர்ந்து ஒரு திட்டம், ஒவ்வொரு தலைவரும் தனித்தனியாய் ஒருதிட்டம்தயாரிக்க தீர்மானங்களும் ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கும்போது இந்தியாவின் சுயமரியாதை இந்த போலி பகிஷ்காரத் தீர்மானத்தால் மாத்திரம் எப்படி காப்பாற்றப்பட்டு விட்டது என்பது நமக்கு விளங்கவில்லை.

தவிர, இதே பார்லிமெண்டினால் ஏற்பட்ட பழய சீர்திருத்தத்தை அமுல் நடத்துவதில் இவர்களும் பங்காளியாய இருந்து கொண்டு அதில் ரூ 4000, 5000, 7000 பணம் பெற்றுக்கொண்டு சட்டசபை மெம்பர், இந்தியா சட்ட சபை மெம்பர்; ராஜாங்க சபை மெம்பர்; சட்டசபை தலைவர், மந்திரி என்கின்ற உத்தியோகங்களில் இருந்து கொண்டு இந்தியாவின் சுயமரியாதையைக் காப்பாற்ற பார்லிமெண்டால் நியமிக்கப்பட்ட கமிஷனை பகிஷ்கரிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்வதில் நாணயம் இருக்குமென்று யார் நம்பக்கூடும்.

இங்கிலையில்பகிஷ்காரத்தின் பேரால் பிரசாரம் தொடங்கியாய் விட்டது. அப்பிரசாரகர்கள் ஸ்ரீமான்கள் ஓ. கந்தசாமிசெட்டியார், குழந்தை, மயிலை ரத்தினசபாபதி முதலியார், பஷீர் அகமது, சீனிவாசய்யங்கார், பி. வரதராஜுலு, கோவிந்தராஜுலு முதலியார், குப்புசாமிமுதலியார், முத்துரங்க முதலியார், அண்ணாமலை பிள்ளை முதலியவர்களே ஆவார்கள். இவர்கள் செய்யும் பகிஷ்கார பிரசாரத்தின் புரட்டை வெளியாக்கவும் ஒரு தக்க கமிட்டி ஏற்படுத்த வேண்டியது பொது மக்கள் கடமையாயிருக்கின்றது. அநேகர் அதில் சேர பிரியப்பட்டு தெரியப்படுத்தியும் இருக்கின்றார்கள்.

எனவே பொதுஜனங்கள் ஆங்காங்கு வரும் இரு கூட்டத்தினர் சொல்வதையும் பொறுமையாக கேட்கவேண்டும். கூட்டங்களில் கலவரம் முதலியவைகள் செய்வதால் ஒரு நன்மையும் விளைந்து விடாது, பிரசாரக்காரர்களை தாராளமாகப் பேசவிட்டால் தான் மறுப்புகள் பிரயோஜனப்படும் பாமர ஜனங்கள் கண் விழிக்கவும் நன்மை தீமை இன்னது என்று உணர்ந்து கொள்ளவும் இதை ஒரு தக்க சந்தர்ப்பமாய் உபயோகித்துக்கொள்ளவேண்டியது புத்திசாலித் தனமாகும்.

நமது கடமை

தவிர மற்ற எல்லா கட்சியார் என்பவர்களும் தங்கள் தங்கள் தேவைகளையும் அபிப்பிராயங்களையும் கமிஷனுக்கும் பார்லிமெண்டுக்கும் போய்ச்சேரும்படி செய்து விட்டதாலும் இனியும் செய்யப்போவதாலும் கமிஷன் மூலம் அவர்கள் அடைய வேண்டிய பலன் அடைய அவர்கள் நடந்து கொள்ளவேண்டிய வேலை முழுதும் முடிந்து விட்டது. அதுபோலவே பார்ப்பனரல்லாத மக்களாகிய நாம் நம்முடைய நிலையை எடுத்துச்சொல்லவும் நமக்கு வேண்டியது இன்னது என்பதை தெரிவிக்கவும் அதைகமிஷன் முன்னால் தெரிவித்துக் கொள்வதோ அல்லது மற்ற கூட்டத்தாரைப்போல் திட்டம் தீர்மானித்து அனுப்பி விடுவதோ இரண்டில்ஒன்றுசெய்யவேண்டியது அவசியம என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். நம்முடைய திட்டங்களெல்லாம் எல்லாமக்களுக்கும் எந்த மதம் எந்த வகுப்பானாலும் சமூக வாழ்விலும் அரசியல் வாழ்விலும் சரி சமத்துவம் இருக்கவேண்டும் என்பதும், பாமர மக்களை பார்ப்பனர்களும் படித்த கூட்டங்களும் ஏமாற்றி வாழத்தக்கதாயிருக்கும் அரசியல் முறைகளை அடியோடு திருத்தவேண்டியது என்பதும், பொது மக்களுக்குள் ஒற்றுமையைக்கெடுத்து கட்சிகளையும் பிரிவுகளையும் வளர்த்து கொண்டுநாட்டைப் பாழ்படுத்துவதற் கனுகூலமாய் இருக்கத்தக்கதாகச் செய்யும் அரசியல் பிரதிநிதி தத்துவ முறை அடியோடு ஒழிந்து மக்கள் ஒற்றுமைக்கும் நன்மைக்கும் ஆதாரமான பிரதிநிதி தத்துவ முறை ஏற்படுத்துவதற்கும், சாதுக்களுக்கும் தொழிலாளிகளுக்கும் உண்மையான சுதந்திரமும் மேன்மையும் உண்டாக்கத்தக்க கொள்கை ஏற்படுத்துவதற்கும், அனுகூலமான காரியங்கள் முதலியதுகளையே அடிப்படையாகக்கொண்டு ஒரு திட்டத்தை ஏற்பாடு செய்யவேண்டியது என்பதுதான். ஆகையால் பார்ப்பனரல்லாதார்கள் கூடுமானவரை ஒன்று சேர்ந்து சீக்கிரத்தில் இதற்கு ஒரு ஏற்பாடு செய்யவேண்டியது அவசரமாயிருக்கின்றது.

படித்த பார்ப்பனரல்லாதாரும் பணக்காரப் பார்ப்பனரல்லாதாரும் இதற்கு பெரும்பாலும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பது நமக்கு தெரிந்ததுதான். ஆனாலும் பார்ப்பனரல்லாதார் இயக்கம், கட்சி என்பவைகளில் இவர்கள் சேர்ந்தவர்கள் அல்ல என்பதையாவது பொது ஜனங்கள் அறியும்படி செய்துவிடவேண்டியது நமது கடமையாகும். ஆதலால் அதற்காகவும் ஏதாவது ஒரு மகாநாடு கூட்ட ஏற்பட்டால் எல்லோரும் தயாராயிருக்கவேண்டிக் கொள்ளுகின்றோம்.

## சீர்திருத்தப் புரட்டு.

நமதுநாட்டு பார்ப்பனர்களின்பொதுநலச் சேவை, சீர்திருத்தம், என்பவைகள் அதாவது காங்கிரஸ்என்றும் சமூகசீர்திருத்தம் என்றும் ஆசாரச் சீர்திருத்தமென்றும் இப்பார்ப்பனர்கள் பேசுவதெல்லாம் சுத்தப் புரட்டு என்றும் இவைகளை வேறு ஒருவர்செய்வதற்கில்லாமல் ஏமாற்றி தாங்களே செய்பவர்கள் போல காட்டி மக்களை ஏமாற்றி வெறுந்தீர்மானங்களை ஏட்டில் எழுதிவிட்டு காரியத்தில் நடவடிக்கையில் வரும்போது குழப்பத்தை படுத்துக்கொண்டு விதண்டாவாதம் பேசுவதே வழக்கமென்றும் எழுதி வந்திருக்கின்றோம்.

உதாரணமாக ஆசார திருத்தத்தின் பேரால் பம்பாயில் போய் வயிறு பிழைக்கும் ஸ்ரீ K. நடராஜன் என்கின்ற ஒரு பார்ப்பனர் இந்தியா முழுமைக்கும் தான் ஒரு ஆசாரத்திருத்தக்காரர் என்ற விளம்பரம் பெற்றவர். அவரது ஆசார திருத்தமானது ஸ்ரீமான்கள் M K. ஆச்சாரி T. R ராமச்சந்திர ராவ் S. சத்தியமூர்த்தி முதலிய வருணாசிரம பிரசாரக்காரர்களைவிட மோசமான திருத்தம் என்றே சொல்லுவோம். உண்மையாய் பேசவேண்டுமானால் அவர் ஆசாரத்திருத்தம் என்கின்றபெயரால் வருணாசிரமத்தைபரப்ப வந்த சூழ்ச்சிக்காரப் பார்ப்பனர் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் சுயமரியாதை இயக்கம் என்று ஒன்று தோன்றியிருப்பதும் மனுதர்ம சாஸ்திரத்தைக் குற்றம் சொல்லிக் கொளுத்தியதும் இவருக்கு வெகு கஷ்டமாகப் போய்விட்டதாம் "மனு தர்மத்தைக் கொளுத்தியதாலேயே இந்தியாவின் பழய தர்மம் என்பதை அழித்து விட முடியாது" என்று பந்தயங்கூறி மக்களை ஏய்ப்பதனாலும் சுயமரியாதை மகாநாடு என்பது கற்பு மகாநாடு என்பதாக ஒன்று ஏற்படுத்துவதுபோல் அவ்வளவு கேவலமானதென்கிறார். கற்பில் லக்ஷியமில்லாதஜாதிக்கும் சுயமரியாதையில் லக்ஷியமில்லாத ஜாதிக்கும் இப்படித் தோன்றுவதில் அதிசயம் ஒன்றுமில்லை. சன்மார்க்க சங்கம் என்றோ சன்மார்க்க மகாநாடு என்றோ ஒன்று கூட்டுவதானால் அவர்கள் சன்மார்க்கமற்றவர்கள் என்பதைக்காட்டத்தான்கூட்டுவார்களஎன்பது ஸ்ரீ நடராஜனின் கருதது போலும். தவிர வைக்கம் சத்தியாக்கிரகத்தின்போது கூட இந்த பிரபு "ஆக்ஷேபிக்கப்பட்ட வீதியில் நடக்காமல் இருப்பதே ஆக்ஷேபித்தவர்களுக்கு தக்க தண்டனை ஆகும்" என்று உபதேசம் செய்தவர்.

தவிர, சமீபத்தில் கூடிய சென்னை ஆசாரத்திருத்த மகாநாட்டில் இவர் பேசிய பேச்சு பார்ப்பனர்களுக்கு அனுகூலமாகவே சர்க்கரை பூசிய விஷம்போல் தந்திரமாய்ப் பேசினார். இதைப்போலவே மற்றும் பலர் பல சமயங்களில் பேசி இருக்கின்றார்கள்.

1912ம் வருஷம் மே மாதத்தில் திருச்சியில் கூடிய மாகாண அரசியல் மகாநாட்டில் மத சம்மந்தமான தர்மசொத்தைக் குறித்து சட்டம் செய்யவேண்டும் என்றும் ஸ்ரீமான்கள் எல். எ. கோவிந்தராகவய்யரும், சேஷகிரி ஐயரும் கொண்டுவந்த மசோதாவுக்கு கவர்மெண்டார் அனுமதி கொடுக்காதது தப்பு என்றும் கண்டன தீர்மானங்கள் ஸ்ரீமான்கள் சினிவாசய்யங்காரால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன.

ஆனால் அத்தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவரும் போது இந்த ஸ்ரீமான் சினிவாசய்யங்கார், சேஷகிரி அய்யர் உள்பட பார்ப்பனர்கள் ஒரே கூட்டமாக சர்க்கார் மதத்தில் பிரவேசித்து விட்டார்கள் மதம் போச்சு சாஸ்திரம் போச்சுது" என்று சத்தம் போட்டார்கள்.

அன்றி, அதே சமயத்தில் திருச்சியில் கூடிய ஆசார திருத்த மகாநாட்டில் தலைமை வகித்த ஸ்ரீமான் K. B ராமநாதய்யர் என்கின்ற ஒரு பார்ப்பனர் "ஜன சமூகம் கெட்டுப்போகாமல் இருக்கவேண்டுமானால் கோவில்களில் தேவதாசிகள் இருக்கும் ஏற்பாட்டை முற்றிலும் நீக்கிவிடவேண்டும்" என்று பேசி இருப்பதுடன் தேவதாசிகள் கோவில், உற்சவங்களிலும் பூஜைகளிலும் வேலை செய்ய விடுவதினால் ஜேடி உற்சவங்கள் பூஜைகள் இவைகளின் புனிதமைகள் குறைந்து போகிறதால் அவர்கள் கோவிலில் வேலை செய்ய விடாதபடி சட்டத்தாலோ அல்லது வேறு விதத்தாலோ தடுக்கப்படவேண்டும் என்கின்ற தீர்மானமும் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது (1913-ரு வெளியிட்டிய "மேன்மைக்கும் வழி" 236,238 பக்கம் பார்க்க)

ஆகவே இத்தீர்மானத்தை அமுலில் கொண்டுவர ஸ்ரீமத் முத்துலெக்ஷ்மி அம்மாளவர்கள் ஒரு மசோதா கொண்டுவரச் சர்க்காரை வேண்டிக்கொண்டதற்காக எத்தனை சாஸ்திரிகள் சர்மாக்கள் ஆச்சாரியார்கள் சத்தியமூர்த்திகள் இதற்கு விரோதமாய் "மதம் போச்சு சாஸ்திரம் போச்சு" என்று சப்தம் போட்டு பிரசாரம் செய்கின்றார்களென்று பார்த்தால் இப்பார்ப்பனர்களுடைய காங்கிரசும் சீர்திருத்தம் செய்வதின் உண்மை விளங்கும். ஆகவே பார்ப்பனர்கள் எக்காலத்திலும் மக்கள் சமத்துவத்திற்கோ ஒழுக்கத்திற்கோ சீர்திருத்தத்திற்கோ அனுகூலமாய் இருப்பார்களென்று நினைப்பது வேப்பங்காய் இனிக்கும் என்று நினைக்கும் மடமைக்கு சமானமென்றே சொல்லுவோம்.

மூன்று மாதத்தில் ஆகக்கூடிய வேலைமுன் நூறு வருஷத்தில் ஆவதாயிருந்தாலும் பார்ப்பனப் பூண்டை ஒதுக்கி வைத்து வேலை பார்ப்பதே உண்மையான காரியசித்திக்கு மார்க்கமாகும்.

**சூத்திரன் என்று உன்னைச் சொல்லிக் கொள்ளாதே.**

**சூத்திரன் என்றால் வேசி மகன் என்று பொருள்.**

## சென்னைமாகாண சித்தவைத்திய சங்கத்தின் கிளைச் சங்கம், மதுரை.

6—1—28 மாலை 3 மணிக்கு சென்னை மாகாண சித்தவைத்திய சங்கத்தின் மதுரை கிளைச்சங்கம் தலைச்சங்கத்தின் காரியதரிசி சுவாமி விருதை சிவஞான யோகிகள் தலைமையில் கூடியது.

ஜேடி யோகிகள், தமிழ்மொழி உலகில் மக்கள் தோன்றிய காலமுதல் வழங்கி வரும் பழமைய மொழியென்றும், தமிழ் வைத்திய நூல்கள் பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றி சிறப்புற்று வளர்ந்திருக்கிறதென்றும், அது சித்தர்கள் விளக்கிக் கூறிய நூல்கள் தமிழில் இலக்கக் கணக்கிலிருக்கின்றன வென்றும், சித்தவைத்திய மருந்துகள் பிற வைத்தியங்களால் தீராத பெரும் நோய்களைத் தீர்ப்பதன்றி, பற்பம், செந்தூரம், சுண்ணங்கள், நூறு, ஐநூறு, ஆயிரம் வருடங்கள் வரை கெடாமலிருந்து குணந்தருவன வென்றும் விளக்கிப் பிரசங்கித்தனர்.

இம்மதுரை நகர் தமிழ்க்கடைச் சங்கம் வீற்றிருந்த பழம் பதியாகையால் இதில் இச்சங்கம் இடைவிடாது முயன்று பலதர்ம வைத்திய சாலைகளை ஏற்படுத்தி ஜனங்களுக்கு உபகரிக்க வேண்டுமென்றும் வற்புறுத்திக்கூறினர்.

பிற வைத்திய நூல்கள் நோய்களுக்கு மருந்து கூறுதலோடமைகின்றன. தமிழ் சித்த நூல்கள் நோய் தீர்க்கும் மருந்துகளையும், தெய்வப்பத்தியையும், நோய் வாராமற் காக்கும் ஒழுக்கங்களையும், ஆயுளை வளர்க்கும் கற்ப மருந்துகளையும், ஜீவனை வலுப்படுத்தி உளத்தை கடவுள் பாற் செலுத்தும் யோகத்தையும், முக்தி தரும் ஞானத்தையும் கூறுகின்றன. ஆதலால் சித்த வைத்திய நூல்கள் படிப்பவர்கள், வைத்தியரும், யோகிகளும், ஞானிகளுமாவார்கள். அது பற்றி நீங்களனைவரும் சித்தவைத்திய நூல்களை இடைவிடாது படித்து தேர்ச்சியடைய வேண்டுகிறேனென்று கூறி முடித்தனர்.

வைத்தியர்கள் பலர் வந்திருந்தனர். அவர்களில் திரு டி. கே. தில்லைசாமி Sidha Doctor தலைவராகவும், P. ராஜரத்னம் வைத்திய பதியவர்கள் அமைச்சராகவும், எஸ். முத்துமாகாளியா பிள்ளை அவர்கள் வைத்தியபதி துணை அமைச்சராகவும், கே. வி. கணபதி பிள்ளையவர்கள் 1 சுவாமி மயில் சுந்தரம் அவர்கள் 2 சுவாமி வ. எஸ். அவர்கள் 3. கா குருசாமி பிள்ளை அவர்கள் 4. வ. பரமசிவம் பிள்ளை அவர்கள் 5 ஆராவமுத நாயுடு அவர்கள் 6 இபக்குழப்பினராகவும், எஸ். பி. முத்துசாமி பிள்ளை அவர்கள் பொருளாளராகவும், என். டி. ஜோசப் பிள்ளையவர்கள் ஆர் லெட்சுமண அய்யாவர்கள் எஸ் சொக்கலிங்கம் பிள்ளையவர்கள், சுந்தர சிங் அவர்கள், சுப்பையா பிள்ளை அவர்கள், கந்தசாமி சேர்வையவர்கள் வைத்தியபதி உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

காரியதரிசி.

## ஸ்ரீரங்கத்தில் பார்ப்பன ஆதிக்கம்.

ஸ்ரீரங்கத்தில் வைகுண்ட ஏகாதசி உற்சவ கடைசி தினமாகிய இன்று (13-1-28) வெள்ளிக் கிழமை காலை ஸ்ரீ நம்மாழ்வார் பகவான் திருவடி அடைதல் என்ற விஷயம் நடை பெற்றபின் எல்லோருக்கும் தீர்த்தம் கொடுத்துக் கொண்டு வருகையில் பார்ப்பனரல்லாதார் கூட்டத்தில் வந்ததும ஒரு அதிகாரி தீர்த்தம் கொடுப்பதை நிறுத்தும்படி சொன்னதின் மேல் கொடுக்காமல் நிறுத்திவிட்டு பெருமாளிடம் சென்று விட்டார்கள். இந்த தீர்த்தத்திற்காக வெகு ஜனங்கள் பல ஊர்களிலிருந்து வந்து காத்துக் கொண்டிருந்ததையும் பொருட்படுத்தாமல் அந்த அதிகாரி செய்ததை கண்டித்து சிலர் வருத்தத்துடனிருந்த சமயம் தற்செயலாய் அவ்விடம் தரிசனார்த்தமாக வந்திருந்த திருவாளர் டி. வி. கே. நாயுடு விஷயம் தெரிந்து உடனே தேவஸ்தான கமிட்டி அங்கத்தினர் திருவாளர் சின்னசாமி உடையாரிடமும் தேவஸ்தான எக்சிகியூடிவ் டிரஸ்டி ஸ்ரீமான் கஸ்தூரி ஐயங்காரிடமும் தெரிவித்ததின்மேல் எல்லோரையும் பெருமாளிடம் செல்லும்படி தெரிவித்து எல்லோருக்கும் தீர்த்தம் கொடுக்கும்படிக்கும் ஏற்பாடு செய்தார்கள். இவ்விதமான சம்பவம் இனிமேல் நடை பெறாமல் டிரஸ்டிகள் கவனித்து வருவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிகமான வட்டில்களில் தீர்த்தம் எடுத்துக்கொண்டு போய் விநியோகம் செய்தால் கலவரம் ஏற்படாமல் செய்யலாம். அதிகாரிகள் கவனிக்கவும். நிருபர்

(9-ம் பக்கத் தொடர்ச்சி.)

விக்கொள்ளுபவர்கள் இவ்விஷயங்களை கவனிக்காமல் தங்களுக்கு மாத்திரமோ தங்கள் கோஷ்டிக்கு மாத்திரமோ ஏதோ சில சிறு சிறு பலன்கள் கிடைக்கக்கூடும் என்கின்ற எண்ணத்தின் பேரிலோ அல்லது கிடைக்கச் செய்வதாய் சில பார்ப்பனர்கள் வாக்களிக்கின்றார்கள் என்கின்ற நம்பிக்கையின் பேரிலோ ராஜிப்பேச்சு பேச உட்காருவதால் மற்ற பொது ஜனங்களெல்லோரும் கண்மூடித் தனமாய் ஒப்புக்கொள்ளுவார்கள் என்று எதிர் பார்ப்பது ஏமாற்றமாய் முடியும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

தவிரவும் பார்ப்பனர்கள் போட்ட பகிஷ்கார கூச்சல்களுக்கும் அவர்களது போலி தீர்மானங்களுக்கும் நாட்டில் மதிப்பு இல்லாமல் போனதைக் கண்டவாலறிந்த சரிகள் மற்ற எல்லா சரிகளின் வாலும் அறுந்து போகும்படி செய்து விட்டால் தமக்கு மாத்திரம் தனி அவமானம் இருக்காது என்பதுபோன்ற எண்ணத்துடன் ஜஸ்டிஸ் கட்சியாரின் ஆதரவைப் பெற வந்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து அப்பார்ப்பனர்களின் சூழ்ச்சியில் சிக்கி தாங்களும் வாலறுந்த கூட்டத்தில் சேராமல் இருக்கவேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

பதினோராவது

# ஆதிதிராவிட மகாநாடு.

## நிறைவேறிய தீர்மானங்கள்.

### கமிஷனை ஆதரிக்கவேண்டும்.

பதினோராவது ஆதிதிராவிட மகாநாடு ஜனவரி 8-தேதி காலை 9 மணிக்கு கோகலே மண்டபத்தில் ராவ் பகதூர் எஸ், ஸி. குருசாமி எம். எல். ஸி. அவர்கள் தலைமையின் கீழ் கூடியது. அவ்வமயம் ஸ்ரீமான்கள் ஜே. எஸ். கண்ணப்பர், சுவாமி சகஜானந்தம், ராவ்பகதூர் எம். ஸி. நடேச முதலியார் முதலியோர்களும் மற்றும் பல பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர்.

சுவாமி சகஜானந்தம் அவர்கள் மேற்படி மகாநாட்டைத் திறந்து வைக்கும்படி ராவ் பகதூர் எம். ஸி. ராஜாவைக் கேட்டுக்கொண்டார், அதற்கிணங்க ஸ்ரீ எம். ஸி. ராஜா மகாநாட்டைத் திறந்து வைத்தார்.

நிறைவேறிய தீர்மானங்கள்.

தலைவர் ராவ் சாகிப் எல். ஸி. குருசாமி அவர்கள் கீழ்கண்ட இரண்டு தீர்மானங்களையும் பிரேரேபித்தார்.

1. இம்மகாநாடு பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு விஸ்வாசமும் பணிவும் காட்டுவதுடன்; அதன் மூலம் இந்நாட்டில் நியாயமும், சுயேச்சையும் விளங்கும்படி செய்ய வேண்டுமென்றும் கடவுளைப் பிரார்த்திக்கின்றது.

2. இம்மகாநாடு, நம்முடைய சமூக முன்னேற்றத்துக்காக உழைத்து வந்த பெரியார்களாகிய சர், டி. சதாசிவ ஐயர், சர். பி. ஸி. ராஜகோபாலாச்சாரியார், ஸ்ரீ முகுந்த பிள்ளை ஆகியோர்களின் அகால மரணத்துக்காக வருந்துகிறது.

3. இம்மகாநாடு அரசியல் கமிஷன் நியமனத்தைப் பாராட்டுவதுடன் நாட்டுக்கு அக்கமிஷனால் கடைசிவரை நன்மை ஏற்படுமென்று கருதி, இக்கமிஷனுடனும் ஜாயிண்டு சட்டசபைக் கமிட்டிகளுடனும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் எல்லா கட்சித் தலைவர்களையும் கேட்டுக்கொள்கிறது.

4. இம்மகாநாடு "தாழ்த்தப்பட்டவர்கள்" என்ற பதத்திற்குப் பதிலாக ஆதி இந்துக்கள் என்று கவர்ன்மெண்டு ரிக்கார்டுகளிலும் மற்ற இடங்களிலும் வழங்கப்பட வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

5. ஆதிதிராவிடர்களில் பெரிய உத்தியோகங்கள் வகிக்கக்கூடியவர்கள் இருந்தும் சர்க்கார் உத்தியோகங்களில் போதுமான அளவுக்கு ஆதிதிராவிடர்களை நியமனம் செய்யாமலிருப்பதற்கு இம்மகாநாடு வருந்துகிறது. மதாழில் இலாக்காவை ஆதிதிராவிடர்கள் மயமாக்க வேண்டுமென்றும் சர்க்காரை கேட்டுக்கொள்கிறது.

6. சென்னை முனிசிபல் சபையில் ஆதி திராவிடர்களுக்குப் போதுமான பிரதி நிதித்துவம் கொடுக்கப்படாமைக்கு வருந்துவதுடன், குறைந்த பட்சம் நான்கு பேர்களையாவது மேற்படி சபையில் நியமனம் செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

7. கூட்டுறவு சங்கங்களில் வேலை செய்யும் குமாஸ்தாக்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கும் பொருட்டு சர்க்கார் ஆதிதிராவிடர்கள் கூட்டுறவு சங்கங்களுக்குப் பண உதவி யளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறது.

8. (a) ஆதிதிராவிடர்களிருக்குமிடங்களிலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கட்டாய ஆரம்பக் கல்வியளிக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

(b) மேலும் பள்ளிக்கூடங்களில் தொழிற் பயிற்சி யளிக்க வேண்டுமென்றும், இப்போது ஆதிதிராவிட மாணவர்களுக்கு சர்க்காரால் கொடுக்கப்படும் உபகாரச் சம்பளம் போதாதென்றும் அவற்றை அதிகப்படுத்த வேண்டுமென்றும் பாடசாலைகளிலும் கலாசாலைகளிலும் வாசிக்கும் ஏழை மாணவர்களுக்கு மத்தியானம் இலவசமாகச் சாப்பாடு போடவேண்டு மென்றும் கேட்டுக்கொள்கிறது.

9. சென்னையில் நடந்த ஆசார சீர்திருத்த மகாநாட்டில் ஸ்ரீமதி பெசண்ட் தமது பிரசங்கத்தில் ஆதிதிராவிடர்களை அசுத்தம் பிடித்தவர்கள் என்று கூறியதற்காக இம்மகாநாடு அவரைக்கண்டிக்கிறது.

10. சென்னை நிர்வாக சபையில் ஆதிதிராவிடர்களில் ஒருவர் இல்லாததினால் அச்சமூக நன்மைக்குக் குந்தகம் ஏற்படுவதாயிருப்பதால் மேற்படி நிர்வாக சபையில் தாழ்க்தப்பட்ட வகுப்பில் ஒருவரை நியமிக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

பின்னர் மற்றும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தலைவர் தமது முடிவுரையில் இம்மகாநாடு பல தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறதென்றும் அவைகள் அத்தனையும் முக்கியமானதென்றும் தம்மை இம்மகாநாட்டுக்குத் தலைமைவகிக்கும்படி கேட்டுக்கொண்டதற்கு மீண்டும் வந்தனம் செலுத்துவதாகவும் மகாநாடு வெற்றியுடன் நடந்ததற்குத் தாம் பெரிதும் சந்தோஷமடைவதாகவும் கூறினர்.

பின்னர் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

குறிப்பு:— வரவேற்புப் பிரசங்கமும், தலைவர் பிரசங்கமும், மற்றய நடவடிக்கைகளும், இடமின்மையால் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம். ஷை பிரசங்கங்கள் மிக முக்கியமானவையாதலால் அவைகளை ஜனவரி 9, 10-தேதி "திராவிடன்" பத்திரிகையிலிருந்து வாசித்தறியக் கோருகிறோம்.

மநு நீதி போன்ற அதர்ம நீதி உலகில் மற்றொன்றும் இல்லை.

### "கதர்"

இப்பெயரிய திங்கள் வெளியீடு ஒன்று திருசிரபுரம் கதர்த் தொண்டர் திருமிகு ச. ம. சி. பரமசிவம் செட்டியார் அவர்களை ஆசிரியராகக்கொண்டு மாசி முதலாம் நாளிலிருந்து மலரும். நாடெங்கும் கதரைப் பரவச்செய்வதும், கதர் இயக்கத்திலுள்ள பெருங்குறைகளைக் களைந்து கதர் பாதுகாப்புக்குரிய அமைப்புகளை நாடெங்கும் தோற்றுவிப்பதும் இதன் தலையாய கொள்கையாயிலங்கும்.

கி. கலிபப்பெருமாள்
காரியக்காரர், "கதர்"
பெரிய கடை வீதி திருச்சி.

### சுயமரியாதை கதர் பண்டகசாலை,

திருச்சிராப்பள்ளி பெரியகடைத்தெருவில் காங்கிரஸ் கதர் டிப்போவிற்கு எதிரில் இப்பெரிய பண்டகசாலை ஒன்றை சுயமரியாதை இயக்க தலைவர் திருமிகு ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்களால் தைத்திங்கள் பதினைந்தாம் நாட்களுக்குள் திறக்கப்பெற வேண்டு மென்று தீர்மானித்திருக்கிறேன் என் சொந்த மூலதனத்தைக்கொண்டு பிறநம் நாட்டுப்பொருள்கள் பலவும் இங்கு திரட்டி விற்கப்பெறும் பல்வேறு இடங்களிலிருந்தும் கதர்வரவழைக்கவேண்டுமென்று முடிவு செய்திருக்கிறேன் எனது இப்பெரு முயற்சிக்கு பொது மக்களுடைய போதரவைப் பெரிதும் எதிர்ப்பார்க்கிறேன்.

பரமசிவம்

### காங்கேயம் பஜனை மஹோற்சவம்

காங்கேயத்தில் மேற்கண்ட இம்மஹோற்சவத்தின் எட்டாம் ஆண்டு நிறைவு விழா நாளது பிரபவ வருஷம் 28, 29 தேதி வியாழன் வெள்ளி இவ்விரு தினங்களில் நடைபெற்றது. அது காலை நாதஸ்வா வித்வான்களான ஸ்ரீமான்கள் திருவானைக்காவல் மருதமுத்து முதலியார் அவர்களும், திருச்சி பொம்பலூர் அங்கப்ப முதலியார் அவர்களும் தவுல் வித்வான்களான ஸ்ரீமான்கள் திருச்சி பஞ்சாபிகேசன் அவர்களும் லால்குடி சுப்பையா அவர்களும் இன்னும் சிலரும் விஜயம் செய்து அன்பர்களின் செவிக்கு இன்பம் விளைவித்தார்கள்.

### புதுவருஷ பஞ்சாங்கம்.

(1) திருச்சி பட்டு ஜவுளி வியாபாரம் எஸ். எம். நடேசம் பிள்ளை கம்பெனியார்,

(2) திருச்சூர் ஒலவக்கோடு மூங்கில், மரம் வியாபாரம் ஸ்ரீமான் க. கு. பொன்னப்ப நாடார்,

(3) மதராஸ் அச்சு & புஸ்தகசாலை சி. குமாரசாமி நாயுடு அண் சன்ஸ்,

(4) ஈரோடு சிவராம விலாஸ் அச்சியந்திர சாலையார், ஆகியவர்கள் இவ்வாரம் அனுப்பிய தம்தம் கம்பெனியின் 1928-ம் வருஷத்திய அழகிய காலண்டர்களை வந்தனத்துடன் பெற்றுக்கொண்டோம்.

7 ம்பக்கத் தொடர்ச்சி

பாக்கி இந்தியாவில் உள்ள பேச்சுக்காரர்கள் எல்லோரையும்விட நன்றாய் தனக்கும் தனது கட்சியாருக்கும் பேசி விளம்பரம் சம்பாதிக்கலாமே என்கின்ற ஆசையே முக்கியமானதாக இருக்கின்றது. இது பார்ப்பனர்களுக்குத் தெரிந்துதான் பார்ப்பனரல்லாதாரைக் கொண்டே இவருக்கு இடம் கிடைக்காமல் செய்து விட்டார்கள். ஆனாலும் எப்பொழுது ஒரு தடவை காங்கிரசு ஆசை வந்து விட்டதோ இனி அவரும் அவரைப்போல் காங்கிரஸ் ஆசை பிடித்த ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்களும் சரியானபடி பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு உதவமாட்டார்கள் என்பதே நமது அபிப்பிராயம். ஆகவே ஜஸ்டிஸ் கட்சிக்குள் (பார்ப்பனரல்லாதாருக்குள்) இப்படி ஒரு கூட்டம் சீக்கிரத்தில் வலுப்படக்கூடும் என்றே நினைக்கின்றோம். பணக்கால் ராஜாவுக்கு இன்னது செய்வதென்பது விளங்காமல் விழிக்கிறார் என்றுதான் தெரியவேண்டியிருக்கிறது. எப்படியாவது இதை விட்டு விட்டு ஓடிப்போனால் தேவலாம் என்று அவருக்குத் தோன்றுவதாகக் காணப்படுகிறது. தலைவர் என்கிற முறையில் எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக நடக்க முயலுகிறார். இக்கொள்கை பெரும்பாலும் தோல்வியைத்தான்கொடுக்கின்றது வழக்கம் என அஞ்சுகின்றோம். ஆகவே இதைப்பார்த்து யாரும் பயப்படவேண்டியதில்லை இப்பொழுது பார்ப்போமானாலும்சரி யார் மாறினாலும் சரி எந்த உத்தியோகம் போனாலும் சரி நமக்கு அதைப் பற்றி கவலையில்லை

எப்போதும் ஆங்கிலம்படித்தவன் உத்தியோகம்பெறுவதிலும் பணக்காரன் பதவியும்பெருமையும் பெருவதிலும் கண்ணாயிருப்பார்களே தவிரபாமரமக்களையும், ஏழைமக்களையும கவனிக்க மாட்டார்கள் என்பது சத்தியம்.

ஆகவே அவர்கள் நம்முடன் இருந்தாலும் ஒன்று தான் நம்மை விட்டுப்போனாலும் ஒன்று தான், கூர்மையாய்ப் பார்த்தால் இவர்கள் நம்மை விட்டு ஒழிந்து போவதே நல்லது. ஏனெனில் இவர்கள் நமக்குள்ளாக இருந்தே இவர்கள் தங்களது சுயநலத்திற்காக ஏமாற்றி நம்மை உபயோகித்துக்கொள்வதை விட அவர்களும் வெளிப்படையான எதிரிகளாகிவிடுவதே மேலானது. பார்ப்பானின் உயர்ந்த ஜாதித்தன்மையும் ஆங்கிலம் படித்த உத்யோகஸ்தனின் அதிகாரத்தன்மையும், பணக்காரனின் செல்வச்செருக்குதன்மையும்ஒரேதத்துவம்கொண்டதுதான். உண்மை விடுதலைக்கு இம்மூன்றும் சமமான எதிரியே யாகும். ஆதலால் இவற்றை யெல்லாம் சேர்த்து எதிர்த்து நிற்கும் நிலை எவ்வளவு சீக்கிரத்தில் நமக்கு ஏற்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு நமக்கு பல விதத்திலும் விடுதலைப்போர் சீக்கிரமாக முடியுமெனபதே நமது அபிப்பிராயம் ஆதலால் இவ்வருடத்திய உழைப்பில் யாரும் மனம் தளர்ந்து விடவேண்டியதில்லை. ஒற்றுமையாய் முனைந்து நின்று வேலை செய்தால் நமது முடிவான லட்சியம் கைகூடும் என்று தைரியமாய்ச் சொல்லுவோம். நமது லட்சியம் நியாயமானதும, சத்தியமானதுமாயிருந்தால் எதிர்ப்புகள் ஏற்படுவதெல்லாம் நன்மைக்கனுகூலமாகவே இருக்கும் என்கின்ற விஷயத்தில் யாவருக்கும் நம்பிக்கை இருக்கவேண்டும். உத்தியோக சண்டையை விடுதலைப் போராக நினைத்து ஏமாந்ததில் வெகுகாலம் வீணாய் விட்டது. ஆதலால பொது ஜனங்கள் தேச நன்மைக்கும் மக்கள் சுயமரியாதைக்கும் சமத்துவத்திற்கும் உத்தியோக சண்டையைப்பிரதானமாய் கருதாமல் சுயமரியாதைச் சண்டை என்பதாகவே தனிச் சண்டை நடத்தத் தயாராயிருக்கும் படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

# தொழிலாளர் இயக்கம்.

## வெற்றி பெறாத காரணம் என்ன?

சென்னையில் எந்தக்காரணத்தைக் கொண்டும் தொழிலாளர் இயக்க உருப்பெறாது என்பதே நமதபிப்பிராயம். ஏனெனில் பார்ப்பனர்களும் அரசியல் பிழைப்புக்காரர்களும் அதை கைபற்றி தங்கள் சுயநலத்திற்கு உபயோகித்துக் கொள்ளுகின்றார்கள். தொழிலாளர்கள் இயக்கம் சென்னையில் தோன்றிய காலம் தொட்டே நாம் இந்த அபிப்பிராயம் சொல்லி வருகின்றோம். ஸ்ரீமதி பெசண்டம்மைக்கும் ஸ்ரீ சினிவாசய்யங்காருக்கும் சிவராவுக்கும் சத்திய மூர்த்திக்கும், வரதாராஜுலுவுக்கும் மற்றும் இவர்கள் போன்றாருக்கும் தொழிலாளர் சம்மந்தமோ தலைமை ஸ்தானமோ இருக்கவேண்டிய அவசியமென்ன என்று கேட்கின்றோம். இவர்கள் தொழிலாளர்களா? அல்லது தொழிலை அறிந்தவர்களா? அல்லது தொழிலாளி போன்ற எழ்மை வாழ்க்கை வாழ்கிறவர்களா? தேச மக்களை ஏமாற்றி தங்கள் தங்கள் யோக்கியதைக்கு மேல் சம்பாதித்துக் கொண்டும் தங்கள தேவைக்கும் அனுபோகத்திற்கும்மேலானவாழ்க்கைவாழ்ந்து கொண்டும் பாமர மக்களை பலி கொடுத்து வாழும இழிதுறையான அரசியல் வாழ்வில் இருந்து கொண்டிருக்கும் மனிதர்கள் எப்படி ஏழைகளும் வாயில்லாப் பூச்சிகளுமான தொழிலாளர்களின் கஷ்டத்தை அறியக் கூடியவர்களாவார்கள்? எனவே இவர்களைத் தலைமையாகக் கொண்டு நடைபெறுவதும தொழிலாளர் இயக்கங்களில் கலந்துள்ள தொழிலாள சகோதரர்கள் ஒன்று அறியாதவர்களாயிருக்க வேண்டும்அல்லது யோக்கியப் பொறுப்பற்றவர்களாயிருக்க வேண்டும் என்பதே நமதபிப்பிராயம் எஸ். எம். தொழிலாளர் சங்கத்தின் தலைவராக ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்காரை அத்தொழிலாள சங்கத்தார் ஏற்றுக்கொண்டதாக பத்திரிகைகளில் பார்த்தோம். அவரைப் பொதுத்தலைவராகக் கொண்ட தொழிலாளர் சங்கம் யோக்கியமானதாக இருக்க முடியுமா என்று கேட்கின்றோம். ஸ்ரீ சீனிவாசய்யங்காருக்கும் M S M தொழிலாளர் சங்கத்திற்கும் என்ன சம்மந்தம் அல்லது என்ன கவலை என்பதை பொதுமக்கள் யோசித்துப் பார்த்தால் தொழிலாளர்களின் சக்தியும் யோக்கியதையும யாருக்கும் விளங்காமல் போகாது.

வேலையில்லாத்தொழிலாளர்மகாநாடு என்பதாக ஒரு மகாநாடு கூட்டி அம்மகாநாட்டுக்கு ஸ்ரீமான் வரதராஜுலு தலைமை வகித்தாராம். வேலையில்லாதவர்களுக்கும்ஸ்ரீ வரதராஜுலுக்கும் என்ன சம்மந்தம். வேலையில்லாத மக்கள் பெரும்பான்மையும் பார்ப்பனரல்லாதாராகவே இருக்கிறார்கள். ஆனால் ஸ்ரீ வரதராஜுலுவின் ஆதிக்கத்தில் உள்ள தமிழ்நாடு பத்திரிகை ஆபீசிலோ ஒருவன் இடறி விழுந்தால் பார்ப்பனர்மீதுதான் விழவேண்டும் என்கின்ற மாதிரியில் அவ்வளவு அதிகமாக பார்ப்பனர்களாகவே நியமித்து வைத்துக் கொண்டிருக்கிறார். ஸ்ரீமதி பெசண்டம்மைக்கும் தொழிலாளர்களுக்கும் என்ன சம்மந்தம் இருக்கிறது? நாட்டில் நூற்றுக்கு தொண்ணூறு பெயர்கள் தொழிலாளர்களாயிருக்கின்றார்கள். ஸ்ரீமதி பெசண்டம்மையார் தயாரித்து இருக்கும் சுயராஜ்ஜியத் திட்டத்தில் பொறுப்புள்ள ஸ்தானங்களுக்கெல்லாம் மிகுந்த பணக்காரருக்கும் பெரிய படிப்பாளிகளுக்கும் ஓட்டு இருக்க வேண்டுமென்று எழுதி யிருக்கிறார்களே ஒழிய தொழிலாளிக்கு ஓட்டோ பிரதிநிதித்துவமோ இருக்கும்படி எழுதவே இல்லை. தவிர ஸ்ரீமான்கள சத்தியமூர்த்தி ரங்கசாமி அய்யங்கார் சீனிவாசய்யங்கார் ஆகியவர்கள் தயாரித்த சுயராஜ்ஜயத் திட்டத்திலும் படிப்பாளிகளுக்கு ஓட்டுரிமை அதிகமாயிருக்கின்றதேதவிர வரி செலுத்துவோருக்கு ஓட்டுரிமை சரியானபடி இல்லவே இல்லை. அதிலும் தொழிலாளிகளுக்கு பிரதிநிதித்துவமும இல்லை. இவற்றை அவரவர்கள் வெளியாக்கி இருக்கும் மசோதா புஸ்தகத்தைப் பார்த்தால் தெரியவரும். இவைகளையெல்லாம் அநேக தொழிலாள பிரமுகர்கள் அறிந்திருந்தும் வேண்டுமென்றே சில தனிப்பட்ட தொழிலாள நபரின் சுயநலத்திற்காக இம்மாதிரி ஆசாமிகளிடம் தங்கள் தங்கள் இயக்கங்களையும் ஸ்தாபனங்களையும் அடிமைப்படுத்தி விட்டால் இம்மாதிரி தொழிலாளர் பொது ஜனங்களின் அனுதாபத்தை எப்படி எதிர்பார்க்க முடியும் என்று கேட்கின்றோம்.

எனவே தொழிலாள சகோதரர்கள் இனியாவது இம்மாதிரி பொறுப்பற்ற தலைவர்கள் கையில் சிக்கிக்கொண்டு பொது ஜனங்கள் அனுதாபத்தை இழக்காமலும் முதலாளிகள் தொழிலாளர்களைக் கொடுமைப்படுத்த இப்பொறுப்பற்ற தலைவர்களின் நடவடிக்கைகளை ஒரு சாக்காகச் சொல்லுவதற்கில்லாமலும் இருக்கத்தக்க வண்ணம் நடக்க முயற்சித்து தொழிலாளர்கள் இயக்கம் வெற்றிபெறச் செய்வார்களா?

---

### ஈராச்சியில் கனம் ஏ ஜே. அன்பையன் உபன்யாசம்.

இவ்வூரில் 30-12-27ல் ஸ்ரீமான் ஏ. ஜே. அன்பையன் M. A. M. R. A. S. ஸ்ரீ பத்திரகாளியம்மன் தேவஸ்தான மண்டபதில் அன்பு, கல்வி, கைத்தொழில், பார்ப்பனச் சூழ்ச்சி முதலான விஷயங்களைப்பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

பு. வ. பரமசிவத் தேவர்.

## "நாடார்களும் ஜஸ்டிஸ் கக்ஷியும்" மறுப்பு.

"நாடார்களும் ஜஸ்டிஸ் கக்ஷியும்" என்ப தாகதலைப்பிட்ட ஒரு வியாசம் 'தமிழ் நாடு' பத்திரிகையில் ஸ்ரீமான் கே. துரைசாமி என்பவர் பேரால் வெளியாகியிருக்கிறது. அதின் சுருக்கம் ஜஸ்டிஸ் கக்ஷியார் ஜனங்களை மயக்க வெறும் தீர்மானங்கள் மாத்திரம் செய்கிறார்களே ஒழிய காரியத்தில் ஒரு வேலையும் செய்வதில்லை என்றும் கக்ஷி சேர்ப்பதற்காக செய்யப்படும் சூழ்ச்சி என்றும் பொருள்படும்படி எழுதியிருக்கிறார்.

இது காங்கிரசில் சேர்ந்த பார்ப்பனரல்லாதாரின் யோக்கியதையை வெளிப்படுத்தியதற்கு பதிலாக ஜஸ்டிஸ் கட்சியை குற்றம் கூறி யானைக்கும் பானைக்கும் சரியாய்போய் விட்டது என்று சொல்லி பாமர மக்களை ஏமாற்றச் செய்த சூழ்ச்சியே தவிர வேறில்லை.

ஜஸ்டிஸ் கட்சியின் தீர்மானமோ சுயமரியாதை மகாநாட்டின் தீர்மானமோ பொது ஜனங்களால் ஒப்புக்கொண்டாய் விட்டது என்பதை அவ்வியாசகர்த்தாவே ஒப்புக்கொள்வது நமது நற்காலமே.

மேற்கொண்டு அருகில் நடக்க வேண்டிய காரியங்கட்கு ஆங்காங்கு மகாநாடுகளும் மீட்டிங்கிகளும் கூட்டி மக்களிடை பிரசாரம் செய்து வருவதை இவ்வியாசகர்த்தா மறந்து விட்டாரா? அல்லது அறியாரா, அல்லது வேண்டுமென்றே பேசுகிறாரா, என்பது நமக்கு விளங்கவில்லை. ஆங்காங்கு பார்ப்பனரல்லாத வாலிபர் மகா நாடு கூட்டி இத்தீர்மானங்களை அமுலுக்கு கொண்டு வர ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. பார்ப்பன புரோகிதம் பகிஷ்காரம் செய்யப்பட்டு வருகின்றது. கோவில்களில் பார்ப்பனர்களை பகிஷ்கரிக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இதன் பலனாய் கோர்ட்டுகளில் பல விவகாரங்கள் நடந்து வருகின்றன. தாழ்த்தப்பட்ட வகுப்பாரை நீக்கி வைத்த பள்ளிக்கூடங்களில் அவர்களை சேர்க்க ஏற்பாடுகள் செய்து சில அனுகூலமாய் இருக்கின்றன. சில இன்னமும் முடிவு ஆகாமல் விஷயம் பாக்கியிலிருக்கின்றன. ஸ்தல ஸ்தாபனங்களில் யாவர்க்கும் சம உரிமை கிடைக்கத்தக்க வண்ணம் தேர்தல்கள் வரும்போதெல்லாம் இவ்வபிப்பிராயம் உடையவர்களையே தெரிந்து எடுக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அநேக விஷயங்கள் சென்னை சட்ட சபை மூலமாகவும் இந்திய சட்ட சபை மூலமாகவும் செய்யப்பட வேண்டியிருப்பதால் அடுத்த சட்ட சபைத்தேர்தலில் இந்த அபிப்பிராயத்திற்கு ஒத்தவர்களையே அனுப்பவேண்டும் என்று இப்பொழுதிருந்தே ஜனங்களுக்கு படும்படி பிரசாரம் செய்து வரப்படுகின்றனது. இம் முயற்சிக்கு எதிரிகளான பார்ப்பனர்களின் ஆதிக்கம் எங்கெங்கு குறைக்கப்பட வேண்டுமோ அதற்கு தகுந்த வேலைகள் ஆங்காங்கு நடைபெற்று வருகின்றன. பார்ப்பனர்களுக்கு அனுகூலமாய் இருந்து கொண்டு நமது முயற்சிகளுக்கு யார் யார் விரோதிகளாய் இருக்கின்றார்களோ அவர்களை வெளியாக்கி அவர்களுக்கு ஜனங்களிடத்தில் உள்ள தப்பான செல்வாக்கை குறைத்து நம்முடன் ஜனங்களையும் அவர்களையும் சேர்த்துக்கொள்வதற்காக வேலைகள் செய்து வரப்படுகின்றன. இனியும் என்ன என்ன காரியங்கள் செய்யவேண்டு மென அவ்வியாசகர்த்தா கோருகின்றாரோ அவைகள் யாவும் தானே நடைபெறுவதை அன்னார் உணரவேண்டும். எனவே இவைகள் அனைத்தையும் கவனியாமல் ஜஸ்டிஸ் கட்சியும் கக்ஷிப் பிரசாரத்தில் இறங்கியிருப்பதாக கருதக்கூடிய விஷயங்களையும் எழுதுவதுபொது நன்மை என்று கருத முடியாமைக்கு வருந்துகின்றோம்என்று ஒரு நிருபர் 'திராவிடன்' பத்திரிகையில் எழுதுகிறார்.




நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழநி சித்த வைத்திய சங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்த மருந்துகள்.

பழனி. சி. எம். சாமி **மகாவீரிய தங்கபஸ்பம்**

பச்சிலை மூலிகையினாலேயே நீற்றப்பட்டது. பெரியஹானின் முறை. அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாக்கும் ,இல்வாழ்வில் அதியற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, நீரழிவு, பவுத்திரம், மூலம் க்ஷயம், இருமல் கபக்கட்டு, குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும். 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24 நாளைக்கு ரூ. 10.

நற்சாட்சி:—தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாது புஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையைஎழுதமுடியாது இன்னும் மேற்படி தங்கபஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. எம். வரதராஜப் பெருமாள்சாமி கவிராயர் பொள்ளாச்சி.

**குருஅப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு**

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேகவெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும், தேக புஷ்டியையும், தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தளுக்கற்றது 24 நாள் புட்டி 1-க்கு ரூ, 15. 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30.

நற்சாட்சி —நான் சிங்கப்பூரில் நீரழிவினால் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது தங்களுடைய குருஅப்ரேக் செந்தூரத்தை அனுபானத்துடன் சாப்பிட்டதில் என் வியாதி பூராவும் சொஸ்தமாயிற்று இது நீரழிவு வியாதிக்கு மிக உயர்ந்த மருந்தாய்தெரிகிறது. எனது சிநேகிதர் ஒருவருக்கு ஒரு புட்டி குருஅப்ரேக் செந்தூரமும் அனுபானமும் வி. பி. யில் அனுப்பகோருகிறேன் கா. முகம்மது அப்துல்காதர் காரைக்கால். 21—12—26.

**குருதாளகபஸ்பம்-இருமலுக்கு**

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி, 9-வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூபா 16.

நற்சாட்சி:— தங்கள் குருதாளகபஸ்பம் ஒரு மண்டலம் சாப்பிட்டதில் இருமல், ரத்த வாந்தி இளைப்புஇவைகள்குணமாயிருக்கிறது ஆர். கந்தையா நேட்டிவ் டாக்டர், பாயிண்டு பீட்ரோ சிலோன் 18—9—25.

எல்லா மருந்துகளுக்கும் வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்

**சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்**

**C. மலையப்பசாமி.** நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:—முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத் தெரு ஜி. டி. சென்னை


நாடார் மகாஜன சம்கம், மதுரை.

நமது சங்கம் கௌன்சில்மீட்டிங் 1928ஹ ஜனவரிம் 16ல (பிரபவ தையீ 3ல) திங்கட்கிழமை மாலை 4-மணிக்கு சங்கம் ஆபீசில் நடைபெறும்.

ஆலோசனைக்கு வரும் விஷயம் முக்கியமானதாகயிருப்பதால் தாங்கள் தவறாது விஜயஞ்செய்யுமபடி கேட்டுக்கொள்ளுகிறோம.

காரியதரிசிகள்.

ஈரோட்டில்

## நகை அடமானக் கடன்.

ஈரோடு டவுன் மெக்கிரிகர் வீதி என்னும் ஆஸ்பத்திரி வீதியில் கோயமுத்தூர் டவுன் பாங்கியின் கிளை பாங்கி (பிரான்சு) ஒன்று 4—12—27ல முதல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இபபாங்கியில் ஒவ்வொரு நபருக்கும் 5 ரூபாய் முதல் 10000 ரூபாய் வரையில் நகை ஈட்டின் பேரிலும் சரக்கு ஈட்டின் பேரிலும் குறைந்த வட்டிக்கு அதாவது மீ 1-க்கு 100-க்கு 12 ஆணா வட்டிக்குக் கடன் கொடுக்கப்படும். சனிக்கிழமையும் சர்க்கார் தனி லீவு நாட்களும் நீங்கலாக மற்ற நாட்களில் காலை 8-30 முதல் 11-30 வரையிலும் மாலை 1-30 முதல் 5-30 வரையிலும் பாங்கியில் வரவு சிலவு செய்யப்படும். மற்ற விபரங்கள் பாங்கியில் தெரிந்து கொள்ளலாம்.

மு. அப்பய்ய கவுண்டர்,
காரிய தரிசி,
ஈரோடு கிளை.

## அருப்புக்கோட்டை பிராமண அர்ச்சகரும் பிராமணரல்லாத பக்தர்களும்.

7—1—28 ஆகிய சனிக்கிழமை திருவாதிரை யன்று இவ்வூரிலுள்ள சொக்கநாதர் ஆலயத்துக்கு பக்த கோடிகள் அதிகாலையில் ஸ்நானம் செய்து விட்டு சுவாமி தரிசனத்திற்காகச் சென்றார்கள். சுவாமிக்கு அபிஷேகத்துக்காக சிலர் கையில் தேங்காய் பழத்துடன் ஆலயம் செல்வதும் ஏழைகளாக இருப்பவர்கள் வெறும் கற்பூரத்துடன் செல்வதும் இன்னும் சிலர் வெறும் தரிசனம்மாத்திரம் செய்யச் செல்வதும் வழக்கம். வருடா வருடம் திருவாதிரையன்று இவ்விதம் நடப்பது சகஜமாக இருந்து வருகிறது. 7—1—28ல் பிராமணரல்லாத பக்தர்கள் தேங்காய் பழத்துடன் சென்று நடராஜர் சந்நிதியில் பிராமணரல்லாதாருக்கு என ஏற்பட்டிருக்கும் இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். அப்பொழுது கோவிலில் கூட்டமும் ஏராளமாக இருந்தது. மேலே குறிப்பிட்ட பக்தர்கள் ஆலயம் சேர்ந்தவுடன் கோவில் அர்ச்சகர், அவர்களை அணுகி தேங்காய் பழங்களையும் ஒரு தேங்காய் உடைக்க அரையணா வீதம் ஏற்பட்ட தக்ஷிணையையும் தன்னிடம் கொடுக்கும்படி கேட்டார். "என்னய்யா காய்க்கு அரையணா வீதம் கேட்கிறீர்களே, காயின் விலை முக்காலணா பத்து பைசாவாக இருக்கிறது. உடைகூலி அரையணா கேட்கிறீர்களே! இது நியாயமா! இப்பஞ்ச காலத்தில் தேங்காய் பழம் வாங்குவதே கஷ்டமாக இருக்கிறது, சுவாமி கோவிலுக்கும் குழந்தைகள் உள்ள இடத்திற்கும் வெறும் கையாகப் போகக்கூடாது என்னும் ஆன்றோர் வாக்கை அனுசரித்து காய் பழம் வாங்கிக்கொண்டுவர, நீங்கள் இப்படி பணம் கேட்கிறீர்களே. அப்படிக் கொடுக்க எங்களால்முடியாதய்யா" என்று சொல்லவே மேற்படி அர்ச்சகர் தான் காய்களை உடைக்க முடியாதென்றுசொல்லி விட்டார்.

ஆகவே மேற்படி பக்தர்கள் சற்று திகைத்திருந்து பக்தி மேலீட்டினால் தெய்வம் விட்டவழி விடட்டும் என நினைத்து தாங்கள் கொண்டு சென்றிருந்த காய்களை தாங்களே உடைத்துவைத்து கற்பூர ஆராதனையும் பண்ணினார்கள். இதைப் பார்த்துக்கொண்டிருந்த மேற்படி அர்ச்சகர் தன்னுடைய குடி முழுகிப்போனதாக எண்ணி, கண்டபடி சத்தமிட்டு "கோவில் போச்சு, சுவாமி போச்சு, காலங்கெட்டுது, மேல் கீழ் இல்லை" என்று கதறினார். அல்லாமலும "யாரையா உங்களை இப்படி செய்யச்சொன்னார்கள். பாருங்கள் உங்களை விட்டேனா" என்று சொன்னார். உடனே காய் உடைத்த பக்தர்கள்" விடாமல் பிடித்துக் கொள்ள வேண்டிய காரியம் இதில் என்னய்யா இருக்கிறது? இதில் வரம்பு மிஞ்சி நாம் ஒரு காரியமும் செய்யவில்லையே. நமக்கென குறிப்பிடப்பட்டிருக்கும் எதாஸ்தானத்திலிருந்து நாம் காய் உடைக்கக் கூடாதென ஒரு வித கட்டுப்பாடும் இல்லையே. அப்படியிருக்க நீங்கள் ஏனய்யா இவ்வளவு ஆத்திரப்படவேண்டும்" என சமாதானம் சொல்லிவிட்டு தங்கள் தங்கள் வீடுகளுக்குப் போய்விட்டனர்.

பின் கோவில் அர்ச்சகரும் கோவில் ரிஸீவராக இருக்கப்பட்ட ஒரு பார்ப்பனரும். இன்னும் இழிதொழில் செய்து பிழைக்கும் சில சில பிராமணரல்லாத முடத்தெங்குகளும் கூடி மேற்படி பக்தர்களை எப்படியும் அடக்கிவிட வேண்டும் என்னும் கெட்ட எண்ணத்துடன் ஆலோசித்தார்கள் போலும். ஆனால் உண்மையாக நடந்த வரலாற்றைக் கவனித்தால் மேற்படி பக்தர்களை ஒன்றும் செய்ய முடியாதெனத் தெரிந்து கீழ்வருமாறு ஒரு ஸ்ருஷ்டியை கேஸ் உண்டுபண்ணி ஸ்தல சப் மாஜிஸ்ட்ரேட் அவர்களிடம் தாக்கல்பண்ணப் போவதாகவும் கேள்வி.

அதாவது:— மேற்படி பக்தர்கள் கர்ப்ப கிருகத்துக்குள் ஆக்ரமித்துச் சென்று தேங்காய் உடைத்து சுவாமிக்குத் தாங்களே மாலை சாற்றி கற்பூர தீபங்காட்டி சுவாமியை அசுசிப்படுத்தி விட்டார்களென்றும், அதனால் கும்பாபிஷேகம்முதலியவை நடத்தாமல் இனிமேல் மற்ற கிரியைகள் நடத்த முடியாதென்றும், ஆகையால் ஷை குற்றத்திற்காக ஷை பக்தர்களை தக்கபடி சிட்சிக்க வேண்டுமென்றும் பிராது கொடுக்கப் போகிறார்களாம். கடவுளின் சன்னிதானத்திலிருந்து அவருக்குத் தொண்டூழியம் பண்ணவும் ஆலயத்தை புனித மாக்கவும் ஏற்படுத்தப் பட்டவர்களே இப்படிப்பட்ட பொய்யும் புரட்டும் சொல்ல ஆரம்பித்தால் பின் அக்கோவிலில் அருள் எவ்வளவு நிறைந்திருக்கும் என்ற கேள்வி பிறக்கிறது.

இனி ஒரு முக்கிய பிரச்சினையைப்பற்றி இங்கு குறிப்பிட்டு தீரவேண்டி இருக்கிறது. அதாவது சிலர் "கோவிலில் பட்டர் ஒருவரை வைத்துக்கொண்டு நாமாகக்காய் உடைத்துக் கொள்வதென்றால் என்ன அர்த்தம்" என்கிறார்கள்.

கோவிலில் நித்திய பூஜை நடத்தி வருவதற்காகவே பட்டர்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு கோவில் சொத்திலிருந்து சம்பளமோ, மானியமோ, கொடுக்கப் பட்டு வருகிறது. அல்லாமலும் தளிகைச் சாதம், புளியோதரை, தோசை முதலியவைகளும் ஏராளமாகக் கிடைக்கிறது. இதுவே அவர்களுடைய சேவைக்கு போதுமான கைமாறு. ஆனால் தேங்காய் உடைக்கும் வரும்படி அனுமத்து மேல் மூட்டை. உடைப்பதற்காக கூலி இஷ்டமுள்ளவர்கள் பணக்காரர்கள் கொடுத்து உடைக்கலாம். அதைத்தடுப்பார் யாருமில்லை. இஷ்டமில்லாதாரைக் கூலி கொடுத்துத் தான் உடைக்க வேண்டுமென்பதை எந்தச் சட்டம் கட்டுப்படுத்தும்?

ரயில்வே ஸ்டேஷனில் சிலர், சிறு பெட்டியையும் மூட்டைகளையும் தூக்கிச் செல்ல போர்ட்டர்களுக்கு ஒரு அணா இரண்டு அணா கூலி கொடுக்கிறார்கள். ஆனால் இஷ்டமில்லாதவர்களிடம் வந்து "நாம் ரயில்வே டிபார்ட்மெண்டாரால்ஏற்படுத்தப்பட்ட கூலிகளானதால் நாங்கள் தான் மூட்டையைத் தூக்கிச்செல்வோம். அதற்குரிய கூலியைக் கொடுக்கவேண்டும்" என்றால் யார் கொடுப்பார்கள்.

மற்ற உலக மெல்லாம் இப்படியிருக்க, பிராமண உலகம் மாத்திரம் நூதனமுறையில் (கட்டாய முறையில்) போய்க்கொண்டிருக்கின்றது. பிராமணமல்லாதாருக்கு எப்போது விடியுமோ ஈசனுக்கே வெளிச்சம்.

கா. கண்டோன்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மையில்தான் செட்டியார் சூத்திருமல்ல பிராமணருமல்ல என்று சொல்ல வேண்டும். அப்போது திரிசங்கு சொர்க்கமாய்த் தொங்கவேண்டிய நிலையில் இருக்கும்போது இரண்டுக்கும்மத்தியில் "இடையில்" பிறந்தார் போலும்.

பிராமணர்களுக்கு எப்படியாவது அதற்குத் தகுந்தபடி ஆட்கள் கிடைத்து விடுகின்றன அந்த விஷயத்தில் அவர்களை மெச்சத்தான் வேண்டும். ஆகிலும் எதற்கும் கிடைப்பது அவ்வளவு பெரிதல்ல. "கெட்டுப் போகாதே" என்று ஒருவனுக்கு யாராவது புத்தி சொன்னால் 'இன்னமும் கெடுவேன் போடு பந்தயம்' என்ற மாதிரி சுயமரியாதையையும் இழக்க நேரிடுகிறவர்களைப் பற்றி யார்தான் இரங்காமல் இருக்க முடியும்? கடைசியாய் ஒரு வார்த்தை. "குடி அரசை" ஒழிக்க நேரமில்லாமல் செய்து விட்டது வருத்தத்தக்கது.

க. வா. வெங்கிடாசலம் பிள்ளை.

## மதுரை தேவஸ்தான கமிட்டி கூட்டம்.


ஸ்ரீவில்லிபுத்தூர் நகரபரிபாலன சபைத் தலைவர் சைவத் திருவாளர் இரா. கு. நல்ல குற்றாலம் பிள்ளையவர்களையும், திருவாளர் சி. கரு. சித. சிந்தாமணி செட்டியாரவர்களையும், ஸ்ரீ நாச்சியார் தேவஸ்தானம் தர்மகர்த்தர்களாகவும், சைவத்திருவாளர் சிவசங்கரம் பிள்ளையவர்களையும், ஷை செட்டியாரவர்களையும் மடவார் விளாகம் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தான தர்மகர்த்தாக்களாகவும் மதுரையில் 8—1—28ல் நடைபெற்ற தேவஸ்தான கமிட்டி மீட்டிங்கில் நியமனம் செய்திருப்பதுபற்றி இந்நகர் வாசிகள் மிகுந்த மகிழ்ச்சி யடைகிறார்கள்.

ஆர். எஸ். செல்லையப்ப முதலியார்.

இறந்தவர்களை திருப்தி செய்ய
பார்ப்பனர் வயிற்றை
நிரப்பாதே.

'டிடக்டாவ்'
அல்லது
துப்பு இரகசியம் அறியும் கருவி.

இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன்மூலமாய்ப் பார்க்கலாம்.




உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் ஷை கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி. மகாரஸ்,

10-வருஷ உத்தரவாதம்.



விலை ரூ. 20 முதல் ரூ. 100 வரை

மிக்க உயர்தரமானது. நீடித்து உழைக்கக் கூடிய ஸ்வர சுத்தம், சாரவை, கமக்கம், இனிமையுள்ள நாதம் பொருந்திய ஆர்மோனியங்களும், மற்றுமுள்ள சங்கீதக் கருவிகளும் உத்திரவாதத்துடன் குறைந்த விலைக்கு நம்மிடம் கிடைக்கும். முழு விவரங்களடங்கிய கேட்லாக் வேண்டுமானால் அனுப்பப்படும்.

பழனி கம்பெனி, கல்கத்தா ஆர்மோனியம் ஏஜென்சி 411, தங்கசாலை வீதி, சென்னை.

# விளம்பரம்.

கோயமுத்தூர் நகர சங்கம் 18-11-1927 ல் கூடிய கூட்டத்திலே பின் வரும் தீர்மானத்தை நிறைவேற்றின, தாக1920வருடத்திய சென்னை டவுன்பிளான்னிங் சட்டம் 10 வது பிரிவு(3)உட்பிரிவின்படி இதனால் அறிவிக்கப்படுகிறது

18—1—27 தேதியைக்கொண்ட நெம்பர் 484 தீர்மானம்— குறித்தகாலத்திலே 1, 2, 4, திட்டங்களைப்பற்றி ஆட்சேபனையாவது அல்லது ஆலோசனையாவது கிடைக்கப் பெறாததாலும் கட்டிடமுள்ள இடங்களை 1, 2 திட்டங்களில் சேர்த்துக்கொள்ளலாமென்று சர்க்கார்தங்கள் 11—5—26 தேதியைக்கொண்ட நெ. 831 P, H. Mis. ஆர்டரின் சாங்ஷன் செய்திருப்பதாலும் 1, 2, 4 நம்பர் திட்டங்களை எவ்வித மாறுதலுமின்றி அமைக்க அல்லது ஒப்புக்கொள்ள இதனால் கடைசியாய்த் தீர்மானிக்கப்படுகிறது.

(ஒப்பம்) சி. எஸ். இரத்தின சபாபதி.
சேர்மன் C. M. C,

## திட்டங்களின் எல்லைகள் நெ. 1. ரெட் பீல்ட் ஸ்கீம்.

வட எல்லை.— அவநாசி ரோட் எஸ். எப். நெ. 221 வடமேற்கு மூலையிலிருந்து எஸ். எப். நெ 198 வட கிழக்கு மூலைவரையில்,

கீழ் எல்லை— புலியகுளம் ரோட் எஸ். எப் நெ 198 வடகீழ் எல்லையிலிருந்து எஸ். எல். நெ 263 வடகோடி வரையில்.

தென் எல்லை,— புலியகுளம் ரோட் எஸ். எல். நெ. 263 வடகோடி மூலையிலிருந்து டி எஸ் நெ, 642 தென் மேற்கு மூலை வரையில்-

மேற்கு எல்லை.— அலக்சாண்டர் ரோட்டில் டி எஸ் நெ. 642 தென் மேற்கு மூலையிலிருந்து டி எஸ் நெ. 643 வடமேற்கு மூலை வரையில டி எஸ நெ 638 தென் மேற்கு மூலையிலிருந்து டி எஸ நெ, 635 தென் மேற்கு மூலை வரையில் ரேஸ கோர்ஸ ரோட் டி எஸ் நெ. 635, 634 உடையதும் எஸ் எப் நெ 212 213 உடையதும் மேற்கு எல்லை பிறகு எஸ் எப் நெ 221 ன் தெற்கும் மேற்கும்.

இந்த இடம் 317 ஏக்கர் விஸ்தீரணமுள்ளது.

## நெ. 2. இராமநாதபுரம் திட்டம்.

வட எல்லை— எஸ் எப் நெ 13 தென் மேற்கு மூலையிலிருந்து எஸ் எவ் நெ 263 வடகோடி மூலை வரையில் புலியகுளம் ரோட்டின் வடஎல்லை எஸ் எவ் நெ 447 எ தென் மேற்கு மூலையிலிருந்து எஸ் எவ் நெ 515 தென் கிழக்கு மூலைவரையில் சவுரி பாளையத்துக்குப் போகிற இட்டேரியின் வட எல்லை.

கிழக்கு எல்லை— எஸ் எப் நெ 515 தென் கிழக்கு எல்லையிலிருந்து எஸ் எவ் நெ 174 தென் கிழக்கு மூலைவரையில் செல்லுகிற முனிசிபல் எல்லை.

தென் எல்லை— எஸ் எப் நெ 174 தென் கிழக்கு மூலையிலிருந்து டி எஸ் நெ 675 தென் கிழக்கு மூலை வரையில் திருச்சினுப்பள்ளி அல்லது ராமநாதபுரம் ரோட்,

மேற்கு எல்லை... எஸ் எவ் நெ 424 மேற்கு எல்லையிலிருந்து எஸ் எவ் நெ 259 வடமேற்கு எல்லை வரையில் டி எஸ் நெ 675 ன் கிழக்கு எல்லை.

இந்த இடம் 268 ஏக்கர் விஸ்தீரணமுள்ளது,

## நெ. 4. திட்டம். நெ. 6—7...19 வார்டுகளில்.

வட எல்லை— சத்தியமங்கலம் ரோட்டிலிருந்து மேட்டுப்பாளையம் ரோட் வரையில் செல்லுகிற குறுக்குப் பாதை கௌலிபிரௌன் ரோட்டுக்கு எதிர்ப்புறம் வரையில் மேட்டுப்பாளையம் ரோட்டின் கீழ் எல்லை தடாகம் ரோட் சந்திவரையில் கௌலி பிரௌன் ரோட்,

கிழக்கு எல்லை— சத்தியமங்கலம் ரோட்டுக்கு கிழக்கு எஸ் எவ் நெ 70 வட எல்லை எஸ் எவ் நெ 71 ன் கிழக்கும் தெற்கும் பிராமண எக்ஸ் டென்ஷனுக்கு மேற்கு ஆர் எஸ் என் 97 ன் கிழக்கும் தெற்கும் ஆர் எஸ் நெ 93 ன் கிழக்கும் தெற்கும் டி எஸ் நெ 10 வடக்கிலும் கிழக்கிலுமிருந்து அதன் கிழக்கு மூலைவரையில்.

தென் எல்லை— டி எஸ் நெ 10 ன் தெற்கு ஆர் எஸ் எப் நெ 95/1 லுள்ள காலீஸ்வரா் ஆலை காம்பவுண்ட் சுவரின் கிழக்கும் வடக்கும் டி எஸ் நெ 1-எ 1-2 ன் கிழக்கும் வடக்கும் பிறகு ஆர் எஸ் நெ 263-க்கு தெற்கே ரயில் பாதையைக்கடந்து சென்று காட்டன்ஸ் பின்னில் வீவிங் கம்பெனியில் காம்பவுண்ட் வட கிழக்கு மூலைக்கு எதிரான இடம் வரையில் டி எஸ் நெ 32 பி யின் கிழக்கு (ரயில்பாதை) காட்டன் ஸ்பின்னிங் வீவிங்கம்பெனி காம்பவுண்ட் சுவரின் வட பக்கம் டி எஸ் நெ 22 ன் தெற்கும் கிழக்கும் டி எஸ் நெ 16-17 க்கு தெற்கே மேட்டுப்பாளையம் ரோட் வரையில் மேட்டுப்பாளையம் ரோட்டுக்கு மேற்கிலிருந்து வெடர்பர்ன் தெரு நெ 4 வரையில் வெடர் பர்ன்தெரு நெ 4 வடக்கிலிருந்து டி எஸ் நெ 2191 கிழக்கு பக்கம் வரையில் டி எஸ் நெ 2191—2188 ன் கிழக்கும் தெற்கும் டி எஸ் நெ 2178 2—2279 1 க்கு தெற்கே பிறகு மேற்கே தாடகம் ரோட்டுக்குப் போகிற வரையில்.

மேற்கு எல்லை:— தாடகம் ரோட் இந்த இடம் 690 ஏக்கர் விஸ்தீரணமுள்ளது.

ஒப்பம். சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார், சேர்மன் C, M. C.

(3-ம் பக்கத் தொடர்ச்சி).

குப் பிழைப்பாக உபயோகித்து அதனாலே தங்களை மேலாக்கிக் கல்வி கற்று உத்தியோக மடைந்து, கங்கைத்தண்ணீரைவிட ஸ்பென்சர் சோடாவே குடிக்கவேண்டு மென்கிற வரையிலும் வந்து வருணாசிரம தர்மத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருப்பதில் தான் ஆச்சரியமிருக்கிறது. தாசி வீட்டில் தினமும் சதிர் சங்கீதப் பாட்டிற்கும் வெற்றிலை பாக்குத் தட்டிற்கும், விரித்த பாய்க்கும் ஒய்வில்லை. புஷ்ப சந்தன வாசனைகளும் அங்கு இருந்தே தீரவேண்டும். இவைகள் அவர்கள் தொழிலின் அங்கங்கள். அவர்களும் அவையனைத்தும் தேவனால் கொடுக்கப்பட்டதென்கின்றார்கள். பண்டிதர்களும் சுயராஜ்யக் கட்சித் தலைவர்களும் வாஸ்தவம் வாஸ்தவமே என்று சாட்சியும் சொல்லுகிறார்கள். பாப்பானின் நித்திய கர்மங்கள் ஜன சமூகங்களை ஏமாற்ற எவ்வளவு தூரம் சென்று பாப்பார சமூகங்களுக்கு இவ்வளவு இங்கிலீஷ் நாகரீகங்களைக்கொண்டு வந்தது என்பதை இப்பொழுது இங்கிலீஷ் நாகரீகப் பார்ப்பார்கள் மறந்திருப்பார்கள். 40, 50 வருடத்திற்கு முன் பாப்பாரக் குடும்பங்கள் இருந்த நிலைமையையும் இப்பொழுது இருக்கும் நிலையையும் கனம் அய்யங்கார் நினைத்துப் பார்த்தால் கிரிகைகளினால் ஜனசமூகங்களை ஏமாற்றின ரகசியம் விளங்கும். கிரிகைகளும் சடங்குகளும் லாபத்திற்கு ஏற்படுத்திக்கொண்டதினாலேயே ஒரு சாஸ்திரத்தில் இருப்பதுபோல் மற்றொன்றிலில்லை. ஒரு புரோகிதனுக்குத் தெரிந்த வழி இன்னொருவனுக்கு தெரியாது. சில கிரிகைகளுக்கு ஏடேயில்லை. "இது பூர்வபட்சம். இது வேதபாகம். இது மாத்துவாளுக்கு. அது வைஷ்ணவ சம்பிரதாயம். எதையும் சுமார்த்தான் ஒத்துக் கொள்ளுவார்கள். சைவர்கட்கெல்லாம் நேற்றே முடிந்து விட்டது. அவரவர்கள் இஷ்டம் போல் சௌகரியம் போல் வைத்துக்கொள்ளலாம். வேதம் இதைப்பற்றி அதிகம் வற்புறுத்தவில்லை. பண்ணினால் தோஷமில்லை. என்று மட்டும் சொல்லி யிருக்கிறது" என்று பலவாறு புரோகிதனும், சாஸ்திரியும் சொல்லி எதையோ செய்து பணம் பறித்துக் கொண்டுபோவதை நாம் அநுபோகத்தில் பார்க்கிறோம். இதற்கு சாட்சி எதற்காக. தேங்காய் உடைத்த பின் கற்பூரம் கொளுத்துவதா. கற்பூரம் கொளுத்தின பின் தேங்காய் உடைப்பதா என்பது புரோகிதர்களுக்கு இன்னும் சரியாகத் தெரியாது. ஒருவருக்கு ஒருவர் வித்தியாசமாகத்தான் சொல்லுவார்கள். குழந்தைகள், விளையாடும் பொம்மைக்குக் கல்யாணமேற்படுத்திப் படுக்கை வீட்டுச் சடங்குவரையிலும் செய்யும் புரோகிதக் குருக்களுடைய பண வரும்படியின் பணம் அலட்சியமா? பிராமண கர்ம தத்துவமா? சீதா ராமா ராமா சீதா என்று மாற்றி மாற்றிச் சொல்லி ஒரு கயிற்றில் முடிபோட்டோ காகிதத்திலெழுதியோ ஆயிரம், பத்தாயிரம், இலட்சம் எண் ஆனவுடன் அதற்கு கிரிகைச் சடங்குகள் செய்து பாப்பானுக்குத் தான தர்மம், தக்ஷணை, சாப்பாடு போடப்படும் கர்மத்தின் ரகசியமென்ன?. வைசியனாகப் பண்ணுவதற்கும், பாப்பானின் கர்மமும் தங்கள் கர்மமும் ஒன்றென பாப்பான் ஒத்துக் சொல்வதற்கும், தங்கள் ஆயுள்காலமெல்லாம் பாடுபட்டுத் தேடின பணத்தைப் பாப்பானுக்கே கொடுத்துச் சலித்தும் பாப்பாரின் மகாராட்டில் வைசியன் இல்லை எல்லாரும் சூத்திரர்கள்தான் என்று பாப்பானே சொன்னதைக் கேட்டு திடுக்கிட்டுப்போன செட்டியார்மார்கள் கூட்டத்திலேயே இவை அதிகம் நடக்கிறது. இதை பாப்பான் எதற்காக நடத்திவைக்கிறான் என்பது அய்யங்கார் அவர்கள் சிறிது ஆலோசிக்கட்டும்.

---


## மின்சார ரசம்.

### சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம்.

பத்தியமில்லை! மின்சார ரசம். — அநுபானமில்லை! மின்சார ரசம்.

இதற்கு இயற்கையாகவே ஒருவித மின்சார சக்தியுண்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம். மனிதன் தலைமுதல் கால் வரையில் வரும் எல்லா ரோகங்களுக்கும் தேவாமிருதம் போன்ற தென்பது ஜகத் பிரசித்தம். பலரின் அநுபவம். கைகண்ட மருந்து.

REGISTERED TRADE MARK — MINSARA RASAM

எச்சரிக்கை:- ரிஜிஸ்டரான டிரேட்மார்க்

துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். டாக்டர்களை தேட வேண்டியதில்லை. உங்கள் காலத்தையும் சிரமத்தையும், பணத்தையும் மிச்சப்படுத்தும். ஆயிரக்கணக்கான நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றது.

உண்மை யறிய ஒரே முறை பரீக்ஷியுங்கள்! உங்களை ஆச்சரியமுறச் செய்யும்! — கேட்லாக் இனாம். இன்றைக்கே எழுதுங்கள்.

ஒரு புட்டியின் விலை ரூ. 2. தபாற் செலவு வேறு.

விலாசம்:- **மின்சார ரசம் கம்பெனி Ltd., சேலம்.**

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள் } மேசர்ஸ். T. N. சொக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ். இங்கிலீஷ் மருந்து ஷாப், வடக்குசித்திரை வீதி, மதுரை.



## திருப்பூர் கதர் பனியன்கள்.

குளிர்காலத்துக்குத் தகுந்த உபயோகமானவைகள்.

நம்மிடம் உறுதியானதும் நீடித்து உழைக்கக்கூடியதுமான சுத்த கதர் பனியன்கள் கிடைக்கும்.

விலை டஜன் 1-க்கு

28 இஞ்சு 7-14-0 30 இஞ்சு 8-4-0, 32 இஞ்சு 8-10-0 34 இஞ்சு 9-0-0.

உடனே வேண்டிய பனியன்களுக்கு ஆர்டர் செய்யுங்கள். இன்னும் மற்ற எல்லா விதமானகதர்ஜவுளிதினுசுகளும் கிடைக்கும். விலை விபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

M. V. கருப்பண்ணசெட்டியார், திருப்பூர், (தென் இந்தியா)



## அறிக்கை.

ஜவுளி ஜரிகை வியாபாரிகளுக்கு

எங்களிடம் பிரான்சி 8 லடி ரங்குள்ள ஜரிகை மார்க்குகளும் பாம்பே குவால்டி 8 லடி ரங்கு சரிகை மார்க்குகளும் சூரத்பட்டு கயிர்கட்டின அதிக ரங்குள்ள கம்பி ரங்குகள் மார்க்குகள் தயாரிலிருக்கிறது. இத்துடன் உள்ளூரில் தயாராகும்படியான ஜவுளிதினுசுகளில் வெள்ளை 100 நெம்பர் முதல் 200 நெம்பர் வரை நூல்களில் 5, 6 முழம் சதுரம் ஜரிகை ருமால்களும் ஷை நெம்பர்களில் 2-½ முழம் அகலம் 6 முழம் பலவிதமான நவீன கொடி பேட் ரகங்களில் ஜரிகை துப்டாக்களும் தனிப்பட்டும், பட்டும் நூலும் கலந்த பலவிதமான இங்கிலீஸ் பேன்ஸி சிகப்பு ரோஸ் கலர்களில் 2-½ அகலம் 18 முழம் நீளம் பல விதமான பேட்களையும் ஜரிகை முந்தானியுள்ள சேலை ரகங்களும் ஷை கண்ட ரகங்களில் 6 முழம் ரவிக்கை தினுசுகளும் பேட்டா தினுசுகளும தயாரிலிருப்பதால் தேவையுள்ளவர்கள் எழுதினால் விலை ஜாப்தா அனுப்பப்படும்.

சி. லிங்கி செட்டி, S. வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி & ஜரிகை வியாபாரம், கோயமுத்தூர்.

## மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd

ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷை கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பக்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.



## சிருங்காரமான போட்டோ படங்கள்.

பாரிஸ் மாதர்கள், ஐரோப்பிய மாதர்கள் முதலோரின் அழகையும், அவர்களின் விநோத நடை உடை பாவனைகளையும் விளக்கும் போட்டோ கார்டுகள் படுக்கையறையைச் சிறப்பிக்க ஒவ்வொரு வீட்டிலும் முக்கியமானவை. படங்களைப் பார்க்கப்பார்க்கப் பேரின்பம். உயர்ந்த கலர் கிளேஸ் படங்கள். பல ரகங்கள் கொண்ட டஜன் கார்டுகள் விலை ரூ. 1-15-0.

ப்ரேஞ்சு வாசனைக் கார்டுகள்.

வாசனைப் புட்டி வேண்டுமென்ற அவசியமில்லை. எப்பொழுதும் உயர்ந்த வாசனையோடு கூடிய ஷை கார்டுகள் டஜன் ரூ. 1 தான்.

ஸ்ரீ: கிருஷ்ண ஏஜன்சி,
26, வெள்ளாளத் தெரு, புரசபாக்கம், மதராஸ்.



## கட்டி வெள்ளி நகைகள்

### இனாம்! 1928-வருஷ காலண்டர் இனாம்!
### துப்புரவான வேலைகள்.

எங்கள் சொந்த பார்வையில் தயார் செய்யப்படும் சொக்க வெள்ளி தண்டை, கொலுசு செயின், அரணாக்கொடி, கெங்காதரக் கொடி, பீலி வகையறாக்களும், இமிடேசன் சிகப்பு கம்மல், கடுக்கன், தோடு வகையறாக்களும், அசல்பட்டு ஜரிகை பேட்டு வேலைமானம் பட்டு லேஞ்சுகளும், வெண்பட்டுவகையறாக்களும் இமிடேசன் பட்டு சேலை, ரவிக்கை, டாவினி 1, 2, 3 ரெ. லேஞ்சுகளும், இன்னும் பலவித தினுசுகளும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு விலைகளை குறைத்து இருக்கிறோம். வேண்டியதற்கு ஆர்டர் எழுதினால் உடனுக்குடன் வி. பி. யில் அனுப்பி வைக்கிறோம். விபரம் வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும்


விலாசம்,
தொ. வெ. சென்னி செட்டி & சன்ஸ்
சுரூப் & ஜவுளி வியாபாரம்
குகை, சேலம். (S. India)

தந்தி விலாசம் "சராப்" சேலம்



## டேபில் டைம்பீஸ் இனாம்!!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில் வைக்கக்கூடியதொரு அழகான டேபில் டயம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுகளின் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி மதராஸ்.



## விளம்பரம்.

### வியாபாரிகளே!

உங்களுடைய வியாபாரம் செழிப்பாக நடக்க வேண்டுமா? அப்படியானால் நீங்கள் முக்கியமான பத்திரிகைகளில் விளம்பரம் செய்தல்வேண்டும். உங்களுடைய விளம்பரத்தை எங்களிடம் அனுப்புங்கள். நாங்கள் அதை எப்படி எழுதினால் ஜனங்களின் மனதைக் கவர்ச்சி செய்யுமோ அந்த வழியில் எழுதி அழகாகப் பிரசுரிப்போம் குறைந்த விகிதம் வேண்டுமானால் நீங்கள் எங்களுக்குத் தான் எழுத வேண்டும். வியாபாரத்திற் கழகு விளம்பரம் செய்வதே

வாஸ் அட்வர்டைஸிங் சர்விஸ்,
தபால் பெட்டி 119, மதராஸ்.



தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக் கொடுத்தும், இதைப்போன்ற அநேக புத்தகங்கள் பின்னால் பணம் பறிக்கும் பொருட்டு அநேகரால் தயார் செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும், விகாற்றதும், நற்சாட்சியும், ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும், சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிடமிருந்து உயர்ந்த நற்சாட்சிப் பத்திரம் வாங்கப் பட்டதுமான எமது ரிஜிஸ்டர்டு லேடி டிரேட்மார்க் போட்டுள்ள

## ஆங்கில ஆசான் (ஒன்பதாம் பதிப்பு)




வெளி வந்து சுமார் 2000 காப்பிகள் இரண்டு வாரங்களுக்குள் பறந்துபோய் விட்டன. உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இது ஒன்று தான். இது மாதர்களுக்கும் வியாபாரிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் மிகவும் முக்கியமானது. இப்பதிப்பில் மிகவும்சிரமப்பட்டு அனேகமாய் 3,000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்குப் போடப்பட்டிருக்கிறது. எங்கள் ஆங்கில ஆசானைப்போல் பலபோலிப் புத்தகங்கள் வெளிவந்துள்ளன. ஆங்கில ஆசான் என்ற பெயர் பார்த்தும் இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட்மார்க் இருக்கிறதா வென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள். உண்மையான ஆங்கில ஆசான் இதுதான்.

800 பக்கம் முழு காலிகோபயிண்டு விலை ரூபாய் 2 வி. பி. தபால் செலவு அணா 8

தி. இராஜகோபால் முதலியார், 302 தங்கசாலைத் தெரு, மதராஸ்

காலத்திற்கேற்ற நூல்! காதலர்கள் தேடும் நூல்!!

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

அழகான பயிண்டு. சுமார் 400-பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம். நேர்த்தியான அச்சு.

நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.

**இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.**

1. துறவிகளின் கதி யென்ன?
2. இல்வாழ்க்கை ஏன் சிறந்தது?
3. இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி?
4. இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும்பாடு.
5. பெண்ணின் பெருமை, பெண்கல்வி.
6. நாணம் எப்படி உண்டாயிற்று?
7. உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8. நாம் ஏன் உடைதரிக்கவேண்டும்?
9. நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன?
10. இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்?
11. ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன? உண்மையான கலியாணம் எது?
12. காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
13. சாந்தி முகூர்த்தத்தில் எப்படி வெற்றியடைவது?
14. மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
15. கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
16. தமக்குச்சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டுகொள்வது?
17. ஸ்திரீகளுக்கு எப்பெப்பொழுது காமம் உண்டாகிறது?
18. அவர்களிடத்தில் அமிர்தநிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?
19. பலஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
20. சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.
21. ருதுவாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
22. பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்கு காரணம். இதைப்போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
23. மனம் போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
24. கருவிலிருப்பது ஆணா பெண்ணா என்று எப்படி அறிந்து கொள்வது?
25. கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்து கொள்ளவேண்டிய முறைகள்.
26. கர்ப்பகாலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக்கூடிய வியாதிகள்.
27. அவைகளை போக்கடிக்கும் உபாயங்கள்.
28. முதல் மாதத்திலிருந்து கடைமாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
29. ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப்போக்கடிக்கும் விவரம்.
30. புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஏன் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது? இதைப் போக்கிக்கொள்ளுவதெப்படி?
31. அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத்தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ, புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்க முடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசு கொலை அநியாயம்.
32. ஒருவன் எத்தனை மாதரை மணம் புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்கவேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக் காப்பாற்றிக்கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனொருவர் பொறாமை கொள்ளாமலிருக்க வேண்டுமானால் அவன் எப்படி சாமார்த்தியமாய் நடந்து கொள்ளவேண்டும்.
33. தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா? தாசிகள் வீடுபோகும் நபர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சில வார்த்தைகள்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான போன்போன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

ஆகையால் நண்பர்களுக்கு நமது வேண்டுகோள் என்னவென்றால் இவ்விளம்பரத்தைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் "இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்னும் எமது புதிய நூலின் ஒரு பிரதியை வாங்குவாராக. குடும்பஸ்தர் ஒவ்வொருவர் வீட்டிலும் இதன் பிரதியொன்று இருந்தே தீரவேண்டும். உம்முடைய நண்பர்களிடத்தும் இந்நூலைப் பரப்பி நாட்டிற்கு நன்மைசெய்யுங்கள். இந்நூல் லாபங்கருதி அச்சிட்ட புத்தகமல்ல.

"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்ற புத்தகம் ஒவ்வொரு ஊரிலுமுள்ள புத்தக வியாபாரியிடமும் கிடைக்கும் அல்லது எங்கள் விலாசத்திற்கு உடனே எழுதவும்.

விலை ரூபாய் 2—0—0.

## வாஸன் புஸ்தகசாலை,

**தபாற்பெட்டி நெ. 119**

**97. அன்னுபிள்ளை தெரு, ஜி. டி. மதராஸ்.**


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.